தனிப்பிரதி விலை | உள் நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

ரிஜிஸ்டர் நெ. 2041

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...		ரூ 3—0
6 மாத சந்தா ,,	—	,, 1 12
வெளிநாட்டிற்கு ,,	—	,, 4—0

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5. | சென்னை, சுக்கில ஞு ஆனிமீ 3உ (16—6—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 6

"குடி அரசு" "ரிவோல்ட்"

பத்திரிகைகளின் காரியாலயம்

சென்னைக்கு வந்துவிட்டது.

16—6—29-ந்தேதி முதல் சென்னையினின்றும் வெளிவரும்

விலாசம்.—

மானேஜர்,
குடி அரசு காரியாலயம்,
14, மவுண்ட்ரோட், சென்னை.

மானேஜர்,
ரிவோல்ட் காரியாலயம்.
14, மவுண்ட்ரோட், சென்னை.

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை.

இனும் ! இனும் !!



பூனையில் ஓரீடியம் உள்ள 14 காரட் தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனு இனும். எங்கள் ரோக்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம்விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது.

உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு,

(4 எப்) மதராஸ்.

ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார் நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா ?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா

ரூ. 1—0—0

அயல் நாடுகளுக்கு முன் பணம்

ரூ. 1—4—0

மாதிரி காப்பி இனும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்,

டெலிபோன் 3311.

தந்தி விலாசம்:-விகடன் சென்னை.

(4-இ)

ஒட்டு பழச்செடிகள் ! புதிய விதைகள் !!

3 வருஷம் வயதுள்ள பல ஜாதி ஒட்டுமாஞ் செடிகளும், எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை, கொய்யா, பப்ளிமாஸ், குமட்டி மாதுளை முதலிய நட்டு செடிகளும் அநேக நிஜசு ரோஜா, குரோட்டன்ஸ், புஷ்பச் செடிகளும் இருக்கின்றன. சீமை காய்கறி புஷ்ப விதைகள் தனித்தனியே 24 நிஜசு செட் 1 க்கு ரூ. 2—8—0. மேற்படி 12 நிஜசு ரூ. 1—4—0. நாட்டுக் காய்கறி விதை 24 நிஜசு செட் 1 க்கு ரூ. 2—8—0. மேற்படி 12 நிஜசு ரூ. 1—4—0. படங்களுடன் காட்லாக் இனும்.

ஆர். சுந்தரேச முதலியார்,

சந்திரா தர்சரி, சேலம் ஜங்ஷன்

(8) தந்தி விலாசம்:— "சந்திரா"

கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், பெருகுவர்த்திகள், நிக்குச்சிகள், வார்னீஷ்கள், பிஸ்கத்துகள், பெ ன்ஸில்கள். பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எரோட்ஜேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0

உடனே எழுதுங்கள்.

வாவான் புஸ்தகசாலை,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஒரே மணி நேரத்தில்

ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,

(4-பி) தபால்பெட்டி 119, மதராஸ்.

குறைந்த சந்தா ! நிறைந்த விஷயம்!!

"ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலநண்பர்களுடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பேரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கோட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா ?	கிராமச் சீர்திருத்தங்களா ?
தத்துவ ஆராய்ச்சிகளா ?	சமூக இயல்களா ?
கைத்தொழில் விளக்கங்களா ?	வைத்திய விசேஷங்களா ?
வியாபார ரகசியங்களா ?	தேசீய தத்துவங்களா ?
விஞ்ஞான (Science) விநோதங்களா ?	சிறுகதைப் பகுதிகளா ?
	இன்னிசைப் பாட்டுக்களா ?

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3, 6 மாத சந்தா ரூ. 1-12-0.

பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூபா 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

ரூ. 2 - 14— 0 ரூ. 2 —14—0

நூதன கை தையல்

மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மெஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். பட்டின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2—14—0.

கனடியன் வாட்சு பீபிள்,

ஸோல் ஏஜண்ட்ஸ்,

(4-டி.) ஜார்ஜ் டவுன், மதராஸ்.

வருணாச்ரம தர்ம மகாநாடும் சைவ மகாநாடும்

(கைவல்லியம் எழுதுவது)

மதுரையில் வருணாச்ரம மகாநாடும், திருப்பாதிரிப்புலியூரில் சைவப் பெரியார் மகாநாடும் கூடிப் பல தீர்மானங்கள் செய்து பிரிந்ததைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு சபை பார்ப்பனனுடையது; ஒரு சபை தமிழனுடையது. இந்த இரண்டு சபைகளுடைய தீர்மானங்களின் நோக்கங்களைப்பற்றிச் சரியாகச் சிந்தித்து அநுஷ்டிக்கும் விவகாரங்களையும் கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. டி. ஆர். ராமச்சந்திர அய்யர் தலைமையில் வருணாச்ரம தர்ம மகாநாடு கூடிற்று. வருணாச்ரம தர்மந்தான் சர்வ பிராணிகளின் க்ஷேமத்திற்கும் மூல காரணம். அந்த தர்மத்தின்குறைவால்தான் நாட்டிற்கும் ஐக்கியத்திற்கும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனதால் அகண்ட காவேரி தீர்த்தத்தில் விச்வ வித்யாலய சர்வ கலாசாலை ஏற்படுத்தப் போகிறோம், அதற்கு எல்லாரும் பொருளுதவி செய்யுங்கள், நியமகர்மாவை அனுசரித்து அந்த கலாசாலையில் வேதாத்தியயனமும் வேத சாஸ்திரப் பயிற்சியும் கற்பிக்கப்படுமென்றும், அந்தப் பள்ளியில் எல்லா வருணத்தாரையும் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால், வேத சாஸ்திரங்கள் பிராமணப் பையன்களுக்குமட்டும் கற்பிக்கப்படும். மற்ற பையன்களுக்கு கலை சாஸ்திரங்கள் கற்றுக்கொடுக்கப்படும். ஆனதால் சனாதன தர்மிகளான யாவரும் சர்வ கலாசாலைக்கு திரவியம் திரட்டும் விஷயத்தை ஒரு தர்ம கைங்கிரியமாகக் கொண்டு ஆங்காங்குச் சென்று பொருள் சேகரிக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்து கமிட்டிகள் ஏற்படுத்தி பொருள் தேட வழியும் கற்பித்து சபைத்தலைவர் பள்ளி கட்ட இடமும் தேடப் புறப்பட்டு, அதற்கு வேண்டிய தந்திர மந்திரங்களும் நடந்து வருகின்றன. இது பார்ப்பனர் சபையின் தீர்மானம்.

சைவ மகாநாட்டிற்கு திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் தலைவர். சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஒப்புக்கொள்ளத் தக்கவோ அல்லவோ? என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக்கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களை சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்க வேண்டுமென்னும் முதல் தீர்மானத்திலிருந்து சர்வ கலாசாலை கமிஷனின் அறிக்கையில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு சம்பளம் 100க்கு மேல் இல்லாதிருக்கச் செய்திருப்பதையும், தமிழில் ஒன்றும் தெரியாத ஓர் பட்டதாரிக்குக் கீழிருந்து வேலை செய்யவும் கூறப்பட்டிருக்கும் அறிக்கையைக் கண்டித்திருக்கும் தீர்மானம் வரையிலும் பல தீர்மானங்கள் செய்ததோடு சுயமரியாதைக்காரர்கள் பார்ப்பனரைத் திட்டுவது சகிக்க முடியவில்லை. அதோடு சமய குரவர்களையும் தூற்றுகிறார்கள். ஆனதால் அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளையும் இயக்கங்களையும் சைவ சமயிகள் எவ்வகையிலும் ஆதரிக்கப்படாது என்னும் தீர்மானம் காங்கிரஸ் பிரசாரர்களால் கொண்டு வரப்பட்டு திரு. கலியாணசுந்தர முதலியாரின் தர்க்க வியாக்யானத்துடன் அங்கீகரிக்கப்பட்டு, ஏகமனதாய் ஒரு தீர்மானமும் செய்யப்பட்டதாம். இது தான் தமிழனின் தீர்மானம்.

திரு. கலியாணசுந்தர முதலியார் சுயமரியாதைக்காரர்களை கருவறுக்க இன்று முதல் கங்கணம் கட்டிக் கொண்டேன் என்று சொன்னதிலிருந்து திரு. சீனிவாசஅய்யங்காரிடம் ஒப்பந்தம் பேசி கடற்கரைக் கூட்டத்தில் பேசினதும், காங்கிரஸ் பிரசாரர்களைக் கொண்டு ஆஸ்திக சங்கமேற்படுத்தி கண்டவாறு திட்ட ஏற்பாடு செய்ததும், வேதாந்தப் பண்டிதர் திரு. வடிவேல் செட்டியாரை சுயமரியாதைக்காரர்களுக்கு விரோதமாகப் பேசச் செய்ததும், சைவமகாநாடு எந்தக் காரணத்திற்குக் கூட்டினாலும் அதில் சுயமரியாதைக் காரர்களை பகிஷ்கரிக்கவும் பார்ப்பனருக்கு அனுகூலமாகப் பேசி தமிழனுக்குப் பரிந்து பேசும் பத்திரிகையை கண்டிக்கவும் ஆகிய இத்தனை ஏற்பாடும் திரு. கலியாண சுந்தர முதலியாருக்கும் பார்ப்பனர்களுக்குமுள்ள ஒப்பந்த மென்பதை எல்லாரு மறிவார்கள்.

வருணாச்ரம மகாநாட்டில் சுயமரியாதைக் காரர்களைப்பற்றி ஒரு வார்த்தையாவதில்லை. பார்ப்பனரைத் திட்டுகிறார்கள் என்கிற பேச்சேயில்லை பிராமணர்களாகிய நாம்நமது தர்மத்தையும்சம்ஸ்காரத்தையும் விட்டுவிட்டோம் என்றுசொல்லி அதைச் சீர்திருத்திக்கொள்ள ஒரு பாடசாலை கட்டவேண்டுமென்று தீர்மானம் செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சுயமரியாதைக்காரர்கள் பார்ப்பனரைத் திட்டுவது சகிக்கமுடியவில்லை. அதனால் அவர்களால் நடத்தும் பத்திரிகைகளைப் பகிஷ்கரித்து விடவேண்டுமென்று சைவ மகாநாடு தீர்மானம் செய்திருக்கிறது இந்த இரண்டு மகாநாட்டுத் தீர்மானங்களையும் காரிய சாத்திய லாபத்தின் போக்கையும் கவனித்துப் பாருங்கள். ஆட்டுப்பட்டியில் ஆடு திருடப் போகும் திருடர்கள் அங்கு குலைக்க வரும் நாய்களுக்கு ஆட்டு மாமிசத்தை யெறிந்து ஆட்டைத்திருடிக்கொண்டு போவார்களாம். அதுபோல நம்மவர்களுக்குள்ளே கொள்ளையடிக்கப் புறப்படும் பார்ப்பனர்கள் நம்மவர்களையே நமக்கு இரையாக்கி அந்த இடையில் பலரிடம் பணம் சேகரித்து பள்ளியும் கட்டி பத்து சாஸ்திரிகளையும் உபாத்தியாயராக்கி பல பார்ப்பனப் பையன்களையும் படிக்க வைத்து மற்ற வருணத்துப் பையன்களை அடிமைப்படுத்த ஏதுவாகவிருக்கும் புராண சாஸ்திரங்களைக் கையில் கொடுத்து பார்ப்பான் தின்றமீதச் சோற்றையும் போடுவார்கள் என்பது வருணாச்ரம மகாநாட்டுப் போக்கையும் அதன் ஏற்பாட்டையும் கவனிப்பவர்களுக்கு விளங்கும். சைவ மகாநாட்டை கவனித்தீர்களானால் பார்ப்பனருடைய புத்தி தந்திரத்தால் இன்னும் அவனுக்குக் கட்டுப்பட்டு வயிறு வளர்க்கும் சிலருடைய ஆசையும் அதனால் நம்மவர்களுக்கு வரும் நஷ்டமும் விளங்கும்.

சைவப் பெரியார் கூட்டத்திற்கும் பார்ப்பனருக்குமென்ன சம்பந்தம்? அநேக சமூகங்களை அலட்சியம் செய்து அன்னிய மதத்திற்கு ஓட்டும் பார்ப்பனன் மீது சைவக் கூட்டம் பரிதாபப்படக்காரணமென்ன? சைவ சமயத்தைப் பொறுத்தா? சாஸ்திரத்தைப் பொறுத்தா? அடிமை வாழ்க்கையைப் பொறுத்தா? வேறு எதைப் பொறுத்து இந்தத் தீர்மானம் நிறைவேறிற்று? சைவப் பற்றுடையவர்களும் உலகத்தை உணராத நல்லவர்களும் இதில் வாய்பொத்திக் கொண்டிருந்து விடுகிறார்களே என்பது தான் நமக்கு கவலை. வேத சுருதிகளும் வேத ஆகம சாஸ்திரங்களும் இதில் எது பரவித்தை எது அபரவித்தை என்னும் சண்டையும் இதைப்பற்றி எழுதின சாஸ்திர நிந்தைகளும் அங்கிருந்தசைவப்பெரியார்களுக்குத் தெரியாதா? பார்ப்பனனுக்குப் பரிந்து வரும் திரு. கலியாண சுந்தர முதலியாரும் அவரின் ஏற்பாட்டால் வந்த காங்கிரஸ் பிரசாரர்களுந்தானா சைவப் பெரியார்கள்?

பார்ப்பனனின்சாஸ்திரம்சொல்லுவது போலும் அவர்கள் நினைப்பது போலும் அவர்கள் நடவடிக்கைகளில் காட்டுவது போலும் அந்த சைவ மகாநாட்டிலிருந்தவர்களெல்லாம் சூத்திரர்கள்தானே? திரு. கலியாண சுந்தரமுதலியார் முன் நடந்த தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கு சூத்திரனென்றால் துன்பத்தைக் களைபவனென்று சொல்லுங்களென்றும். இந்த தேர்தலில் சூத்திரனென்றால் அன்பன் என்று சொல்லுங்கள் என்று ஆஸ்திக சங்கத்திற்கும் அர்த்தம் சொல்லிக் கொடுத்ததுபோல் சைவப் பண்டிதப் பெரியார்களுக்கு ரகசியமாக ஏதாவது அர்த்தம் சொல்லிக்கொடுத்திருக்கிறாரா? அவர் சொல்லிக்கொடுத்த அர்த்தத்தினால் திருப்தியடைந்த சைவப் பெரியார்கள் பார்ப்பனர்களையும் மனிதனை மனிதன் அடிமைகொள்ள அவர்களால் எழுதப்பட்ட சாஸ்திரங்களையும் குற்றம் சொல்லுவது அநீதி என்று உணர்ந்து பார்ப்பனைகுற்றம் சொல்லுகிறவர்களின் பத்திரிகைகளை ஆதரிக்காதீர்களென்றுதீர்மானம் செய்வதற்கு, சூத்திரன் என்றால் கிலேசமுடையவன் என்று நிகண்டிலும், தாசிமகன், அடிமை, என்று ஸ்மிருதிகளிலும் ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதை புசிப்பவன் என்று பாரத இதிகாசத்திலும் எழுதியிருப்பதை மானமோ உணர்ச்சியோ தன் மதிப்போ கூலியை நிராகரிக்கும் குணமோ இருக்கும் எந்தப் பண்டிதனுடைய மனமும் வருத்தத்தையடைந்து அதை மாற்ற வழிதேடும்.

சூத்திரன் என்றால் பலபடி தாழ்த்தியே ஸ்மிருதி இதிகாச புராணங்களிலெல்லாம் எழுதப்பட்டிருப்பதை சைவப் பெரியார் கூட்டம் உணராவிட்டாலும் பண்டிதனறிவான். அந்த காரணத்தைக்கொண்டல்லவா அப்பர் சுவாமிகளை சூத்திரனென்று அவருக்கு வேதபாராயணம் சொல்ல இன்றும் பார்ப்பான் மறுக்கிறான். தமிழ்மறை என்று சைவர்களால் போற்றப்படும் தேவாரத்தை சிவபெருமானுக்கு முன்னும் நடுவிலும் ஓதமறுப்பதற்கு சூத்திரபாஷை என்பதுதானே காரணம் அப்பர் சுவாமிகளுக்கு சாதம்வைத்து படைப்பதில்பலபுரட்டுகள் பார்ப்பனர்கள் செய்வது பார்ப்பனர்களுக்குப்பரிந்து பேசும் பண்டிதர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவ்வுணர்ச்சியை அவர்கள் வயிற்றுப்பிழைப்புமறைத்துவிடுகிறது. இன்னும் ஆழ்ந்து கவனித்தால் அப்பர் சுவாமிகளின் விக்கிரகத்தை மற்ற ஆச்சாரிகளின் விக்கிரகத்திற்கு சற்று அப்பால் தள்ளிவைத்திருப்பதும் தெரியும். இத்தனைக்கும் சூத்திரன் என்பது தானே காரணம்?

இப்பொழுது வருணாசிரமக்காரர்கள் கட்டப்போகும் விச்வவித்தியாலயத்தில் பார்பனர்களுக்குமட்டுந்தான் வேத சாஸ்திரங்கள் சொல்லிக்கொடுக்கப்படும் மற்ற வருணத்தார்களுக்கு புராணச் சாஸ்திரம் தான் சொல்லிக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்களே அது

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

இதிகாசங்கள்.

இராமாயணம் - ஆரண்யகாண்டம்.

(திரு. சந்திரசேகர பாவலர் எழுதுவது)

(3-ம் கட்டுரைத் தொடர்ச்சி)

அகம்பனன் இராவணனைக் கண்டதும், கரனாதியர் அழிவைக் கூறியதும், இராவணன் அகம்பனன் சொற்படி சீதையைத் தூக்கி வரத் துணிந்து மாரீசனிடம் சென்றதும், மாரீசன் இராவணனைத் தடுத்து மறுபடி இலங்கைக்கு அனுப்பியதும் ஆகிய செய்திகளையெல்லாம் கம்பர் மறைத்துவிட்டார். சூர்ப்பனகைத் தூண்டுதலால் மாரீசனிடம் அவன் இரண்டாமுறை சென்றதையே அவன் முதன்முறைசென்றது போலக் காட்டுகிறார்.

மேலே கண்ட வரலாற்றைக் கம்பர் ஏன் மறைத்தார்? என்றால், அவருடைய எண்ணப்படி இராவணனைத் தீயவனாய், காமுகனாகக் காட்ட வேண்டியே. அகம்பனன் வரலாற்றைக் கூறினால், இராவணன் சீதையைத் தூக்கி வந்ததற்கு உண்மையான காரணம் உலகினருக்குத் தெரிந்துவிடும். அதாவது இராவணன் எவ்வாறாவது இராமனை வெல்லத் துணிகிறான். அவனுக்கு வீரமே முதன்மையாகத் தோன்றுகிறது. கரனாதியர் இறந்தனர் என்று அகம்பனன் கூறவே, இராவணன் உடனே இராமனைக் கொல்லப்புறப்படுகிறான். ஆனால் அகம்பனன் அவனைத் தடுத்து இராமனை வெல்வதற்குச் சுலபமான வழி கூறுகிறான். அதாவது, சீதையைத் தந்திரமாகத் தூக்கி வந்துவிட்டால் அவள் மேல் பேராசை வைத்தவனாகிய இராமன் அவளை நினைந்து நினைந்து உருகி இறந்துவிடுவான்என்கிறான். அகம்பனன் சொன்னதற்கு இராவணன் இணங்கி மாரீசனிடம் போகிறான். இதனால் சீதையைத் தூக்கி வருவதற்காக இராவணன் புறப்பட்டது அவளுடைய இன்பத்தைத் தான் நுகர்வதற்காக அன்று. தனது தம்பியாகிய கரனையும், அவன் சேனையையும் கொன்ற பகைவனாகிய இராமனைத் தந்திரமாகக் கொல்வதற்காகவே என்ற உண்மை புலனாகிறது. பண்டைக்கால மன்னவர் போர் முறையும் இதுவேயாம். மன்னர் போர் தொடங்க வேண்டுமானால் மாற்றாருடைய பசு நிரைகளைக் கவர்தல், பெண்களைத் தூக்கிச் செல்லுதல் முதலிய செயல்களைப் புரிவர். இம்முறைப்படியே இராவணன் தனது பகைவனாகிய இராமனுடைய மனைவியைத் தூக்கிவரப் புறப்பட்டான். இவ்வுண்மையை உலகினர் அறிந்தால் இராவணனை இகழுமாறெங்ஙனம்? உண்மை வீரனாகிய தமிழ் மன்னன் இராவணனை உலகம் புகழ்ந்துரைக்கும். தனது உடன் பிறந்தாளைத் தொட்டு மானபங்கம் செய்ததற்கு இராவணன் உண்மையில் தீயவனாக இருந்திருப்பானேல், சீதையைக் கண்டதுண்டமாக வெட்டியிருப்பான், அல்லது அவளுடைய மூக்கை அறுத்திருப்பான். இராவணனுடைய நோக்கம் அதுவன்று. இராமனைக் கண்டிக்க வேண்டுமென்று அவனுடைய நோக்கமே ஒழிய, சீதைக்குக் கேடு சூழ வேண்டுமென்று அவனுடைய நோக்கமன்று. நல்லறிஞனாகிய இராவணன் மாரீசன் கூறிய நன்மதியைக் கேட்டு சீதையைத் தூக்கிவரும் எண்ணத்தைக் கைவிட்டு இலங்கைக்கு வந்து விடுகிறான். ஆனால் அவன் தன் தங்கையை நேரில் கண்டபோது கொண்ட சினத்தால் எப்படியாவது சீதையைத் தூக்கிவந்து விடவேண்டுமென்று மறுபடியும் மாரீசனை அடைகிறான். இவ்வுண்மைகளை யெல்லாம் மறைத்து இராவணனைக் காமுகனாகக்காட்டிச்சீதையை மணந்து இன்பம் நுகரவே அவன் சென்றானெனக் கூறி உலகினர் அவனை மிகவும் தீயவனென எண்ணும்படிச்செய்வதற்காகவே கம்பருடைய தீயமதி இவ்வரலாற்றை மறைக்கும்படி அவரைத் தூண்டிற்று.

நல்லவனாகிய இராவணன் சூர்ப்பனகையைக் கண்டவுடன் மறுபடியும் மாரீசனையடைந்து சீதையைத் 'தூக்கிவரத் துணிவானேன் என்னில், எவனாவது தனது கூடப்பிறந்த தங்கையை உறுப்பறுத்து மானக்கேடு செய்த ஒருவனைத் தண்டிக்கத் துணியாதிருப்பானா? பேடியினுடைய மனங்கூட இத்தகைய தீயசெயல் கண்டால் வீரத்தால் துடிக்குமே, அப்படியிருக்க இராவணன் என் செய்வான்? இராவணன் செய்யத் துணிந்தது இராமனை மடிப்பதற்கே யாதலின் அறிஞர் செய்யும் செயலேயாம். ஒரு பெண்ணைப் பெண்ணென்றும் பாராமல் உறுப்புகளைச் சிதைக்க ஏவினனே இராமன்! இத்தகைய கொடியாரை ஒறுத்தல் வேந்தன் கடனாகிறது. இதனால் இராமனை இராவணன் மடிக்க முயன்றது செய்தற்குரிய கடமையே,

"கொலையிற் கொடியாரை வேந்
தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

என்பது தமிழ் மறை.

இராவணன் இரண்டாமுறை மாரீசனைக் காணப் புறப்பட்டபோது வால்மீகி முனிவர் கூறும் கருடனுடைய வரலாற்றையும் கம்பர் கூறாது மறைத்தார். இதற்குக் காரணம் கருடனுடைய தீய செயல்களை அறிந்தார் அதனை இகழ்வராதலின். வால்மீகி முனிவர் அவ்வரலாற்றில் ஆலமரத்தின் கீழ் மாஷர்கள், அஜர்கள், புகை குடிக்கும் முனிவர்கள் முதலியோர் இருந்தனரெனக் கூறுகிறார். இது அறிஞராகிய ஆராய்ச்சியாளராலே சிந்திக்கத்தக்கது. இக்காலத்திலும் உள்ள பரதேசிகள் அவரவர்களுடைய செயல்களினாலே பெயர் பெறுகிறார்கள். சில காலத்தின் முன் கழுமலையிலே ஒரு பரதேசி இருந்தார். அவர் மிளகாய் வற்றலையே அதிகமாகத் தின்பது வழக்கம். அதனால் உலகினர் அவரை மிளகாய் வற்றல் பரதேசி என்று அழைத்தனர். வேறோரூரில் ஒருவர் மௌனமாக இருந்தார். அதனால் அவர் மௌனச் சாமியார் என்று அழைக்கப்பெற்றனர். நீண்ட சடை வளர்த்திருந்த ஒருவர் சடைப் பரதேசி என்னப் பெற்றார். இவ்வாறே ஆரிய முனிவரும் மாஷர்களென்றும் அஜர்களென்றும், புகை குடிக்கும் முனிவர்களென்றும் பெயர் பெற்றனர். மாஷம் என்பது உளுந்து; உளுந்து தின்னவர்கள் மாஷர் எனப் பெயர்பெற்றனர்போலும்! அன்றியும் மாடு தின்போர் என்பவர் மாடரெனப்பெயர்பெற்றுமாடர்என்பதை ஆரியர் மாஷரென்றனரோ? அஜர்கள் ஆடு தின்னவர்கள். அஜம் என்பது ஆட்டுக்கடா. புகை குடிக்கும் முனிவர் என்பவர் புகையிலைச் சுருட்டு கஞ்சா புகைகளை அடிக்கடி குடிப்பதனால் இப்பெயர் பெற்றனர். இவ்வாறாக இவ்வாரிய முனிவர் பெற்ற பெயர்கள் மிக அழகியனவாகவே அமைந்துள்ளன. அன்றி அவர்களுடைய பெயர்களுக்குக் காரணமான செயல்களும் மிக அழகியனவே! இவ்விதி செயல்மாக்களை மிக மேலோர் போல எண்ணிச் சிலர் பாராட்டுகின்றனரே! அந்தோ! பரிதாபம்! உண்மை தெரிந்து உலகம் நல்வழிப் படுமாக. இனி கம்பர் இராவணனைத் தீய காமுகனாகக் காட்டுவதற்கு எவ்வாறு கதையை மாற்றுகிறார் என்பதை ஆராய்வோம்.

கம்பருக்கு இராவணனைப்போலவே, சூர்ப்பனகையையும் காமுகியாகக் காட்ட வேண்டும். அதனாலேயே அவர் முன்னர் இராமன் அவளை உருக்குலைத்ததும் அவனை விட்டு ஏகேனென அரக்கர்களைத் தூண்டி நின்றதாகக் கூறினார். அதற்கேற்ப அவள் இராவணன் முன் வந்து வீழ்ந்து புரண்டு இராமனையும் இலக்குவனையும் உருவிரித்துரைத்துப்பேருமகூறினாள் என்கிறார் கம்பர். இராவணன் வினவ வினைகரன் மடிந்ததும் சீதையைத் தூக்கச் சென்றதும் கூறி சூர்ப்பனகை சீதையின் பேரழகை விரித்துரைத்தனளாம்; அதனால் இராவணன் சீதையின்மேல் காமுற்று கரன் மடிந்ததையும் தன் தங்கை உருக்குலைந்ததையும் மறந்து சீதையையே எண்ணி ஏங்கினான் என்று தாம் நினைத்ததை முடிக்கக் கூறுகிறார் கம்பர். இதன் மேல் கம்பர் கூறுவன வியப்பாக உள்ளன. மேலும் அவை அறிவுடைய மேன் மக்களால் பொருத்தமற்றன என்று விலக்கித் தள்ளும் தகைமையன. அன்றி அவை சிறுவர்களாலும் எள்ளி நகையாடும் தன்மையன. அவற்றைக் கூறுதும்.

இயற்கையிலேயே மிகவும் காமுகராகிய கம்பர் தமக்கு எங்கெங்கே சந்தர்ப்பம் நேருகிறதோ அங்கங்கெல்லாம் காமுகர் நிலையை விவரிக்கத் தொடங்கி விடுகிறார். சந்தர்ப்பமில்லாத இவ்விடத்தில்கூட இராவணன் காமுற்றுக் கலங்கிய செய்திகளைப் பற்றி ஒன்றல்ல இரண்டல்ல ஐம்பத்தைந்து கவிகள் பாடுகிறார். முன்னரும் சூர்ப்பனகை இராமனை நினைந்து இரவெல்லாம் கலங்கினளெனக் கூறிய விடத்து இவர் மன நிலை விளக்கினோம். மேலும், அயோத்தியா காண்டத்தில் இராமன் காடேகும் போது ஆண் மக்களே அவனைத் தொடர்ந்தனரென வால்மீகி கூறினாராக பெண்மக்களும் தொடர்ந்தனரெனக் கம்பர் கதை கட்டிக் கொண்டு வரையறுத்துள்ள சோலையில் இராமனைச் சூழ்ந்து அப்பெண்கள் தூங்கினரெனக் கூறுமிடம் அயோத்தியா காண்டம் ஐந்தாவது தைலமாட்டு படலம். அப்போது இராமனைச் சூழ்ந்து பலரும் படுத்திருந்த எனையர் படுத்திருக்கும் முறையைப்பற்றி ஓர் கவிகூடப் பாடாமல் பெண்கள் தூங்கியதைப்பற்றி எட்டுக் கவிகள் பாடுகிறார். அவ்வெட்டுக் கவிகளிலும் ஐந்திடங்களில் அப்பெண்களுடைய முலைகளைப் பேர் கூறி விவரிக்கிறார். அதில் ஓரிடத்தில் "மகவுமுலை வருட இளமகளிர்கள் துயின்றார்" என்கிறார். குழந்தைகள் அவர்களுடைய கொங்கையை தடவின என்று கூறுவதில் இவ்விழி தகைமையரான கம்பருக்கு ஒரு மகிழ்ச்சி. அதனாலேயே இத்தீய சிந்தைக் கம்பர் வால்மீகி கூற்றுக்குமாறாக இலக்குவன் சூர்ப்பனகையின் கொங்கையை அரிந்தானெனப் பொய் கூறியதோடு நில்லாமல் "இணைத்தடங் கொங்கை பற்றும் பார்க்கும்" என்று தமது கேவலமான புத்திக்கேற்பக் கூறினர்.

இத்தகைய இழிதகைமையரான கம்பர் சூர்ப்பனகை சீதையின் அழகைக் கூறியவுடன் இராவணன் சீதையின்மேல் காமுற்று தனது மாளிகையை அடைந்தான் என்று கூறுகிறார். அரண்மனையிலிருந்து காமநோய் முதிர்ந்து ஓர் சோலையை அடைந்து பருவ காலங்களை ஒன்றன் பின் ஒன்றாக வரவழைத்து விரகத்தால் வருந்தி அவைகளை ஒருங்கே ஒழித்து, பின் தன் மதியையும், பின் இரவியையும், பின் இளம் பிறையையும், பின் இருளையும் வரவழைத்து அவைகளால் காம முதிர்ந்து சீதையை உருவெளித் தோற்றத்திலே கண்டு வருந்தினனும். நேரில் பாராத

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

பம்பாய் சுயமரியாதை முழக்கம்.

முதல் மகாராஷ்டிர சுயமரியாதை மகாநாடு.

டாக்டர் அம்பெட்கார் தலைமைப் பேருரை.

நாசிக் சமூக சமத்துவ சங்கத்தின் ஆதரவில் 1929 மே மாதம் 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் மகாராஷ்டிர சுயமரியாதை மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பி. ஆர். அம்பெட்கார், எம். ஏ. பார்-அட்-லா அவர்களும், மற்றும் தலைவர்களும் அன்று காலை காயிர்வாடி ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கினர். அவர்கள் அங்கு ஆடம்பரமாய் வரவேற்கப்பட்டு மகா நாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பெண்கள் உள்பட ஐயாயிரம் பேருக்குமேல் மகா நாட்டுக்கு வந்திருந்தனர். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் பெருந்தொகையாய் வந்திருந்தனர். டாக்டர் அம்பெட்கார் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்காக பெரிதும் உழைத்து வருகிறார்.

அன்று மாலை பிற்பகல் 1-30 மணிக்கு மகாநாடு அதற்கென்று அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கூடியது.

நாசிக் கலாசாலை ஆசிரியர், சாப்னிஸ், "சமத்துவம்" பத்திரிகை ஆசிரியர் திரு. டி. வி. நாயக், எம். பி. தேசமுகி, பி. வி. பிரதான், பி. கே. கெய்க்வாட், எஸ். எஸ். குப்தா, காத்ரிக்கார், ஆர். டி. கௌலி, யாதவ், நாசிக்கில் பிரபல காண்டிராக்டரான திரு. ராவ்கம்பி முதலியோர் மகா நாட்டுக்கு வந்திருந்தனர்.

மகா நாட்டில் பெரிதும் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. வரவேற்புக்கழகத் தலைவரான திரு. ராக்கேட் சுகவீனமாயிருந்ததால் தமது பிரசங்கத்தை வாசிக்க முடியவில்லை.

பிறகு டாக்டர் அம்பெட்கார் தலைமை வகித்து ஒரு மணி நேரத்துக்கு அதிகமாக பின்வருமாறு பிரசங்கம் செய்தார் :—

இந்து சமூகத்தில் உயர்வு தாழ்வு என்ற பேதங்கள் ஏற்பட்டு சுயமரியாதையையும் ஆண்மையையும் பலத்தையும் அழித்து விட்டது. நல்வாழ்க்கைக்கு சுயமரியாதையும் ஆண்மையும் அத்தியாவசியமானவை. ஒடுக்கப்பட்ட—பிற்போக்கான வகுப்பார்கள்தான் இது விஷயமாக மிகவும் கேவல நிலைமையில் இருக்கின்றனர். இந்த வகுப்பார்களின் பேர்களை அவர்களைக் கேவலப் படுத்துவதாகிறது. சில வகுப்பார்கள் தங்க ஆபரணங்கள் தரிக்கக் கூடாதென்றும், வேறு தாழ்ந்த உலோகத்தில் செய்த நகைகள்தான் தரிக்கவேண்டுமென்றும் மதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இது வேற்றுமைக்கு அடிப்படையாகும். ஒடுக்கப்பட்ட வகுப்பாரில் பலர் தங்கம் வெள்ளி நகைகள் அணியத் தக்க பொருளாதாரமிருந்தும் அவர்கள் தாழ்ந்த உலோகத்தில் செய்யப்பட்ட நகைகளே அணிய வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இந்த தீய வாழ்க்கைத்தை மீறி தங்க நகைதரித்த தீண்டாதாருக்கு பலவித கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன. ஒடுக்கப்பட்ட மக்கள் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கொள்கைப்படி ஜாதிக்கட்டுப்பாட்டை அறுத்தெறிந்திருக்க வேண்டியதாயினும், மூடபொது ஜன அபிப்பிராயத்துக்காக அதை ஆதரித்து வருகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கொடுக்கப்படுவதில்லை. இந்த வகுப்பாரின் சிறுமை நிலையை மாற்றவேண்டுமாயின் அவர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி உண்டாகச் செய்து அவர்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதற்காக துணிந்து முயலும்படி அவர்களை தூண்டிவிடுவது அத்தியாவசியம். படிப்பினால்மாத்திரம் சமத்துவம் ஏற்பட்டுவிடுமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனமாகும். படிப்பினால் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கஷ்டங்களும் துன்பங்களும் பெரிதும் நீங்குமாயினும் சமூக வாழ்க்கையில் அவர்கள் நிலைமை உயர்வடைவதற்கு கல்வி மாத்திரம் போதாது. உதாரணமாக நான் மிகவும் உயர்ந்த கல்விகற்றிருக்கிறேன். அப்படியிருந்தும் நான் ஒரு தீண்டாதவனாகவே கருதப்படுகிறேன். ஆகையால் ஜாதிபேதம் என்ற கொடிய வருணாசிரமக் கட்டுப்பாட்டை அடியோடு அழித்தால்தான் நாம் மேன்மையடைய முடியும் என்று கூறினார்.

அவர் பேசி முடிந்ததும் தென் இந்தியாவில் பேர்போன சுயமரியாதைத் தலைவரான திரு. ஈ. வெ. இராமசாமியாரை பாராட்டி அவரிடமிருந்தும் திரு. எம். கே. ரெட்டியாரிடமிருந்தும் வந்த கடிதங்களும் மற்ற அனுதாபச் செய்திகளும் வாசிக்கப்பட்டன.

பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

"குழந்தை மணம், சாதிபேதம், புரோகிதம் ஆகிய தீமைகள் ஒழிக்கப் படவேண்டும்."

"மனுசாஸ்திரம், புராணம் முதலிய நூல்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்."

"கோயில் பூசை உற்சவங்கள் ஆகியவைகளுக்காகச்சர்க்காரார் கொடுக்கும் தஸ்தி மோகினித் தொகைகள் நிறுத்தப்பட்டு நாட்டில் ஒடுக்கப் பட்டவர்களோ, இழிவுபடுத்தப்பட்டவர்களோ, தீண்டாதவர்களோ, கல்வியில்லாதவர்களோ, ஒருவர் கூட இல்லை என்று சொல்லத்தக்க நிலைமையை நமது நாடு அடையத்தக்க வழிக்குச் செலவுசெய்ய வேண்டும்."

ஒடுக்கப்பட்ட வகுப்புச் சாரணர்கள் 150 பேர் மகா நாட்டுத் தொண்டர்களாக வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடவுளரின் ஆபாசங்கள்

(மைடான் டில்லி காளிமுத்து எழுதியது)

தமிழ் நாட்டில் சில கூட்டத்தாராகிய பண்டிதர்களும், பண்டிதரைச் சேர்ந்தவர்களும் வைதீகக்காரர்களும் புராணம், வேதம், இதிகாசம் ஜாதி, வித்தியாசம், தீண்டாமை என்ற நோயால் பீடிக்கப்பட்டு, மதம் போச்சு, புராணம் போச்சு, ஜாதி வித்தியாசம் போச்சு என்று நீலிக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டு வருணாசிரம மகா நாடுகளையும், சைவ சமாஜக் கூட்டங்களையும், கடைப் பிடித்து வைத்தியம் பார்த்துக் கொள்ளத் திரிந்து அலைகிறார்கள். என்னே இவர்களின் அறியாமை! உலக மெல்லாம் சுயமரியாதைச் சிகிச்சை செய்துகொண்டு வருகையில் இவர்கள் மாத்திரம் ஏன் ஆத்திகப் படுகுழியில் விழுகிறார்களென்பது எம் போன்றார்க்கு வியப்பைத் தருகின்றது.

சீதையையும்திருஞானசம்பந்தரையும் குற்றஞ் சொல்லுகிறார்கள் என்றுமுணுமுணுத்துத்திரிகிறஇவர்கள் நான் கீழே வரைந்துள்ள பல கடவுளரின் அயோக்கியத் தனத்திற்கும், ஆபாசத்திற்கும் என்ன சமாதானம் சொல்லுவார்கள்.

சிவன் மிருகண்டேயருடைய புத்திராகிய மார்க்கண்டேயருக்குப் பதினாறு வயதளித்துப்பின் யமன் வந்து பிடித்த காலத்தில் என்றும் பதினாறுகக்கொடுத்தோமென்று பகர்ந்தது பொய் மொழியல்லவோ? சுந்தரமூர்த்தி நாயனார் விவாககாலத்தில் சிவன் சென்று அந்நாயனாருடைய மூதாதையர் தனக்குப் பரம்பரை அடிமை யென்று பொய் சாதனங்கள் காட்டியது பொய் மொழியல்லவோ? விஷ்ணுவானவர் பொய் வேடந் தாங்கி மாபலிச் சக்கிரவர்த்தியிடஞ் சென்று மூவடிமண் தானங்கேட்டது பொய்மொழியல்லவோ? திருப்பாற் கடல் கடைந்தபோது விஷ்ணு அசுரர்களுக்கு அமுதபாகங் கொடுக்கிறேனென்று சொல்லிய பின்னர், கொடாதுபோனது கொடியதுஷ்டத் தனமல்லவோ பாரதயுத்தத்தில் கிருஷ்ணன் பிராமணன் வேடம் பூண்டு கர்ணனிடஞ்சென்று தான் பிராமணனென்றும் மலையில் தவம் செய்பவனென்றும், பொய்மொழி கூறி தானம் வாங்கியது அயோக்கியத் தனமல்லவோ சிவன் தன்னைப்போல் பிரம்மாவும் பஞ்சமுகமுடையானென்றுபொறாமைகொண்டுபிரம்மாவின் சிரசில் ஒன்றைக் கொய்தது கொலை யல்லவோ? விஷ்ணு ஜலந்திரசூரனின் மனைவியை அபகரிக்கும் பொருட்டு அவனைச் சம்மாரஞ் செய்தது பரம அயோக்கியத் தனமல்லவோ? விஷ்ணு தனக்கு யாதொரு தீங்கும் புரியாத பத்மாசூரனை எரித்துக்கொன்றது கொலையல்லவோ? தனக்குப் பால் கொடுத்த பூதகி யென்னும் தாயைக்கிருஷ்ணன் கொன்றது கொலையல்லவோ? மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்த பணத்தைச் சிவன் தனக்காகச் செலவிடச்செய்து,நரிகளைப் பரியாக்கிச் சூதைப் புரிந்தது களவல்லவோ? சிவன் திருநீலகண்ட நாயனாரிடம் தான் கொடுத்த திருவோட்டைக்கவர்ந்துகொண்டு அவ்வோட்டை மறுபடியுங் கேட்டது களவல்லவோ? கோபிகா ஸ்திரீகளுடைய வஸ்திரங்களையும் அவர்கள் வீட்டு வெண்ணெயையும் திருடனாகிய கிருஷ்ணன் கவர்ந்துபோனது களவல்லவோ? சிவன் இராவணன் மனைவியாகிய மண்டோதரியை இச்சித்துச்சேர்ந்தது மடத்தனமல்லவோ? வசிஷ்டரின் மனைவியாகிய அருந்ததியிடம் சிவன் சென்று அம்மணமாகப் பிச்சையிடும்படி கேட்டு அவளைச் சிந்தித்து, அவளால் சாபம்பெற்று சிசுவானது காமமல்லவோ? திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பாகித்தபோது நாருகாவன ரிஷிகளைக்காமவலைக்குள்ளாக்க பேடியாகிய விஷ்ணு மோகினி அவதாரங்கொண்டு வந்ததைச் சிவன் கண்டு காமவெறி கொண்டு விஷ்ணுவுடன் புணர்ந்தது மிருகப் புணர்ச்சியல்லவோ? துரோணாச்சாரியின்மனைவியாகிய கிருபியிடம் சிவன் விருந்துண்ணச் சென்றபோது அவள் மேல் மோகித்து இந்திரியங்கலிதமாகும்படி செய்துகொண்டது புன்மைதனமல்லவோ? காசிபர் மானோடு புணர்ந்து வள்ளியம்மையைப் பெற்றது மிருகப் புணர்ச்சியல்லவோ? சிவன் சுந்தரமூர்த்திக்காக பரவை நாச்சியாகிய சிவேயினிடம் தூது சென்று அவ்விருவரையும் சேர்த்து வைத்தது இழிசெயல் அல்லவோ? அயோக்கியனாகிய சிவன் கண்ணகியோடு சொக்கட்டானாடிதோல்வியுற்றகாலத்தில் யாச்

தேசம் பெரிதா சமூகம் பெரிதா?

—0—

(அய்யாமுத்து.)

சமூகம் பெரிதா தேசம் பெரிதா எனக் கத்தி தேச பக்தி யூட்டவெண்ணும், ஆரியப் பார்ப்பனர்களே! இத்தேசத்தில் வாழும் இந்து சமூகத்தை ஒற்றுமையின்றியும், சுதந்திரமின்றியும், சகோதர உணர்ச்சியின்றியும், அன்பின்றியும், அருளின்றியும், ஒழுக்கமின்றியும், உணவின்றியும், உணர்வின்றியும் வாழுவைத் தள்ளது, உங்களால் இந்நாட்டில் விதைக்கப்பட்ட வர்ணம், சாதி, சமயம், சாஸ்திரம், புராணமாகிய விதைகள் தானென்று சுயமரியாதைக்காரர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். நீங்கள் விதைத்த இவ்விதைகள் வெடித்து முளைத்து; உண்மை, அறிவு, ஒழுக்கம், அன்பு, ஒற்றுமை, இரக்கமாகிய வாளுளியைப் பூமியில் படவொட்டாமல் மறைத்து நிற்கும் மரங்களாகி நாட்டை அடிமைத் தனத்திலும், நீக்க வொண்ணாத இருளிலும் அழுத்தி விட்டதென்பதை யாங்களறிவோம். இம்மரங்களை ஆணி வேர், சல்லி வேர் போக வெட்டி வீழ்த்திச் சுட்டுப் பொசுக்கிய பின்னர்தான் இந்நாட்டு மக்கள் விமோசனமடைவர் என்று எங்களுக்குத் தெரியும்.

ஐயோ! நெடுநாளாக வளர்த்த மரங்களாயிற்றே, ஐயோ! இவற்றை வெட்டலாமா? என்று ஒரு சிலரும், இச்சாதி சமய வர்ண மரங்களை வெட்டித் தள்ள எத்தனையோ யுகங்களாக எத்தனையோ புத்தர்களும் பாடுபட்டு வீணே மாண்டனரே! உங்களால் என்னதான் இயலுமென வேறு சிலரும், வெளிச்சத்தை மறைக்கும் கிளைகளை மட்டும் தறித்தால் போதுமே! அடிமரத்தில் கை வைக்காதேயுங்கள் என்று வேறு சிலரும் கூறித் திரிகின்றனர். நாங்கள் இம்மரங்களின் வயதைக்கண்டு மலைக்கவில்லை. புத்தர்களால் கைவிடப்பட்டதென்று சோர்வடையவில்லை. கிளைகளைத் தறித்து திருப்தியுற எண்ணவில்லை. ஆனால், இம்மரங்களை ஆணி வேரோடும், சல்லிவேரோடும் வீழ்த்தவே முனைந்துள்ளோம். உலகத்தின் இன்பங்களை, செல்வங்களை, கலைகளை, கல்விகளை, முயற்சியின் பலன்களைமக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் சமமாய்ப் பங்கி வழங்க ஓர் இயக்கம் உலகத்தின் ஓர் மூலையில் கிளம்பி முளைத்து பயன்பெற்று விட்டதென்றால், நாங்கள் இக்காலத்தையே அன்றி புத்தர் காலத்தை எண்ணுவானேன்? நீங்கள் உங்கள் அறிவை ஏய்த்துக்கொண்டும், பழமை பேசிக்கொண்டும், பிடிவாதம் காட்டிக்கொண்டும், மக்களை இன்பத்தினின்று விலக்கித் துன்பத்திலழுத்த முயன்று கொண்டிருப்பீர்களாகில், ஒரு நாள் காலையில் நீங்கள் தூங்கி எழுந்தவுடன் இந்தியாவெங்கும் சுதந்திர வெள்ளம் பெருக்கெடுத்து உங்கள் கட்டுப்பாடுகளையும், உங்களையும் நாசப்படுத்தி, உங்களை எருவாக்கி உழுது நல்ல விதை விதைக்கப்படுவதைக் காண்பீர்கள்.

பார்ப்பான் உயர்ந்தவன், பறையன் தாழ்ந்தவன்; ஒருவனை யொருவன் பார்த்தாலும், தொட்டாலும், ஒருவன் தெருவில் மற்றவன் நடந்தாலும் தீட்டுப்பட்டு நாசமேற்பட்டு விடும் என்று சொல்லும் நீங்களா சுயராஜ்யம் வாங்கப் போகிறீர்கள்?

ஒருவன்சாதி உயர்ந்தது, மற்றவன்ஜாதி தாழ்ந்தது, இரண்டு பேரும் சமமாக உட்கார்ந்து உணவருந்தல் கூடாது, ஒரு ஜாதிப் பெண்ணை மறு ஜாதிப்பையன் மணத்தல்கூடாது என்று செயலில் நடத்திக் காட்டி வரும் நீங்களா மக்களைத் திரட்டி அணிவகுத்து சுயராஜ்யப் போர்புரியப் போகிறீர்கள்?

ஒருவன் போகும் இடத்தில் மற்றவனும் போய் சாமிக்குத் தேங்காய் பழம் வைத்துக் கும்பிடக்கூடாது. ஒருவன் தன் சாமியை நேராகத் தானுகவே கும்பிடக்கூடாது. பார்ப்பனத் தரகன் முதுகின் பின்னால் நின்றே வணங்கி முக்தி அடைய வேண்டும் என்ற பிடிவாதங் காட்டும் நீங்களா வெள்ளையர்கடனுன் வீரத்துடன் போர் புரியப்போகிறீர்கள்?

இதைத் தொட்டால் பாவம், அதைச் செய்தால் பாவம், சாமி கண்ணைக் குத்திவிடும், நரகத்தில் ஆழ்த்தி விடும், ஆதலால் ஜபஞ் செய், தவஞ் செய், பூஜை செய், ஆராதனை செய், காணிக்கை போடு, பார்ப்பானுக்குத் தானஞ் செய், சிரார்த்தஞ் செய், சிவதீட்சை செய் என்று மக்களை அறியாமையிலும், பயத்திலும் செலுத்திச் செல்லும் உங்கள் மதக் கோட்பாடுகளா இந்நாட்டு மக்களின் அடிமை விலங்கைத் தகர்த் தெறியப்போகிறதென்று நம்புகிறீர்கள்?

ஹே! அசட்டுத் தேசிய வாதிகளே! அதோ உங்கள் கண் முன் நிற்கும் வெள்ளைக்காரச் சமூகத்தைப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு நேர்த்தியாக அணிவகுத்து நிற்கிறார்கள்! அவர்கள் நாலு வர்ணமாகப் பிரிக்கப்பட்டு, பார்ப்பான் உயர்ந்தவன் பறையன் தாழ்ந்தவன் என்று சொல்லவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் சமூகத்தை காலாட்படை, குதிரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படை. என நாலாக வகுத்து நின்று, தங்கள் நாட்டில் கால் வைத்து தங்களை அடிமை கொள்ள நினைக்கும் மனித சாதியாரை வெட்டி வீழ்த்த ஆயத்தமாக நிற்கிறார்கள். அவர்கள் தங்கள் சமூகத்தை ஆயிரம் சாதிகளாக வகுத்து ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு நீதியெனவும், படிப்பெனவும், வழக்க மெனவும், சடங்கெனவும் கற்பித்து ஒருவரோடொருவர் கலவாமல் பிரிந்து நிற்கவில்லை. ஆனால் அவர்கள் ஆயிரமாயிரமான தொழில்களை சிரிஷ்டித்து அதை எல்லோரும் பேதமின்றிப் பகுந்து செய்து, எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்டு, ஒருவன் ஆசைப்பட்ட பெண்ணைத் தங்குதடையில்லாமல் மணந்துகொண்டு உற்சாகமாக வாழ்வு நடத்தி வந்திருக்கிறார்கள்.

கக்கூசு மலங்களை சுத்தி செய்யும் தோட்டியும், காப்பிக் கடையில் வேலை பார்க்கும் பையனும், கச்சேரியில் வேலை செய்யும் கணக்கனும், நிலத்தை உழுது பயிராக்கும் உழவனும், நீதிமன்றத்தில் வாதாடும்லாயரும் தங்கள் தங்கள் தொழில் முடிந்த பின்னர் நன்றாகக் குளித்துவிட்டு, சொகுசாக உடுத்திக் கொண்டு, தங்கள் தங்கள் மனைவிகளுடன் கை கோர்த்துக்கொண்டு பேதமின்றிச் சமமாக ஆலயங்களில் தொழுவதையும், சிற்றுண்டிச் சாலைகளில் உண்டு களிப்பதையும், சினிமாக் கொட்டகையில் பணம் கொடுத்த அளவுக்குச் சமமாக உட்கார்ந்து உல்லாசமாகக் காலங்கழிப்பதையும் நீங்கள் காண்பீர்கள்.

ஆனால் நீங்களோ உங்கள் பறையனும் பார்ப்பானும் சமமாக ரயிலிலும், கோயிலிலும், காபி ஓட்டலிலும், தெருவிலும், திண்ணையிலும் இருக்க ஒப்பமாட்டீர்கள். தொடாதே, பார்க்காதே, நெருங்காதே, நீ கீழ் நான் மேல் என்று பரித்து வைக்கும் உங்கள் சமயச் சுமையுடனும், சாதிச் சுமையுடனும், பழமைச் சுமையுடனும், வழக்கச் சுமையுடனும், பழக்கச் சுமையுடன் முதுகு வளைந்து, ஒருவரோடொருவர் கைகோர்த்து நடக்கத் திறனற்ற நீங்களா உங்கள் கண் முன் நிற்கும் மகத்தான மனித சாதியினரான ஆங்கிலேயருடன் போர் புரிந்து சுயராஜ்யம் வாங்கப் போகிறீர்கள்? சமூக ஊழல்களை இவ்வளவு அபாரமாக வைத்துள்ள நீங்கள் வெள்ளைக்காரன் ரோமத்தையும் அசைக்காமலும், உங்கள் சாதிச் சமய வருணபேதங்களைப் போக்காமலும், சுயராஜ்யம் வாங்கி விடுவதாகச் சொல்வதானது, இந்நாட்டு மக்களைச் சதா சர்வ காலத்துக்கும் படுகுழியில் ஆழ்த்தி வைத்திருந்து நீங்கள்மட்டும் உத்தியோகங்களைப் பெற்று ஏக போக உரிமையுடன் சுகபோக வாழ்க்கை நடத்தச் செய்யும் சூழ்ச்சியே அன்றி வேறல்லவென்றுதான் சுயமரியாதை இயக்கம் பறைசாற்றி மக்களை தேசத்தை விடச்சமூகமே பெரிது ஆதலால் முதலில் சமூகத்தை ஒன்றுபடுத்தி மேம்படுத்த முனையுங்கள் என்று கூவி அழைக்கின்றது.

சமூக பேதங்கள் ஒழிந்து இந்திய மக்கள் ஒரு சாதியினராகத் தலை தூக்கும்போது ஆங்கில ஆட்சி தானுகவே எங்களோடு கைகுலுக்கி சமத்துவ வார்த்தை யாடும் என்ற தீவிரநம்பிக்கைசுயமரியாதைக்கார அறிவாளிகளுக்குத் தெரியுமே அன்றி உங்களைப் போன்ற தேசியப் புரட்டர்களுக்கு ஒருபோதும் தெரியாது.

சிகையைக் கிணற்றிலெறிய அதை அவன் எடுக்கச் சென்றபோது கிணற்றைப் பாறையால் மூடி அவனைக் கிணற்றுள் அமிழ்த்தியது கொடியதல்லவோ? அன்றியும் பிரம்மா தன் புத்திரியையும், கிருஷ்ணன் குப்ஜனையும் இராதாவையும், சிவன் இருஷி பத்தினிகளையும் விஷ்ணு ஜலந்தரனுடைய மனைவி பிருந்தாவையும், இந்திரன் கௌதமர் மனைவியையும், சூரியன் குந்தியையும், சந்திரன் தன் குரு பிரஹஸ்பதியின் மனைவியாகிய தாராவையும், வாயு வானரத்தின் மனைவி கேசரியையும், வருணன் அகஸ்தியர் தாய் ஊர்வசியையும், பிரஹஸ்பதி தன் சகோதரன் மனைவி உதத்யாவையும், பராசர் மச்சகந்தியையும் வியாசர் வேலைக்காரியையும், பாண்டவர்கள் திரௌபதியையும் புணர்ந்திருப்பது விபசாரமல்லவோ? இராமன் தனக்கு ஒரு தீங்கும் புரியாத வாலியை வஞ்சனை செய்து கொன்றது அயோக்கியத்தனமல்லவோ? இன்னும் இப்படி எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். இந்த ஊழல்களை எடுத்துக் காட்டுபவர்கள் நாஸ்திகர்களாம்.

அகில இந்திய தேவாங்கர் மகாநாடு.

ஒரு மறுப்பு

1-6-29ந்தேதியில் கோயமுத்தூரில் நடைபெற்ற அகில இந்திய தேவாங்கர் மகாநாடு சம்பந்தமாக திரு. ஈ. வெ. இராமசாமியாரைப் பற்றி 3-6-29ந்தேதி "சுதேசமித்திரனில்" வெளிவந்த விஷயம் அவ்வளவும் உண்மையல்லவென்றும் மகாநாட்டில் சுயமரியாதைக் கொள்கைகளே பெரிதும் தாண்டவமாடினவென்றும், மகாநாட்டுக் கொட்டகை சுயமரியாதைத் தலைவர்களின் படங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததென்றும், சுயமரியாதைத் தலைவர்கள் பாராட்டப்பட்டனர் என்றும் ஒரு நீண்ட கட்டுரையை அகில இந்திய தேவாங்கர் மகாநாட்டுப் பொறுப்பாளரில் ஒருவர் எழுதி அனுப்பியிருக்கிறார்.

திருக்கோவிலூரில் சுயமரியாதைப் பிரசாரம்.

திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியாரும், என். பி. காளியப்பனும் 13-6-29ம் தேதி காலை 8 மணிக்கு மணம்பூண்டி திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து அவர்கள் குடும்பத்தாரைக் கண்டு விசாரிப்பதற்காக, மணம்பூண்டி ஞானியார் ஆசிரமத்திற்கு வந்திருந்தார்கள். அங்கு ஆசிரம நிர்வாகஸ்தர் திரு. வடிவேலு செட்டியார் அவர்களையும் மற்றும் பலரையும் கண்டு விசாரித்துவிட்டு, பிள்ளையவர்கள் வீட்டிற்குச் சென்று குடும்பத்தாரை விசாரித்துவிட்டுத் திரும்புகையில் திரு. வடிவேலு செட்டியார் அவர்களும் திரு. லெட்சுமணசாமி முதலியார் அவர்களும் திருக்கோவிலூரில் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதற்கிசைந்ததால் திரு. கிருஷ்ணசாமிப் பிள்ளையவர்கள் முயற்சியில் பெண்ணையாற்றில் மாலையில் ஒரு கூட்டம் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. மாலை 6-30 மணிக்கு திரு. ராமசாமியார் அவர்கள் மணம்பூண்டி ஜனங்கள் புடை சூழ மேள வாத்தியங்களுடன் ஞானியார் ஆசிரமத்திலிருந்து ஆடம்பரமாய் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு ஏராளமாக மக்களும் பல பெண்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் திரு. வடிவேல் செட்டியார் அவர்களால் திரு. ராமசாமியாரைப்பற்றி சில புகழுரைகள் சொல்லப்பட்டு திருவாளர் சௌகார் சக்கரபாணி செட்டியாரவர்கள் குமாரர் திரு. வாசுதேவ செட்டியார், எம்.ஏ. பி.எல். அட்வகேட் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரேபிக்க திரு. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள் ஆமோதிக்க, கரகோஷத்தினிடையே திரு. செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்து திரு. ராமசாமியாரின் கொள்கைகளையும் பத்திரிகைகளையும் புகழ்ந்து பேசி நோட்டீசில் கண்டபடி "நமது முன்னேற்றம்" என்னும் தலைப்பில் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. ஈ. வெ. ராமசாமியாரின் சொற்பொழிவின் சாரம்

சகோதரர்களே! நான் உங்கள் ஊருக்கு இதற்கு முன் இரண்டொரு தடவைகள் வந்திருக்கின்றேன். ஒரு தடவை ஒத்துழையாமையின்போது உங்கள் ஜில்லாவாகிய தென் ஆற்காடு ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில், இந்த மண்டபத்துக்கெதிரில் பேசியிருப்பதாக எனக்கு ஞாபகமிருக்கின்றது. இன்னொரு தடவை காலஞ் சென்ற நமது நண்பர் திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் இருக்கின்றபோழ்து திரு. பிள்ளையவர்களால் அழைக்கப்பட்டு, உங்களூர் வாசிகளாகிய திரு. லக்ஷ்மணசாமி முதலியார், திரு. கிருஷ்ணசாமி பிள்ளை முதலியவர்களாலும் கடை வீதிக்காரர்களாலும் பெரிய ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டு, இவ்வூருக்கு வந்து இதே இடத்தில் பேசியிருக்கிறேன். நான் இங்கு காலஞ் சென்ற எனது நண்பர் குமாரசாமியாரவர்களின் குடும்பத்தாரைக் கண்டு எனது அனுதாபத்தைத் தெரிவித்து விட்டுப் போகலாமென வந்த இடத்தில் ஞானியார் ஆசிரமக் காரியஸ்தர் திரு. வடிவேலு செட்டியாரும் அவரது நண்பர்களும் இன்று இங்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால் நானும் சம்மதித்து ஏதோ சில வார்த்தைகள் இன்று இங்கு பேச வந்திருக்கின்றேன்.

நான் எடுத்துக் கொண்ட விஷயம் பேசத் தொடங்கு முன காலஞ் சென்ற திரு. ம. ரா. குமாரசாமியாரவர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்க வேண்டுகின்றேன்.

திரு. குமாரசாமியார் சுமார் 10 வருஷமாக எனக்குத்தெரிந்தவர். அவர் சற்றும்சுயநலம்கருதாதஒருஉண்மைத் தொண்டராவார். நான் செல்லும் அநேக இடங்களுக்கு அவரும், அவர் செல்லும் அநேக இடங்களுக்கு நானும் செல்வதன் மூலம் அடிக்கடி பொது மேடைகளில் சந்தித்து வந்திருக்கின்றோம். என்னிடத்தில் அவருக்கு அதிக அன்பு உண்டு. என்னுடைய கொள்கைகள் பெரிதும் அவரால் ஒவ்வொரு கூட்டத்திலும், நான் இல்லா காலங்களில்கூட ஆதரிக்கப்படுவதுண்டு. அதனாலேயே எனக்கு அவரிடம் அதிகமான விசுவாசம் இருந்து வந்தது. அவரைப் பிறந்த இடமாகக் கொண்டதால் இந்த ஊருக்கு வெளியிடங்களில் அதிக மதிப்பு உண்டென்றே சொல்லுவேன். அப்பேர்ப்பட்ட பெரியார் தொடங்கிய ஆசிரம விஷயத்தில் நீங்கள் அதிக கவலை எடுத்து அவரது கொள்கையைப் பரப்பவேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது உங்கள் முக்கிய கடமையாகும். திரு. வடிவேலு செட்டியாரும் அதற்கு மிகுதியும் ஏற்றவர் என்றே சொல்வேன்.

நிற்க, நான் இன்று பேசவேண்டிய தலைப்பு விஷயம் "நமது முன்னேற்றம்" என்பதாகும். இந்த தலைப்பின்கீழ் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றாலும் நான் நமது நாட்டு மக்கள் முன்னேற்றம் என்பதைப்பற்றி சொல்லும் முறையில் மற்ற நாட்டிற்கும் நமக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் சொல்லி பிறகு நாம் செய்ய வேண்டியவைகள் என்று எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகின்றேன். நான் சொல்வது பெரும்பாலும் என்னுடைய சொந்த கருத்தும் நான் மனப்பூர்வமாய் சரி என்று உணர்ந்ததுமே சொல்லுகின்றேன். நமது நாட்டைப்பற்றி முற்காலத்தில் இருந்த நிலை என்பதாக அதற்கு பிரத்தியக்ஷ சாக்ஷியம் இல்லாத இக்காலத்தில் எவ்வளவு பெருமையாகப் பேசிக்கொண்டாலும் இன்றைய பிரத்தியக்ஷநிலைமைய உணர்ந்து இது நமது முற்போக்கா? பிற்போக்கா? என்பதை முதலில் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். நமது நாடு இன்றைய நிலைமையில் விளை பொருளிலும் மூலப்பொருளிலும் வியாபாரத் துறையிலும் கைத்தொழில் வசதியிலும் இன்றைய தினம் நாமறிந்த எந்த நாட்டிற்கும் பிற்பட்டதல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள். அதுபோலவே மக்கள் வாழ்வில் செல்வத்திலும் அறிவிலும் ஆராய்ச்சியிலும் சமூக உரிமையிலும் அரசியல் உரிமையிலும் பிற்பட்டு அடிமை பட்டு இருக்கின்றோம் என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்கள் என்று நினைக்கின்றேன். உதாரணமாகசெல்வத்தில் நாம்பிற்பட்டவர்கள்என்பதற்கு மற்றநாட்டுசாதாரண பெண்மணிகளிடம் இருக்கும் செல்வம் நமது நாட்டு பிரபுக்கள் என்பவர்களிடம் இல்லை. அதுமாத்திரமல்லாமல் மற்ற நாட்டு ஒவ்வொரு தனி மனிதனுடைய சராசரி மாத வரும்படி 35 ரூபா வீதம் என்றால் நம் நாட்டு மனிதனின் சராசரி வரும்படி 3½ ரூபா ஆகின்றது. மற்றும் பிழைப்பு வசதியோ நமது நாட்டில் வேலை கிடைக்காமலும் கூலி கிடைக்காமலும் வாரம் ஒன்றுக்கு பதினாயிரக்கணக்கான மக்கள்வெளி நாடுகளுக்கு கூலிகளாகக் கப்பலேறுகின்றார்கள். ஆனால்; வெளி நாடுகளிலிருந்து நமக்கு முதலாளிகளாகவும் எஜமானர்களாகவும் அதிகாரிகளாகவும் பலர் தினம் இறங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டால் நாம் நடுங்குகின்றோம்.

மற்றபடி அறிவிலும் நமது மக்களின் சராசரி அறிவு தெரிய வேண்டுமானால் 100-க்கு 7 பேரே கையெழுத்துப்போடதெரிந்தவர்கள். பெண்களிலோ 1000-க்கு 1½ பேர் கையெழுத்துப் போட தெரிந்தவர்கள். அதிலும் சிறந்த மூடர்கள் என்பவர்கள் பண்டிதக் கூட்டங்களிலேயே பெரும்பான்மையோராக இருந்தால் மற்றவர்களைப்பற்றி நாம் யோசிக்கவும் வேண்டுமா? ஆராய்ச்சி விஷயத்தில் ஆனால் வெளி நாட்டார்களின் ஆராய்ச்சியோ மின்சாரத்தின் மூலமும் தண்ணீர் ஆவியின் மூலமும் எண்ணெயின் சூட்டின் மூலமும் அவர்கள் செய்கின்ற அற்புதங்களுக்கு அளவே இல்லை. ஒவ்வொரு துறையிலும் நாளுக்கு நாள் முன்னேறுகின்றார்கள். செத்தவனை பிழைக்க வைக்க முயற்சித்து பலன் கண்டுகொண்டு வருகின்றார்கள். நக்ஷத்திர மண்டலத்திற்கு போக முயற்சிக்கிறார்கள். மணிக்கு 500 மைல் வேகம் பறக்கப் பார்க்கிறார்கள். ஒரு வாரத்தில் 6000 மைல் தூரமுள்ள சீமைக்குப் போகிறார்கள். ஒரு மணி நேரத்தில் 10000 மைல்களுக் கப்பாலுள்ள செய்தியை அறிகின்றார்கள். ஒரு பீரங்கி வெடியில் பதினாயிரக் கணக்கான மக்களை உயிர்வாங்கும்படியான யுத்த முறைகளைக்கண்டு பிடித்திருக்கின்றார்கள். கண் மூடி திறப்பதற்குள் மின்னி மறையும் மின்னலிலிருந்து மின்சார மெடுக்கின்றார்கள். தண்ணீர் வீழ்ச்சியிலிருந்தும் சூரிய வெப்பத்திலிருந்தும் மின்சாரம் உண்டாக்குகிறார்கள்.

எண்ணெய் இல்லாமல் நெருப்பில்லாமல் தண்ணீர் இல்லாமல் கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தால் அது ஓடிக் கொண்டிருப்பது போல் தானாக சாவி கொடுப்பதின் மூலம் ஓடும்படியான மாதிரியில் இயந்திரங்களையும் வண்டிகளையும் செய்ய முயற்சித்து வருகின்றார்கள். ஆனால், நமது நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களுக்கோ என்றால் புல்லிலும் பூண்டிலும் கல்லிலும் மண்ணிலும் கடவுளைத் தேடி அவைகளுக்கு எப்படி பக்தி செலுத்துவது என்கின்ற வேலையே இன்னமும் முடிவு பெறாமல் இருக்கின்றது. மோக்ஷத்திற்குப் போகின்ற வழிகளைப்பற்றியே இன்னமும் பலருக்கு ஆராய்ச்சி முடிவு பெறவில்லை.

கடவுள்களுடைய எண்ணிக்கைகளும் பெயர்களும் அவர்களுடைய லீலைகளும் பெண்டுபிள்ளை வைப்பாட்டிகளும் இன்னமும் கணக்கு கண்டு பிடிக்கப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டி இருக்கின்றது. நாமத்தின் நடுவிலிடும் மஞ்சள் திருச்சூரணத்திற்கு சிவப்புத் திருச்சூரணத்திற்கும் உள்ள பெருமை சிறுமை வித்தியாசங்களுக்கும் பாதம் வைத்து இடும் நாமத்திற்கும் வளைவாய் இடும் நாமத்திற்கும் உள்ள பிரதானங்களுக்கும் உள்ள வித்தியாசம் கண்டு பிடிக்க நமது ஆராய்ச்சியால் முடியாமல் வெளி நாட்டு ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது நம்மைமோக்ஷத்திற்கு அனுப்ப அவதாரம் செய்த சமயாச்சாரிகள் சரித்திரமும் எண்ணிக்கையும் எப்படி நமக்குக் கிடைத்

தது? என்னும் விஷயம் யாரோ ஒருவர் சொல்வதை நம்புவதன் மூலம்தான் அறியக்கூடும் என்கின்ற நிபந்தனைகளை ஒப்புக்கொண்டாலும் என்ன சொல்லுவது என்கின்ற விஷயம் இன்னும் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றது. எந்த எந்த பாஷை, எந்த எந்த புஸ்தகம், யார் யார் படிக்கலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த ஊரில் எந்த எந்த கடவுளை யார் யார் எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கலாம், கும்பிடலாம் என்கின்ற விஷயமும், எந்த எந்த வீதியில் யார் யார் நடக்கலாம், எந்த எந்த ஜாதியார் எந்த எந்த ஜாதியாருக்கு எவ்வளவு எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டும் என்கின்ற விஷயமும், எந்த எந்த மாதிரிக்குடுமி யார் யார் வைத்துக்கொள்ளவேண்டும், எந்த எந்த மாதிரி வேஷ்டி யார் யார் கட்டிக்கொள்ள வேண்டும், யார் யார் எங்கெங்கிருந்து சாப்பிட வேண்டும் என்கின்ற விஷயமும் இன்னமும் ஆராய்ச்சியிலும் தர்க்கத்திலுமே இருந்து வருகின்றது. மற்றும் ஒரு ஜாதி ஆணும் ஒரு ஜாதிப்பெண்ணும் கூடினால் என்ன ஜாதி மனிதன் பிறப்பான்? என்பது இன்னமும் ஆராய்ச்சியில் இருக்கின்றது. நம்மைப் போன்றயாராவது என்ன ஐயா! மற்ற நாட்டார்கள் எவ்வளவோ முற்போக்கடைந்திருக்கும்போது நாம் இன்னமும் இந்த ஆராய்ச்சியில் இருப்பது சரியாயென்று கேட்டால் உடனே கோபம் வந்து, அட போ! உனக்கென்ன தெரியும்? நீ எவ்வளவு படித்திருக்கின்றாய்? எங்களுக்குப்புத்திசொல்ல வந்து விட்டாய்! மேனாட்டு ஆராய்ச்சி இரண்டு நாளைய வாழ்வு. அது இகத்தைப் பொறுத்தது. இன்றைக்கிருப்பவர் நாளைக்கு இருக்க மாட்டார்கள். இதெல்லாம் வாவென்றால் வரும் போஎன்றால்போகும். மனிதன் எதற்காகப் பிறந்தான்? அவன் வந்த வேலையை அல்லவா அவன் கவனிக்க வேண்டும்? அதுதான் ஆத்மார்த்தம் மோக்ஷ சாதனம் என்று சொல்லி ஏதோ ஒன்றை தனக்கும் புரியாமல் மற்றவர்களுக்கும் புரியாமல் பேசுகிறார்கள். யாராவது தட்டிப் பேசினால் உடனே “தோஷம் தோஷம்” என்று கன்னத்தில் அடித்துக் கொள்ளுகின்றார்கள்.

எனவே, நமது நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கின்றது. மற்ற நாட்டு முன்னேற்றம் எப்படி இருக்கின்றது என்பதை இதிலிருந்து யோசித்துப் பாருங்கள். பொதுவாக நமது மக்கள் முதலாவதாக 100-க்கு ஏழுபேர் தான் படித்திருக்கின்றார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா? இரண்டாவதாக நமது மக்கள் சாப்பாட்டிற்கில்லாமல் வேலையும் கூலியும் கிடைக்காமல் வெளி நாட்டிற்கு பதினாயிரக் கணக்கான குழந்தை குட்டி கர்ப்ப ஸ்திரீகளுடன் கப்பலேறி கண் காணாததும் முன்பின் அறியாததுமான நாட்டிற்குப்போய் கஷ்டப்பட்டுமடிகின்றார்கள் என்பதைஒப்புக்கொள்ளுகின்றீர்களா? மூன்றாவது மனிதனுக்கு மனிதன் இழிவாகவும் அவமானமாகவும் கருதத்தக்கபடி கீழ்மேல் ஜாதி பிரித்து பஞ்சமன் என்றும் மிலேச்சன் என்றும் சூத்திரன் என்றும் அழைக்கப்படுவதும் சமூக வாழ்வில் சுயமரியாதைக்கு ஈனமான நிலையில் தாழ்த்தப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் இருக்கின்றார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா?

நான்காவதாக அதுபோலவே ஒரு வகுப்பு மனிதர் தங்களை உயர்ந்த பிறவிகள் என்றும் பூலோகதேவர்கள் என்றும் சொல்லிக்கொண்டு மற்ற மக்களைத் தாழ்த்தி அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வருவதை ஒப்புக்கொள்ளுகின்றீர்களா?

ஐந்தாவதாக நாட்டுச் செல்வத்தில் பெரும்பாகம் ஏழைகளுக்கும் கையாலாகாதவர்களுக்கும் தொழிலுக்கும் கல்விக்கும் உபயோகப்படாமல் வெறும் கோயில்கட்டவும்கல்லைக் கடவுளாக்கவும் அதற்கு: கல்யாணம் உற்சவம், தேர் திருவிழா, தினம் பல தடவை பூஜை, அபிஷேகம், நகை, வாகனம், தீவட்டி, விளக்கு, சதுர் மேளம்,ஊர்கோலம் ஆகியவைகளுக்கு செலவாகின்றது என்பதை ஒத்துக் கொள்கின்றீர்களா?

அப்படியானால் இந்த நிலைமை இப்படியே வைத்துக்கொண்டிருப்பதால் நமது நாடு முற்போக்கடைய முடியுமா என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். இவைகளைத்திருத்தி இந்த வழியில் வீண் ஆகும் செலவுகளை மற்ற நாடுகளைபபோல் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் தொழிலுக்கும் செலவிட வேண்டுமென்று சொன்னால் அதை நாத்திகம், மத தர்ம விரோதம் என்று சொல்லுகிறார்கள். இது நாத்திகமா மத விரோதமாஎன்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

மற்ற நாட்டாரின் ஆத்திகமும் மத தர்மமும் அவர்கள் நாட்டில் 100 க்கு 100 பேரையும் படிக்க வைத்து அவர்கள் அத்தனை பேருக்கும் தாராளமாய் தொழில் சம்பாதித்துக் கொடுத்து பிச்சைக்காரர் என்பவர்களே தங்கள் நாட்டில் இல்லாமல் செய்து ஆராய்ச்சியின் மூலம் நாம் இன்னது என்று கண்டு பிடிக்க முடியாத மாதிரியில் அற்புதங்களைக் கண்டுபிடித்து வெளி நாட்டு செல்வங்கள் எல்லாம்தங்கள் நாட்டிற்கேவரும்படி செய்து கொண்டு மததர்மமாக நமது நாட்டில்பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரிகளும்மருத்துவஉதவிச் சாலையும்அநாதைப்பிள்ளைகள்பாதுகாப்புநிலயமும் “தீண்டாதார்கள்” சட்டசபை மெம்பராக்கவும் மந்திரிகளாக்கவும் தக்க மாதிரியில் கல்வியும் உத்தியோகமும் கிடைக்கத்தக்க மதமாற்றஸ்தாபனங்களும்ஏற்படுத்தி அதற்காக கோடிக் கணக்காக செலவு செய்தும் வருகின்றார்கள். இதை நீங்கள் தயவுசெய்து நன்றாய் கவனித்துப்பாருங்கள். நாம் இப்படியே இருந்தால் முன்னேற முடியுமா? மற்றநாட்டார்கள்முன்னிலையில் மானத்தோடு வாழ முடியுமா? நமது எதிரிகள் பழக்க வழக்கம் என்பதையும் பெரியோர்கள் போன வழி என்பதையும் கடவுள் கட்டளை என்பதையும் ஆயுதமாக வைத்துக் கொண்டுநம்மைமுன்னேறவொட்டாமல்தடுத்து வருவதற்கு நீங்கள் இனியும் இடங் கொடுக்காதீர்கள். உங்கள் புத்திக்கு சரி என்று பட்டதை தைரியமாகச் செய்யுங்கள். அது நாஸ்திகமானாலும் மகா பாதகமானாலும் நரகம் கிடைப்ப தென்பதானாலும் கடைசியாய் ஒரு சிறிதுகூட அந்த பூச்சாண்டிகளுக்குப்பயப்படாதீர்கள் என்பதாகப் பேசிமுடித்தார். பிறகு தலைவர் முடிவுரையுடன் திரு. வடிவேலு செட்டியார் வந்தனம் கூறியபின் இரவு 9½-மணிக்கு கூட்டம் முடிந்து உடனே ரயிலுக்குப் பிரயாணப்பட்டு விட்டார்கள்.

(ஒரு நிருபர்)

வட இந்தியாவிலும் “நாஸ்திகம்”

இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை ஒழித்துவிட்டு ருஷிய தேச ஆட்சி முறையை நிறுவச் சதியாலோசனை செய்ததாக 31பேர்கள் மீது கொண்டுவரப்பட்ட வழக்கு மீரத்தில் விசாரணையிலிருக்கிறது. இம் மாதம் 12ம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது பப்ளிக் பிராஸிகியூடர் “போல்ஷ்விக்காரர்கள் (எதிரிகள்) கடவுள் நம்பிக்கையை ஒழிப்பவர்கள். இவர்கள் கிறிஸ்தவக்கடவுள், மகமதியக் கடவுள், பௌத்தக் கடவுள் ஆகிய கடவுள்கள் மீதுள்ள நம்பிக்கையையெல்லாம் ஒழித்துவிட்டு இறுதியில் இந்துமதக் கடவுள்கள் மீதுள்ள நம்பிக்கையையும் தங்கள் ஆட்சி முறைக்காலத்தில் அழிப்பது நிச்சயம். இவர்கள் கொள்கைப்படி உலகத்திலுள்ள எல்லா மதங்களும் அழிந்துபட வேண்டும். இதற்கென இவர்கள் சர்வ மதங்களிலுமுள்ள குருக்களைக் கொன்று கோயில்களை இடித்துத் தகர்க்கும் திட்டத்தையே உழைப்புத் திட்டமாகக் கொண்டுள்ளவர்கள். கடவுளுக்கு எதிர்ப்பிரசாரம் புரியும் திட்டத்தைப் படைத்தவர்கள்............ இக்கொள்கைக் காரர்கள் தங்கள் மனோபாவங்களை வாழ்க்கையில் அநுசரித்து அதற்கேற்ற வேலைத் திட்டங்களையும் செய்து வருகிறார்கள். இதற்கென இப்படித்தான் செய்தல் வேண்டும், லட்சியங்கள் இவைகள்தான் என்றும் இவர்கள் வரையறுத்துள்ளனர்” என்று எடுத்துக் காட்டினார்.

அப்போது எதிரிகளின்வக்கீல்எதிரிகள் மீது தப்பெண்ணம் கற்பிப்பதற்காக இந்த விஷயங்களைப் புகுத்திப் பிரசாரம் செய்யப்படுகின்றது என்று கூறினார். வழக்கின் தத்துவம் எவ்விதமாயினும் உலகமெங்கும் கடவுள் மத சம்பந்தமான இத்தகைய உணர்ச்சி பரவி யிருக்கிறதென்பதற்கும் அதிகமாகப் பேசப்படுகிறது என்பதற்குமே இதை எடுத்துக் காட்டினோம்.

அகில இந்திய முஸ்லிம் மகாநாடு

அகில இந்திய முஸ்லிம் மகாநாட்டுக் காரியதரிசி திரு. பசல் ரஹிமத்துல்லா பம்பாயில் 26-ந்தேதி நடைபெறப்போகும் மகாநாட்டுக் காரியக் கமிட்டியின் முதற்கூட்டத்தில், இந்தியசட்டசபைக் கால நீடிப்பைபற்றியும் பிரிட்டிஷ் மக்களுக்கு முஸ்லிம் கருத்துக்களை விளக்கும்பொருட்டு இங்கிலாந்திற்குத் தூதொன்று அனுப்புவதைப் பற்றியும் விவாதிக்கப்படுமென்று அறிவிக்கின்றார். இங்கிலாந்திற்குத் தூது அனுப்பும் விஷயமாக ஆஹாகானின் அபிப்பிராயம் கூட்டத்தில் விவாதிக்கப்படும். முஸ்லிம்கட்குள் பிரசாரம் புரிய அங்கத்தினர்களைச் சேர்க்கும் விஷயமும் விவாதிக்கப்படுவதோடு. சுயராஜ்யக்கட்சியினின்றும் ராஜிநாமா செய்த திரு. ஷாபி தாவுதியை வாழ்த்துவதாகவும், காங்கிரஸ் கட்சியிலுள்ள மற்ற முஸ்லிம் அங்கத்தினரும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்படுமென்றும் தெரிகிறது.

காஞ்சிபுரம் யாகக்கொலை

நாலைந்து நாட்களாக இங்கு நடந்துவந்த யாகக் கொலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. போலீஸ் காவலினால் எத்தகைய எதிர்பாராத சம்பவமுமில்லாமற் போயிற்று. இத்தகைய யாகக் கொலைக்கு விரோதமான கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டிருந்த பார்ப்பனர்கள் சிலரைச் சமுதாயப் பகிஷ்காரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாய்ச் சொல்லப்படுகின்றது.

சுயமரியாதையே -

- - சுக வாழ்வு

பார்ப்பனனுக்கும் சைவனுக்கும் சம்பாஷணை

(சித்திரபுத்திரன் எழுதியது)

சைவன்:-ஓய்! என்னங்காணும் அய்யரே! நீர் இப்போது மாமிசம் சாப்பிடுகின்றீரே! என்ன இப்படி கெட்டுப்போய் விட்டீர்.

பார்ப்பனன்:-வாரும் வாரும் பிள்ளைவாள்! எனக்கு வர வர ஜீவ ஹிம்சை என்றால் சற்றும் பிடிப்பதே இல்லை. இன்றைக்குச் சாகின்றோமோ, நாளைக்குச்சாகின்றோமோ; இதற்குள் ஏன் அநியாயமாய் பல ஜீவன்களை ஹிம்சை செய்யவேண்டுமென்பதாகக் கருதியே இனிமேல் காய்கறிகள் சாப்பிடுவதில்லை என்று தீர்மானித்து மாமிசம் சாப்பிடத் துணிந்து விட்டேன்.

சைவன்:-என்னங் காணும் பார்ப்பனர் ஜீவ ஹிம்சை கூடாதென்கின்றீர். அதற்காக மாமிசம் சாப்பிடுகின்றேன் என்கின்றீர். இது என்ன போக்கிரித்தனமா அல்லவா.

பார்ப்பனன்:-கோபித்துக் கொள்ளாதீர் ஐயா! நீர் சைவரல்லவா? உமக்கு வெறும் கோபந்தான் வருமேயொழிய விஷயம் புலப்படுவது தான்கஷ்டம்.

சைவன்:-என்ன பார்ப்பனக் குறும்பு நம்மிடம் காட்டுகிறாய். பார்ப்பான்மாமிசம் சாப்பிட்டுத்தான் இந்த நாடு பாழாச்சுது.

பார்ப்பனன்:-இந்த நாடு தான் பார்ப்பனன் மாமிசம் சாப்பிட்டு பாழாச்சுது சரி, வெள்ளைக்கார நாடு என்ன சாப்பிட்டு நல்லா ஆச்சுது? தவிரவும் இந்தியாவில் உள்ள 33 கோடி மக்களில் மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் எத்தனைபேர் சாப்பிடாதவர்கள் எத்தனையோ பேர் என்பது உமக்குத் தெரியுமா? 7 கோடி மகம்மதியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஒரு கோடி கிருஸ்தவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். 6 கோடி தீண்டாதார் என்கின்றவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். க்ஷத்திரியர் என்கின்றவர்களில் சிங்கு க்ஷத்திரியர்கள் மாராட்டா க்ஷத்திரியர் நாடார் க்ஷத்திரியர் வன்னிய க்ஷத்திரியர் நாயுடு க்ஷத்திரியர் செங்குந்த க்ஷத்திரியர் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வை வகுப்பார்களில் வாணிய வைசியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். நாட்டுக்கோட்டை தன வைசியவகுப்பார்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வேளாளர்களில் கொங்கு வேளாளர்கள் கார்காத்தவேளாளர்கள் உடையார் வேளாளர்கள் மறவ வேளாளர் படைத்தலை வேளாளர்கள் வடுக வேளாளர்கள் நாட்டார் வேளாளர் ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். திருநெல்வேலிதஞ்சாவூரில் உள்ள சில வேளாளர்கள் அவர்களைச் சேர்ந்த வெளியில் உள்ள சிலர்கள் தவிர மற்ற எல்லா வேளாளர்களும் மாமிசம்சாப்பிடுகிறார்கள். கடைசியாகபிராமணர்களென்பவர்களிலோ சௌராஷ்டிரப் பிராமணர்கள்,வில்வப் பிராமணர்கள்,தேவாங்கப் பிராமணர்கள் சாலிய பிராமணர்கள் கொங்கிணி பிராமணர்கள்,கவுடப்பிராமணர், காஷ்மீரப்பிராமணர்கள் மச்சப் பிராமணர்கள் அம்பஷ்டப் பிராமணர்கள்முதலிய பல பிராமணர்களும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். இந்தியாவில் இவர்கள் எண்ணிக்கைகளை யெல்லாம் சேர்த்தால், குறைந்தது 15 கோடிக்குக் குறையாது. அடியோடு மாமிசம் சாப்பிடாதவர்கள் சுமார் ஒரு கோடி இருக்கலாமா என்பது சந்தேகம். 35 கோடியில் ஒரு கோடி அதாவது 100க்கு மூன்று பேராகலாம். தவிர இந்தியர் தவிர உலக மக்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். எனவே மொத்த ஜனத்தொகையில் 100க்கு 99½ பேர்களை ஜீவகாருண்யமற்றவர்கள் என்று நீர் சுலபத்தில் சொல்லிவிட முடியுமா? சொல்லும் பார்ப்போம்.

சைவன்-என்னங்காணும் பார்ப்பனன் நீர் மாமிசம்சாப்பிடுகின்றீரே இது யோக்கியமா? என்றால்ஊர்கதையெல்லாம் பேசுகிறீர்.

பார்ப்பனன்:-சொல்லுவதை கவனமாய்க்கேளும் சைவரே! வெறுங் கோபம் ஒரு காசுக்கும் உதவாது அதெல்லாம்அந்தக்காலம் இது அறிவு ஆராய்ச்சி சையன்சு காலம் தெரியுமா? நான் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று நினைத்து வெகு நாளாய் சாப்பிடாதிருந்தது உண்டு. அது எதற்காக என்றால் ஜீவகாருண்ணியத்தை உத்தேசித்துதானே ஒழியவேறில்லை பிறகு இத்தனைபேர்கள்மாமிசம் சாப்பிடுவதை கணக்குப் பார்த்து உலகத்தில் 100-க்கு 99½ பேருக்கு ஜீவகாருண்ணியமில்லாமல் இருக்குமா? இப்படி ஒருகடவுள்மக்களைபிறப்பித்திருப்பார் என்றுயோசித்துயோசித்துமயங்கிக்கிடந்தேன்.

கடைசியாக திரு சர். ஜகதீச சந்திர போஸ் மரம் கொடி செடி புல் பூண்டு ஆகியவைகளுக்கு உயிர் இருக்கின்றது அவைகள் தொட்டாலும், நாடினாலும், முறித்தாலும்,பறித்தாலும் கஷ்டப்படுகின்றன என்பதைக்கண்டு பிடித்தபிறகு தான், சரி,எது ஜீவகாருண்யம்?என்பதை ஆராயப் புகுந்தேன்.

காய்கறிகள் சாப்பிடுவதைவிட மாமிசம் சாப்பிடுவதுதான் அதிகமான ஜீவகாருண்யம் என்பதாக உணர்ந்தேன். எப்படி என்றால், உயிர் இருப்பதால் அது ஜீவனாகின்றது. ஜீவனை வதைத்துச் சாப்பிடுவது மாமிசமாகின்றது. ஆகவே, ஒரு செடியின் தழைகளை கிள்ளிப் பிடுங்கும்போதும், காய்களை அறுக்கும்போதும், கிழங்குகளைப் பறித்துவாடவைக்கும் போதும் அவைகள்படும்பாடு சித்திரவதைக்கு ஒப்பாகிறது என்று போஸ் சொல்லுகிறார். எனவே ஒரு ஜீவனை தினந் தினம் பல தடவை வதைசெய்து அதை துன்புறுத்துகின்றோம் என்பதை உணர நேரிட்டது.இப்போதும்அதை நினைத்தால் சகிக்க முடியாத துக்கம் வருகிறது ஆனால் மாமிசம் அப்படியல்ல ஒரு ஜீவனை சாப்பிடுவதனால் தடவைக்கு மேல் யாரும் தொந்திரவு செய்யமாட்டார்கள். அதுவும் க்ஷணத்தில் முடிந்து போகும். ஆதலால் தான் கிழங்கு, கீரை, காய், கறியை விட மாமிசம் சாப்பிடுவது ஜீவகாருண்யமாகும் என்று சொன்னேன். ஆதலால் ஓய்! சைவரே நான் உம்மைவிட குறைந்த ஜீவகாருண்ணியமுடையவன் என்று எண்ணிவிடாதீர். தவிர திரு. போஸ்காய்கறிகளுக்கு உயிர் இருப்பதைஇன்று கண்டுபிடிந்தார்.ஆனால் மாமிசம் சாப்பிடும்மக்கள் வெகுகாலத்திற்கு முன்பேகண்டுபிடித்துத்தான் மாம்சம்சாப்பிடுகின்றார்கள் என்பதாகத் தெரிகின்றது. அன்றியும், வேதமும் மனு தர்ம சாத்திரமும் கண்ணப்பநாயனரை ஒப்புக்கொண்டசைவப்புராணங்களும் இதை அறிந்துதான் மாமிசத்தை அனுமதித்திருப்பதோடு மாமிசத்தை மறுக்கும் பிராமணன் இருபத்தொரு தலை முறைக்கு நரகத்தை அடைவான் என்று மனுதர்மசாத்திரமும் வேதமும் கூறுகின்றன தெரிந்ததா? சைவரே.

சைவன்:—ஓய் ஓய் பார்ப்பனரே சரிதான் கடையைக் கட்டுங்காணும். உம் ஆராய்ச்சியையும், சயன்சையும் சாஸ்திரத்தையும் வேதத்தையும் புராணத்தையும் கொட்டை அடுப்பில் வைத்துக்கொளுத்தும். என்றைக்கு ஆராய்ச்சியும், சையன்சும் உலகத்தில் தோன்றிற்றோ அன்றே எல்லாம் கெட்டுது கடைசியாக முழுமுதற் கடவுளான சிவன் தலையில் கை வைக்க வந்து விட்டது. இந்தப் பாழும் அறிவும், ஆராய்ச்சியும், சயன்சும் என்றைக்கு ஒழியுமோ அன்றுதான் சைவம் தழைக்கும். ஆதலால், இவை ஒழிய தவம் கிடப்போம். போம் போம். பார்ப்பானே போம். உம்மைப் பார்த்ததற்கும் உம்பேச்சைக் கேட்டதற்கும் கண்களையும் காதுகளையும் கழுவவேண்டும்.

பார்ப்பான்;—அய்யா சைவரே! நன்றாய்த் தவம் கிடங்கள். அதுவும் திரு. ஜகதீஸ் சந்திர போசும் இயற்கை ஆராய்ச்சியும், சுயமரியாதை இயக்கமும் ஒழியட்டும் என்று தவம் கிடங்கள். இதில் எது மீதியானாலும் உங்கள் சைவமும், உங்கள் ஜீவகாருண்யமும் சிறிது கூட நிலைக்காது. தவிர, என்னைப் பார்த்ததற்கும், என் பேச்சுகளைக் காதில் கேட்டதற்கும் மகா பாதகம் தீர்த்த குளத்தில் போய் குளியுங்கள் கழுவினால் மாத்திரம் போதாது.

காங்கிரசு கட்டுப்பாடு.

சட்டசபை தேர்தல் காலாவதியை சர்க்கார் ஒத்திப்போட்டுவிட்டதினால் காங்கிரசுக்காரர்கள் தங்களது சுயமரியாதையையும் அதிருப்தியையும் காட்டுவதற்கு அறிகுறியாய் இனிமேல் கூடப்படப்போகும் சட்டசபை மீட்டிங்குகளுக்கு மறு தேர்தல்வரை யாரும் போகக்கூடாது என்று எல்லா இந்திய காங்கிரசு கமிட்டியார் திரு. காந்தியவர்கள் யோசனைப்படி தீர்மானம் செய்து எல்லா மாகாணங்களுக்கும் சார்வு செய்தாய்விட்டது. அதை எல்லோரும் ஒப்புக்கொண்டதாகவும் பத்திரிகைகளிலும் வெளிவந்து விட்டது. ஆனால், சென்னை மாகாண தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்களான பார்ப்பனர்கள் அக்கட்டுப்பாட்டுக்கு கட்டுப்பட முடியாதென்றும் தாங்கள் எல்லா இந்திய காங்கிரஸ் கட்டளையை மீறி சட்டசபைக்குப்போகப்போவதாகவும் இரகசியமாய்தீர்மானித்து இருக்கின்றார்கள். காங்கிரஸ் சட்டசபைக்கு போகும்படி கட்டளை இட்டால் வெகு பக்தியாய் அக்கட்டளையை நிறைவேற்றுவார்கள். வேண்டாமென்றால் கட்டுப்பாட்டை மீறுவார்கள். நமது பார்ப்பனர்களின் காங்கிரஸ் பக்தி நமது ஆஞ்சநேய ஆழ்வாருக்குக்கூட கிடையாதென்றே சொல்லலாம்.

திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதைப் பிரசுர சபை.

திருவாளர்கள் ஏ. ராமநாதர் ,எம். ஏ- நேட்டோ, எஸ். குற்றாலலிங்கம் ஆகியவர்களின் நன் முயற்சியால் திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதைப் பிரசுர சபை ஒன்று திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளை அவ்வப்போது துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்துவது இச் சபையின் முக்கிய நோக்கம் என்று தெரிகிறது. 15-6-29 தேதியிலிருந்து "தொண்டன்" என்றபெயருள்ள வாரப் பத்திரிகையும் வெளிவருகிறது.

சென்னைத் தமிழர்சங்கம் காஞ்சீபுரம்

28-5-29ந் தேதி சென்னைத் தமிழர் சங்க ஆதரவில் காஞ்சீபுரத்தில் மணி திருநாவுக்கரசு முதலியார் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் பண்டித எஸ்.எஸ். ஆனந்தம், ஜே. என். ராமநாதன், டாக்டர் மாசிலாமணி முதலியார் ஆகியவர்கள் சுகாதாரத்தைப் பற்றியும் தமிழர் முன்னேற்றத்தைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

"குடி அரசு" சென்னைக்கு வந்துவிட்டது.

சுமார் 5, 6 மாத காலமாய் தெரிவித்து வந்தபடி "குடி அரசு" இந்தவாரம் முதல் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றது. ஈரோட்டிலிருந்து சென்னைக்கு மாற்றியதால் குறைந்தது இரண்டு வார பத்திரிகையாவது வெளியிடத் தடைப்படும் என்று எண்ணி வாசகர்களிடம் 2 வார கால சாவகாசம் கேட்டிருந்தோம். 'திராவிடன்' பத்திராதிபர் திரு. ஜே.எஸ்.கண்ணப்பர் அவர்களின் உதவியால் ஒரு வார சாவகாசத்திலேயே வெளியிட முடிந்துவிட்டது. எனவே, இது விஷயத்தில் திரு. கண்ணப்பருக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம
வஞ்சம் பொய் களவுசூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

சென்னை 1929 ஜுன் 16உ

நமதியக்க ஸ்தாபனம்

சுயமரியாதை இயக்க ஸ்தாபனமானது சென்னையில் பொது ஸ்தாபன பதிவு சட்டப்படி சென்னையில் பதிவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வரப்டுகின்றன. அது முடிந்தவுடன் 'குடிஅரசு' 'ரிவோல்ட்' ஆகிய வாரப்பத்திரிகைகளும் 'பகுத்தறிவு' என்னும் மாதப்பத்திரிகையும் சுயமரியாதைச் சங்க சார்பாகவே பிரசுரிக்கப்படும். 'திராவிடன்' தினசரிப் பத்திரிகையும் அதன் நிர்வாகப் பொறுப்பு நம்மிடம் இருக்கும்வரை இச்சங்கச் சார்பாகவே பதிப்பித்து வரப்படும்.

சுமார் இரண்டு வருஷகாலமாகவே பத்திரிகைகள் நடத்தும் பொறுப்பை யார் வசமாவது ஒப்புவித்து விடுவதற்கு நாம் மிகுதியும் முயற்சிசெய்து வந்தது நாம் பல நண்பர்களிடம் நேரில் தெரிவித்துக் கொண்டதாலும் பத்திரிகையின் ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்தில் எழுதி வரும் தலைபங்கத்தாலும் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். பத்திரிகை நடத்துவதில் உள்ள கஷ்டம்- அதுவும் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தின் பிரசாரத்திற்காக நடத்தப்படும் பத்திரிகைகளுக்கு இருக்கும் கஷ்டம் அதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியவரும். உதாரணமாக "ஜஸ்டிஸ்" 'திராவிடன்' பத்திரிகைகள் தென்னிந்திய நலவுரிமைச்சங்க சார்பாக சுமார் 12 வருஷத்திற்கு மேலாகவே நடந்து வருகின்றன. அசற்கு இந்த மாகாணத்திலுள்ள பெரிய பெரிய பிரபுக்களும் ராஜாக்களும் ஜமீன்தாரர்களும் மற்றும 100-க்கு 97 வீதம் உள்ள பொதுஜனங்களும் ஆதரித்தும் பதினயிரக்கணக்காக பணம் கொடுத்தும் வந்திருக்கின்றார்கள். அச்சங்கத்தார் அதிகார ஆதிக்கம் பெற்றகாலத்திலும் அதாவது மந்திரிகள் இருந்த காலத்திலும் மாதம் 1-க்கு 3000 ரூபா வீதம் உதவி வந்தார்கள். இந்த மாதிரி உதவி செய்ததன் மூலம் சுமார் 2 லக்ஷ ரூபாய்கள்வரை இப்பத்திரிகைகளுக்குபணவுதவி கிடைத்தும் இன்றைக்கும் தன்காலில் நிற்கமுடியாமல் மாதம் 2000 ரூபா போல் கஷ்டத்தில் நடைபெறவேண்டியிருக்கின்றது. இவ்வளவு ஜனக்கட்டும் பணக்கட்டும் செல்வாக்கும் இருக்கும் பத்திரிகைகளின் கதியே இப்படியானல் நம்போன்றவர்கள் அதிலும் செல்வாக்குள்ள கொள்கைகளுக்கு எதிராகவும் ஆதிக்கமும் அதிகாரமும் சூழ்ச்சியுமுள்ள சமூகங்களுக்கு விரோதமாகவும் ஒரு பத்திரிகையைத் துவக்கினல் அதில் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை யோசித்தால் தெரியும். அதோடு மாத்திரமல்லாமல் சந்தாவும் வெகு சுருக்கமான தொகை. அதாவது வருஷத்திற்குமூன்றே ரூபாய். 20 பக்கமுள்ள பத்திரிகையின் காகிதக் கிரயம், அச்சுக்கூலி, ஸ்டாம்பு ஆகியவைகளுக்கே சந்தா தொகை போதும் போதாத நிலையில் இருக்கின்றது. இதில் நிலுவை பாக்கி வீண் செலவு ஆகியவைகளும், ஆசிரியக் கூட்டத்திற்கும், கணக்கு நிர்வாகத்திற்கும் கைப்பொறுப்பு என்று தான் சொல்ல வேண்டும். இந்த நிலையில் பத்திரிகை ஆரம்பித்த 4 வருஷ காலத்தில் ஒரே ஒரு தலையங்கம் மாத்திரம் அதுவும் காயலாவாய் படுத்த படுக்கையில் இருந்த சமயம் தவிர பாக்கி எல்லா தலையங்கமும் நம்மாலேயே எழுதப்பட்டு வந்திருக்கின்றது. ஆரம்பத்தில் ஒவ்வொரு வாரமும் 12 பக்கமும் நாமாகவே எழுதிவந்திருக்கின்றோம். இந்த நிர்ப்பந்தத்தில் வாரம 2, 3 நாள்களுக்குக் குறையாமல் வெளிப் பிரயாணமும்செய்து வந்திருக்கின்றோம். இதன்றி பிரசாரகர்களையும் பல இடங்களுக்கு அனுப்பியும் வந்திருக்கின்றோம்.

இம்மாதிரி எவ்வளவோ கஷ்டமும் நஷ்டமும் அடைந்து கொண்டு இப்பத்திரிகையை நடத்தி வந்திருக்கின்றோமென்றாலும், சாதாரணமாக இந்தத் தொண்டில் எனக்குப் பெருத்த லாபம் இருப்பதாகவும், மாதம் 1000, 2000 வரும்படி வருகின்றதென்றும் உண்மைபாகவே பலர் நம்பி இருக்கின்றார்கள். சமீபத்தில் எமது குடும்பத்தில் கட்டப்பட்ட வீட்டைப்பார்த்து பெண்கள் குழந்தைகள் எல்லாம், பத்திரிகை லாபத்தாலும் பிரசாரத்திற்குப் போகிற இடத்தில் கிடைக்கும் லாபத்தாலும் கட்டப்பட்டதென்றே நமது காதுக்கு எட்டும்படியாக பேசிக்கொண்டு போகின்றார்கள். இதை எதற்காக எழுதுகின்றோம் என்றால், பொது நலசேவையில் உண்மையாக கஷ்டமும் நஷ்டமும் கெட்ட பேரும் பழியும் அடைகின்ற மக்களைப் பார்த்தால் பெருத்த லாபமடையும் சுயநலக்காரர்களைப் போலத் தோன்றுவதும், பொது வாழ்க்கையின் பேரால் பண லாபமும் சுகமும் கீர்த்தியும் பெறுகின்றவர்களைப் பார்த்தால் பெரிய தியாகிகள் போலவும் கஷ்ட நஷ்டம் அனுபவிப்பவர்கள் போலவும்காணப்படுவதும் உலக இயற்கைகளில் ஒன்றாயிருக்கின்றது என்பதைக் காட்டவே எழுதினோம்.

எது எப்படி இருந்தபோதிலும் எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் பழியும் ஏற்பட்டிருந்தபோதிலும் மொத்தத்தில் நமது தொண்டினல் நாம் நமது யோக்கியதைக்கு மேலான லாபத்தை அடைந்திருக்கின்றோம் என்பதை மனதார ஒப்புக் கொள்ளுகின்றோம். அதாவது நமது இயக்கம் பரவி இருக்கின்ற அளவுக்கு நாம் கொடுத்த விலை மிக மிகக் கொஞ்மென்றுதான் சொல்லுவோம். நிற்க, இதுவரை அதாவது நஷ்டமும் கஷ்டமும் உள்ளவரை நாம் நமது சொந்தப் பொறுப்பில் நடத்தி வந்து இப்போது இனிமேல் எந்த விதத்திலும் இதற்கு நட்டம் வாராது என்பதோடு கவனித்து நடத்தினல் சகல லாபமும் கிடைக்கும் என்கின்ற நிலையில் அதுவும் 9000 பிரதிகளுக்குமேல் வெளியாகத் தக்க நிலைமையில் அதை ஒரு பொது ஸ்தாபனத்தின் பொறுப்பில் விடுவதைப்பற்றி யாரும் எவ்வித தப்பபிப்பிராயத்தையோ பலக் குறைவையோ கற்பிக்க முடியாதென்றே சொல்லுவோம். மற்றபடி இப்படி நாம் ஒப்பிவிட்டதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால், சுயமரியாதை இயக்கம் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய இயக்கமாக இருக்கக் கூடாது என்கின்ற ஒரே எண்ணமே தவிர வேறில்லை. ஏனெனில், ஒத்துழையாமை இயக்கம் திரு. காந்தியின் தனி இயக்கமாக இருந்ததாலும் ஒத்துழையாமைக்கும் சத்தியாக்கிரகத்திற்கும் திரு. காந்தி ஒருவரே பாஷியக்காரராயிருந்ததினலும் அது அவர் காலத்திலேயே ஏதோ ஒரு காலத்தில் நடந்தது என்று சொல்லும்படி ஆகிவிட்டது. எந்த இயக்கமானலும் இயக்கத்தைத் தொடங்கினவர் பலக்குறைவுடையவராக ஆகிவிட்டாலும் அல்லது செத்தேபோய்விட்டாலும் அவருக்குப் பிறகும் நடக்கும்படியான நிலைமையில் அதை வைத்துவிட்டுப் போனல்தான் அது ஏதாவது பலனைக்கொடுக்க முடியும். அப்படிக்கில்லாமல் தன் கையிலேயே வைத்துக்கொண்டு தன் இஷ்டப்படி தன்னைச்சுற்றிக் கொண்டே திரியும் சிஷ்யர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு வாழ்நாளைக் கடத்தி வந்தால் அவ்வியக்கத் தலைவன் இறந்தவுடன் அத்தலைவனது பிணத்

தைச் சுட்ட இடத்தை மடமாகவோ கோயிலாகவோ கட்டி அதில் ஒரு படத்தையும் உருவத்தையும் வைத்து பூஜைசெய்கின்ற வேலையோடு அவ்வியக்கத்தின் பலன் முடிவெய்தி விடும்.

ஆதலால் தான் அதை இப்போதே சர்வ சுதந்திரமாய் பொது ஜனங்கள் வசம் விட்டு விட்டோம். ஆனால், இப்பத்திரிகைகளை நடத்தும் கொள்கைகளை மாத்திரம் நாம் வைத்துக் கொண்டு இருக்கின்றோம். தவிர நமது இயக்கத்தைப் பற்றிநமது எதிரிகளும் அவர்களது கூலிகளும் பலவாறான கெட்ட எண்ணத்தோடு பொது ஜனங்களுக்குத் திரித்துக் கூறி இதுவரை எவ்வளவோ விஷமப் பிரசாரம் செய்து வந்தும் ராமாயணக் கதையில் வாலிக்கு அவனை எதிர்ப்பவர்களுடைய பலத்தில் பாதிஅவனுக்குப் போய்ச்சேருகின்றது என்றதுபோல இவ்வியக்கத்தின் எதிரிகளுடைய பிரசாரத்தால் நமதியக்கம் பாமர மக்களிடை பரவவும், அவர்களுக்கு இருக்கும் சந்தேகங்கள் விளங்கி தெளிவடையவும் பெரிதும் உபயோகப்பட்டு வந்திருக்கின்றது. அன்றியும் வெளியிடங்களிலும் பரவத்தலைப்பட்டு விட்டது.

தவிர நமது இயக்கத்தை அழிக்க எதிரிகள் கைக்கொண்ட சூழ்ச்சி ஆயுதம் இரண்டே இரண்டு தான். அதாவது நாம் மதத்திற்கு விரோதி என்பதும் மக்களுக்கு கடவுள் உணர்ச்சியை கெடுக்கின்றோம் என்பவைகளே. இவ்விரண்டு காரியங்களையும் நாம் செய்கின்றோமோ இல்லையோ என்பது ஒரு பக்கமிருந்தாலும், அவர்கள் சொல்லும் மேற்படி இரண்டு காரியங்களும் இப்போது உலகத்தில் காட்டுத் தீபோல் பரவிவருகின்றது. இன்றைய மலரில் வேறு ஒரு பக்கம் வெளியிட்டிருக்கும் வெளிநாட்டு செய்தி ஒன்று ஐரோப்பாநாட்டிலுள்ளமாஸ்கோ என்கின்ற நகரில் கடவுள் மறுப்பு மகாநாடு ஒன்று கூடி உலகத்தில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும் காட்சியாளர்களும் வந்து கடவுளையே மறுத்து தீர்மானங்கள் செய்திருக்கின்றார்கள். கடவுள் மறுப்புக்கு ஆதாரமாய் அனேக கண் காட்சிகளையும் வைத்துக் காட்டி அதை உலகமெல்லாம் பிரசாரம் செய்ய கமிட்டிகள் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

அது மாத்திரமல்லாமல் அந்த தேசத்தில் உற்சவங்கள்கூட நடத்தக்கூடாது என்று அரசாங்கத்தின் மூலம் உத்திரவுகள் போடச் செய்ததோடு அதைப் பிரசாரமும் செய்து வருகின்றார்கள். இவை நிற்க, நமது நாட்டிலேயே பம்பாய் மாகாணத்தில் சென்ற வாரத்தில் ஒரு சுயமரியாதை மகாநாடு கூட்டி ஐயாயிரக்கணக்கான மக்கள் கூடி கடவுள் பூசைக்காக சர்க்கார் கொடுத்துவரும் மோகினித்தொகையை (தஸ்தி தொகை) நிறுத்திவிடவேண்டுமென்று தீர்மானம் செய்திருப்பதுடன் ராமாயணம், பாரதம் மனுஸ்மிருதி முதலிய மத ஆதாரங்கள் என்பவைகளை பறிமுதல் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்வளவும் ஒருபுறமிருந்தாலும் மீரத் சதி வழக்கில் எதிரிகளின்பேரில் சர்க்கார் வக்கீல் குற்றம் சாட்டுகின்ற முறையில் எதிரிகள் கடவுளை நம்பாதவர்கள் என்றும் கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரசாரம் செய்கின்றவர்கள் என்றும் சொல்லியிருக்கின்றார். எதிரிகளுடைய வக்கீலும் கடவுளை மறுப்பதும் கடவுள் நம்பிக்கையை ஒழிக்கப் பிரசாரம்செய்வதும் குற்றமாகாதென்றும் அதற்கும் இக் குற்றத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் வாதாடினாரே ஒழிய அது உண்மை அல்ல என்று சொல்லவே இல்லை. இதுவும் தவிர ஆப்கன் அரசர் அமானுல்லா அவர்கள் அவர் நாட்டு முல்லாக்கள் சூழ்ச்சியால் நாத்திகர் என்றும் இஸ்லாம் மத விரோதி என்றும் மதத்துரோகி என்றும் பழி சுமத்தப்பட்டு அரசை துறக்கச் செய்திருந்தாலும் நமது மாகாணத்தில் ஹைகோர்ட் ஜட்ஜாகவும் வங்காள மாகாண மந்திரியாகவுமிருந்த சர். அப்துர் ரஹிம் அவர்கள் மேற்படி அமீரைப்பற்றி வெகு பரிதாபப்பட்டு என்ன சொல்லுகின்றார் என்றால் "அமீரின் தத்துவங்களை ஆப்கானியர்கள் ஒப்புக் கொள்ளாததிலிருந்து அத்தேசத்தில் தேசிய உணர்ச்சி சிறிதும்இல்லை என்பதாகத்தெரிகின்றது. அமீருக்கு விரோதமாயிருந்தவர்கள் தேசத்துரோகியும் ராஜத்துரோகியுமாவார்கள். அமானுல்லாவைப் போன்ற தேச பக்தர் வேறு எந்தேசத்திலும் பிறக்கவில்லை. பண்டைய மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டியது அவசியம். அவ்வெண்ணம் கொண்டவர்கள் மிகவும் ஊக்கமாகவே இருப்பார்கள். அமீரின் கொள்கைகள் வெற்றி பெற்றால் முஸ்லிம் நாடு உலகத்தில் ஒரு சிறந்த நாடாய் இருக்கும்" என்று பேசி இருக்கின்றார்.

எனவே இந்த மாதிரியாக அனேக இடங்களில் இருந்து நமது இயக்கத்திற்கு ஆதரவுகள் தாராளமாய் கிடைத்து வருவதைப்பார்க்க நாம் எய்தும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆதலால் நமது வாலிப நண்பர்கள் நமது வேலையை ஒப்புக்கொண்டு நமக்கு வேண்டிய உதவிபுரிய கேட்டுக்கொள்ளுவதற்காகவே இந்த நீண்ட கட்டுரை எழுதினோம். அதாவது "குடி அரசு" இந்த இதழிலிருந்தே சுயமரியாதைச் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் உத்தேசத்துடன் அங்கத்தினராய் சேருவதற்கு ஒரு விண்ணப்ப ரூபமாக ஒரு துண்டு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதைக் கண்ணுறும்வாலிபர்கள் தயவுசெய்து கத்தரித்து அங்கத்தினர்களாகச் சேர்வதோடு மற்றவர்களின்கையொப்பத்தையும் சந்தா அணா இரண்டையும் பெற்று நமக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகின்றோம். இந்த வருஷ முடிவிற்குள் தமிழ் நாட்டில் ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டிய பொறுப்பை நமது வாலிபர்களுக்கே விட்டிருக்கின்றோம். அங்கத்தினர்கள் சேர்க்கும் ரசீது புத்தகங்களும் அச்சாகின்றன. சீக்கிரத்தில் வேண்டியவர்களுக்கு அனுப்பிக் கொடுக்கின்றோம்.

ஈரோடு கோயில் நுழைவு வழக்கு.

ஈரோடு கோயில் நுழைவு வழக்கை விசாரித்து வந்த சப் மாஜிஸ்ட்ரேட் ராவ்ஜீ அவர்கள் வேறிடத்திற்கு மாற்றப்பட்டு புதிதாக முஸ்லிம் மாஜிஸ்ட்ரேட் இவ்விடத்திற்கு வந்திருப்பதால் மேற்படி வழக்கை மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணை செய்வதற்கு இம்மாதம் 22-ம் தேதி வாய்தாப் போடப்பட்டிருக்கிறது.

காங்கிரசின் யோக்கியதை

காங்கிரசைப்பற்றி நாம் அதுபார்ப்பனர்களுக்கும் படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளுவதற்கு ஏற்பட்டஸ்தாபனமேயொழியஏழைகளுக்கும் குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உபயோகப்படக் கூடியதல்ல வென்றும் இவர்களுக்கு, கெடுதியை தரத்தக்க தென்றும் 4, 5 வருஷகாலமாக விடாமல் சொல்லி வருகின்றோம். இதனால் நம்மை பலர் காங்கிரஸ் துரோகி தேசத்துரோகி என்று சொல்லி விஷமப் பிரசாரமும் செய்து வருகின்றார்கள். ஆனால் வங்காளத்தில் எவ்விதத்திலும் சந்தேகப்பட முடியாத அமிர்த பஜார் பத்திரிகையானது,தனது தலையங்கத்தில், "காங்கிரசு பணக்காரர்கள், உயர்ந்தஜாதியார்கள்என்பவர்கள்இயக்கமாய்விட்டது. உயர்ந்த ஜாதிக்காரரும் படித்தவர்களுமே தலைவர்களாக இருக்கின்றார்கள். ஆகலால் தாழ்த்தப்பட்ட மக்கள் காங்கிரசை விட்டு விலகி விட்டார்கள் காங்கிரசுக்கு எதிரிகளாய் விட்டார்கள். முஸ்லீம்களும் அப்படியே விலகிவிட்டார்கள்" என்று எழுதி இருக்கின்றது.

இதிலிருந்து நாம் மாத்திரம் காங்கிரசை குற்றம் சொல்லுகின்றோமா எல்லா மாகாணத்திலும் குற்றம் சொல்லுகின்றார்களா? என்பதை தெரிந்துகொள்ளும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றோம்

இப்பொழுது மதம் எங்கே?

திருப்பதி தேவஸ்தான சமஸ்கிருத பாடசாலையில் வியாகரணம் இலக்கணம் வகுப்புகளில் பார்ப்பனரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுவது மதத்திற்கு விரோதமென்று மகந்தும் பள்ளிக்கூட அதிகாரிகளும் சொல்லி பார்ப்பனரல்லாதார்களை விலக்கி விட்டார்கள். இப்பொழுது மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் அப்பள்ளிக்கூடத்தில் எத்தகைய வகுப்பு வித்தியாசமும் இல்லாமல் எல்லா வகுப்பு பிள்ளைகளுக்கும் எல்லா பாடமும் போதிக்க வேண்டுமென்று உத்திரவு போட்டு விட்டார்கள். எனவே, இப்போது அந்த மதம் இருக்கிறதா போய் விட்டதா? என்று கேட்கின்றோம். பழைய காலத்தில் சர்க்கார் சம்பந்தமான மரங்களில் "பேய்" இருக்குமானால் 3 நாள் வாய்தா போட்டு சர்க்கார் முத்திரை போட்ட ஒரு தாக்கீதை அந்த மரத்தில் கட்டி விட்டால் அந்த வாய்தாவுக்குள் பேய் ஓடிப் போகும் என்பார்கள். அது போல் இப்போது சுப்பராய மந்திரவாதி தாக்கீதைக் கண்டால் மதப்பேய் பறந்து விடுவதாகத் தெரிகிறது.

பார்ப்பனக் கொலைபாதகர்கள்

காஞ்சிமா நகரத்தில், சின்னாட்களாக ஓர் யாகம் நடைபெற்று வருகின்றது. இதனைப் பசுபதி யாகம் என்று வழங்குகின்றார்கள். மேலும் இது வேத வேள்வியாம். பார்ப்பனர்கள் தங்கள் குல முறையாக பசுமாடு, ஆடு, பன்றி, குதிரை, மான் முதலிய மிருகங்களின் மாமிசத்தைப் புசித்து வந்திருக்கின்றார்கள். இன்றும் அந்த வழக்கத்தை ஏனைய பார்ப்பனர் கைவிடா விட்டாலும், பண்டிதர்கள், கனபாட்டிகள், சாத்திரிகள் முதலிய மாமிசம் உண்ணாதவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் வைதிகப் பார்ப்பனர், தங்கள் மதுபான இச்சையையும், புலாய் உண்ணும் வேட்கையையும் நிவர்த்தி செய்துகொள்ள முடியாதவர்களாய், யாகம் என்னும் பேரால், தங்களுக்கு விருப்பமான புலால் வகைகளை அருந்தி வருவது வெள்ளிடை மலையாம். இதற்கு வேத வேள்வி என்று பெயர். வேதம் என்ற ஒரு பதத்தை எந்தக் கொலைக்கு அடையாக உபயோகித்துக் கொண்டாலும் கூட உடனே அதனால் ஏற்படும் பாதகம் அகன்று விடுகின்றது. வேதத்தின் பேரால் ஆடுகளையும், தெய்வமென்று பார்ப்பனர் கூறும் மாடுகளையும் கொல்லலாம். வேதத்தின் பேரால் 'சோமரசம்' என்னும் மதுபானத்தை அருந்தலாம். வேதத்தின் பேரால் விதவைகளைப் புணர்ந்து கொள்ளலாம் இதற்குப் பவுண்டரீக யாகம் என்று பெயர். இத்தகைய யாகம் அண்மையில் வாளாடி என்னும் கிராமத்தில் வெகு சிறப்பாய் நடைபெற்றது. எனவே, வேத முத்திரையின்பேரில் பார்ப்பனர் என்ற சாதிச் செருக்கின் பேரில், இவர்கள் கொலையும், சூதும், சோரமும் புரிந்து வருகின்றார்கள். ஆனால், இதற்கு ஒரு மத சம்பிரதாயம் கற்பித்து, இத்தகைய கொலைகளையும் மதுபான கோலாகலத்தையும் விதவைகளின் லீலைகளையும் கடவுள் பேரால் இவர்கள் இயற்றி வருவது தான் மிகவும் குறிப்பிடத் தக்கது. கடவுளின் பேராலும் கடவுளால் அளிக்கப்பட்ட சாத்திரமென்று கூறும் வேதங்களின் பேராலும் பஞ்சமா பாதகங்களைப் புரிந்துகொண்டுதிரியும்இப்பார்ப்பனர்களின் கொடுமையானபழக்க வழக்கங்களை நாம் சுயமரியாதையுடன் அங்கீகரிப்பது எங்ஙனம்? மாமிசம் வேண்டுமென்றால் ஜீவகாருண்ய முறையில், சுகாதார முறையில், கொல்லப்பட்டு விற்பனை புரியப் படும் கசாப்புக்கடைகளில் சென்று இவர்கள் வாங்கி நன்றாகப் புசிக்கலாம். இப்பொழுது சிறிது சில ஜீவகாருண்யமுள்ள பார்ப்பனர்கள் எல்லாம், வேள்வி புரியாமலேயே ஆங்கிலேயர்கள் உணவுச் சாலைகளுக்கும், மற்றைய சி. மிலிட்டேரி உணவுச் சாலைகட்கும் சென்று வயிறாரப் புசித்து வருகின்றனர்; வைதிக பார்ப்பனர்களைப் போல் வேள்வி மூலமாக ஏமாற்றுவதில்லை. மேலும் மதுபானம் வேண்டுமென்றாலும் தாராளமாக சாராயக் கடைக்குச் சென்று வேண்டிய வரையில் அருந்தி வருகின்றார்கள் இத்தகைய பெருந் தன்மையான பார்ப்பனர்களை நாம் இன்றும் பார்த்து வருகின்றோம். ஆனால் வேதத்தையும் கடவுளையும் சான்று காட்டிக் கொடு வதை புரிந்து புலால் உண்ணுவது சிறந்த முறையா என்பதுதான் நமது கேள்வி. நிற்க, மிருகங்களைத் துன்புறுத்துபவர்களைச் ஜீவகாருண்ய சங்கத்தார் நீதிபதி முன்பாக நிறுத்தி அவர்களைத் தண்டிக்கும்படியும் செய்கின்றார்கள். ஆடுகளைப் புசிக்க வேண்டுமாயின், ஆடுகளைச் ஜீவகாருண்ய முறையில் கொல்ல வேண்டும் என்று அரசாங்கச் சட்டம் உள்ளது. இதனை மீறி நடப்பவர்கள் சட்ட மீறிய குற்றத்திற்காக தண்டிக்கப்படுதல் வேண்டும். இக்கொலைகாரப் பார்ப்பனர்கள் யாகம் செய்யும்போது, ஆடுகளின் பீஜங்களைப் பிடித்து நசுக்கி, முறுக்கிப் பிசைந்து, அவைகள் மூச்சற்றுப் போன நிலைமையில், அதாவது குற்றுயிராய் இருக்கும் நிலைமையிலேயே, அவைகளின் வயிற்றைக் கீறி மாமிசங்களை, எடுத்து, நெய்யுடன் கூடிய அக்கினியில் வறுத்துப் புசிக்கின்றார்கள். பீஜத்தைப் பிடித்துப் பிசைகின்ற செயல்,— அந்தோ! என்னென்போம்! சண்டாளர்கள்! பாதகர்கள்! நெஞ்சில் துளியும் ஈரமற்றவர்கள்! பீஜத்தைப் பிடித்துப் பிசையும் காலத்தில் அவ்வாடுகள் என்ன நினைத்தனவோ? அவைகள் மனமும், உயிரும் எவ்வாறு பதைத்தனவோ? உயர்ந்த சாதியினராகிய பார்ப்பனப் பெருங்குடிகளை வாழ்த்தினவோ? நாம் எவ்வாறு அறிதல் கூடும். மாமிச வெறியிருந்தால், பீஜத்தைப் பிடித்துப் பிசைந்தா கொல்லுதல் வேண்டும்? இவர்கள் பீஜத்தைப் பிறர் சற்றுப் பிசைவார்களாயின் அதனால் ஏற்படும் நோயை இவர்கள் பெண்டிரும் மக்களும் நின்று கண்ணாரப் பார்த்து அகமகிழ்வார்களா? இவ்வரசாங்கம் வயிற்றுக் கொடுமைக்காகப் பறவை பிடிப்பான் ஒருவன், ஒரு பறவையின் கண்களைத் தைத்து மற்ற பறவைகளைப் பிடித்தான் என்று சமீபத்தில் அவனுக்கு தண்டனை விதித்தது, நேற்றுத்தான் பறவைகளைச் சிறிய கூண்டினில் அடைத்து ஏற்றுமதி செய்த ஒரு முஸ்லிமுக்கு ஐம்பது ரூபாய் அபராதமும் வங்காளத்தில் விதித்ததாய் இன்று கேள்விப்படுகின்றோம். இந்தப் பார்ப்பனக்கொலைகாரர்களை, சித்திரவதை செய்பவர்களை, வாயில்லா ஆடுகளின் வாய்களை இறுகப்பிணித்து, அவைகளைக் கதறாமல் ஒடுக்கி பீஜத்தை நெரித்து வதை செய்யும் இரக்கமற்ற கொடிய பஞ்சமா பாதர்களை ஏன் தண்டிக்கக்கூடாது? இதற்கோர் சட்டமில்லையா? இது மதத்தின் பேராலும், கடவுள்பேராலும் நடைபெறுகின்றதாயின், அம்மதமும் அக்கடவுளரும் நமக்கு எதற்கு? நாம் அவைகளை ஏற்க மறுத்தால் நாம் நாத்திகர்களா? மேலும் பல கோடி சன்மங்களாய் நல்வினையை இழைத்து, அதன் பயனாய் பூலோகதேவர்களாய்ப் பிறந்த பார்ப்பனர்கள் பசுபதி யாகம் என்னும் பேரால் ஆடுகளைச் சித்திரவதை செய்து அவைகளின் புலாலை உண்டால், அவர்கள் கருத்துத்தான் என்னை? இது மோட்ச பதவி பற்றியென்று கூறுகின்றார்கள்? சித்திரவதைசெய்து மோட்சம் கிடைக்குமாயின், அந்த மோட்சம் எத்தகையதாய் இருக்க வேண்டும் என்பதை நாம் சற்று சிந்திப்போமாயின், மோட்சம் என்பது 'கொலைக்களம் என்றே பொருள் படுகின்றது. இதில் மற்றொரு விசேடம். இவ்வாடுகள்-கொலை செய்யப் பெற்ற, உடல் இருக்க பீஜங்களைப் பிசைந்து உயிர் கொல்லப்பெற்ற ஆடுகளும் மோட்சம் அடைகின்றனவாம்! என்னே இவர்கள் அடம்! எட்டுணையும் வாய் கூசாமல் இப்பெரும் பொய்யை வேதத்தின்பேரால்கூறி மாமிசம் புசிக்கின்றார்கள். புத்த மதமும் சமண மதமும இந்த வேள்வி ஒன்றைத் தகர்க்கும் பொருட்டேமுன் வந்தன. இவைகளில் கூறியுள்ள ஏனைய எல்லா அறநெறிகளையும் எல்லா பார்ப்பனர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இந்தக் கொடிய வேள்விகளைக் கண்டித்தமைபற்றித்தான் இவர்களை இப்பார்ப்பனர்களும் சைவர்களும் நாத்திகர்கள் என்று கூறித்தூற்றினர்; கழுவேற்றினர். பார்ப்பனர்கள் செய்யும் பாதங்களைக் கண்டிப்பவர்கட்கு நாத்திகர்கள் என்னும் பெயர் புத்தமதம் பரவத்தொடங்கிய காலத்திலிருந்தே வழங்கத் தலைப்பட்டு விட்டது. நாமும் இவர்கள் புரட்டை எடுத்து வெளியாக்குகின்றோமாதலின் நம்மையும் இவர்கள் நாத்திகர்கள் என்று கூறுகின்றனர். ஆனால், புத்தர்போன்ற ஜீவகாருண்ய வள்ளல்கள் இப்பார்ப்பனர்களாலும்(அ) சைவர்களாலும்நாத்திகர்களாகும் காலையில்,நாமும் அவர்களுடன்சேர்த்து ஒதுக்கப் படுவதனால் ஒரு சிறுமையை ஏய்துபவர்களென்று என்று நம்மைத் தூற்றும் பார்ப்பனர்களுக்கும் அவர்கள் கூலிகட்கும் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. காஞ்சிமா நகரத்தில், இப்படுகொலை நடைபெறும் காலத்தில் நெஞ்சில் ஈரமுடைய சில பார்ப்பனர்கள் பண்டித-சாத்திரி—கனபாட்டிகள் செய்யும் சித்திரவதையைக் கடிந்து பேசினார்களாம். இவர்களை வேள்வி செய்த பார்ப்பனர் சாதிப் பகிஷ்காரம் புரிந்து விட்டார்களாம். என்ன கொடுமை! சித்திரவதை செய்யும் பார்ப்பனப் படுகொலைப் பாதகர்களின் கூட்டத்திலிருந்து இவர்கள் பகிஷ்காரம் புரியப்பட்டது மிகவும் நன்மை என்பதே நமது கருத்து. பார்ப்பனர்களைக் கண்டிப்பார் யாராயிருப்பினும் சரியே, அவர்கள் நாத்திகர்களாவதால், மாமிச வேட்கையில் ஈடுபட்ட இவர்கள் செய்கையைக் கடிந்துரைத்த சில இரக்கமுள்ள பார்ப்பனர்களை மட்டும் இவர்கள் எவ்வாறு தமது கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளுதல் கூடும்? இன்று வேள்வியை மறுத்துரைப்பவர்கள், நாளை மற்றும் பல தீமைகளை எடுத்துக் காட்டுவது நிச்சயம். ஆதலின் முன் எச்சரிக்கையாக வேள்வியைக் கண்டித்த பார்ப்பனர்களைத் தம் கொலைக் குழுவினின்றும் நீக்கிய வைதிக பார்ப்பனர்களின் அறிவு நுட்பத்தை நாம் போற்றுகின்றோம். பார்ப்பனர் நெடுங்காலமாக இச்சித்திரவதையில் ஈடுபட்டு வந்தமை பற்றி யன்றோ, இவர்களை மணிமேகலையில், சாத்தனார், மக்களிலும் இழிவுடைய மக்கள் என்றும், அவலப்படிற்றுரை கூறுபவர்கள் என்றும், "கொலை அறமாம் எனும் கொடுந்தொழில் மாக்கள் அவலப்படிற்றுரை ஆங்கு அது மடவாய்" என்றும் கூறி யிருக்கின்றார். இத்தகைய அந்தணர் அறவோர் என்றால் அது அவலப்படிற்றுரை, அதாவது, கேடிழைக்கும் பொய்யுரையல்லாது வேறென்?

(திராவிடன்)

சிங்காரவேலு ஜாமீன் விடுதலை

சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்

திருச்சி, ஜூன், 14—

ஹைகோர்ட்டில் ஜாமீனில் விட உத்தரவு பிறப்பிக்கப் பட்டதன்படியே திரு. எம். சிங்காரவேலு செட்டியார் ஜாமீன் கொடுத்து இன்று திருச்சி சிறையிலிருந்து விடுபட்டு இன்றிரவு சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்.

ரோஜா முத்தையா

தென்னாற்காடு ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு

கள்ளக்குறிச்சி தாலூகா ஆ: தி: மகாநாடு

தலைவர் ராவ்சாஹிப் எல் சி குருசாமி எம் எல் சி அண்ட் எப் எம் யு சென்னை

மகாநாட்டைத் திறந்துவைத்தவர் திரு. ஈ வே ராமசாமி

தென் ஆற்காடு ஜில்லா ஆதி திராவிடர்கள் மகாநாட்டுக்காக திருவாளர்கள் சென்னை சட்டசபை அங்கத்தினரும், அருந்ததியார் சங்கத் தலைவருமான ராவ்சாஹிப் எல். சி. குருசாமி அவர்களும், அருந்ததியார் சங்க உபதலைவர் வெங்கிடபதியும், சென்னை ஆதிதிராவிட சங்கத் தலைவர் திரு. எம். சி. டி. வரதராஜாவும் ஈ. வே. ராமசாமியும் காளியப்பனும் 12-6-29ந்தேதி காலை 4-30மணிக்கு சென்னையில் இருந்து விழுப்புரம்ஜங்ஷனுக்குவந்துசேர்ந்தார்கள்மகாநாட்டுவரவேற்புகழகத்தலைவர் திரு எம், சாமிநாதன் அவர்களால் வரவேற்கப்பட்டு ஊந்தூர் பேட்டை மார்க்கமாக சுமார் 30 மைல் மோட்டார் வாகன மூலம் நேரே. அசளத்தூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு மேள வாத்தியங்களுடன் பெரிய ஊர்வலம் செய்யப்பட்டு கள்ளக்குறிச்சி தாலூகா ஆதிதிராவிட மகாநாடு ஒன்று சுமார் ஆயிரம் பேர்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூடி இருந்து திரு ஈ. வெ. ராமசாமியாரின் தலைமையில் நடத்தப்பட்டு திரு. வரதராஜாவும், திரு. குருசாமி எம். எல்.சி. யும்சொற்பொழிவுகள்நிகழ்த்திய பிறகுஇரண்டொரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் மகாநாடு இனிது நிறைவேறியது. பகல்சாப்பாடுமுடிந்ததும் அங்கிருந்துபகல்2மணிக்கு மேல் சுமார் 50 மைல் உள்ள சிருவத்தூருக்கு சின்னசேலம் வழியாக மோட்டாரில் அழைத்துச்செல்லப்பட்டுசுமார் 4-30மணிக்கு சிருவத்தூர் சேர்ந்ததும் அங்கு கொம்பு தப்பட்டை வாத்தியங்களுடன் மகாநாட்டுப்பந்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டு மகாநாடு துவக்கப்பட்டது. திரு. எம். சாமிநாதன் வரவேற்பு உபந்நியாசம் செய்தவுடன் திரு.ராமசாமி பெரியாரைமகாநாட்டை திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. ராமசாமி சொற்பொழிவின் சுருக்கம்

சகோதர சகோதரிகளே! இந்த ஜில்லா ஆதிதிராவிடர்கள் மகாநாட்டிக்கு நான் இதற்கு முன் நான்கைந்து தடவை அழைக்கப்பட்டிருந்தாலும் அப்போது பல காரணங்களால் எனக்கு வர முடியாமல் போய்விட்டதால், இந்த தடவைகட்டாயமாய் எப்படியாவது வரவேண்டுமென்று கருதியே வந்து சேர்ந்தேன். வரவேற்புகழகத்தலைவர் என்னைப்பற்றிப்பிரமாதமாக புகழ்ந்து கூறினார் அவ்வளவுபுகழ்ச்சிஎனக்கு வெட்கத்தைக் கொடுத்ததேயல்லாமல் மற்றபடி அதில்உண்மை இல்லை என்றுசொல்லுவேன்.

தீண்டாமை விலக்குஎன்னும்விஷயத்தில் நான் ஏதாவது ஒரு சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால் அது எங்கள் நலத்திற்கு செய்ததாகுமேயொழிய உங்கள்நலத்திற்கு என்றுசெய்ததாக மாட்டாது. ஏனெனில் உங்களுக்கும் எங்களுக்கும் சமூக வாழ்வின் பொது தத்துவத்தில் சிறிதும் பேதமில்லை. அநுபோகத்தில் மாத்திரம் ஏதாவது அளவு வித்தியாசமிருக்கலாம். உதாரணமாக நீங்கள் எப்படி தீண்டப்படாதவர்களோ அப்படியே தான் உங்களைவிட சிறிது மேல் வகுப்பார் என்கின்ற நாங்களும் ஒரு வகுப்பாருக்கு அதாவது கடவுள் முகத்திலிருந்து பிறந்ததாகவும் பூலோக தேவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களுக்கு நாங்கள் தீண்டாதவர்களாகவே இருக்கின்றோம். கோயில் பிரவேசம் என்பதிலும் உங்களைவிட சற்று முன்னால் போக மாத்திரம் அனுமதிக்கப்படுகிறோமே தவிர மற்றபடி பார்ப்பனர் நிற்கும் இடத்திற்குப் பின்னால் தான் நிற்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நீங்கள் கோயிலுக்குள் வந்தால் எப்படி கோயிலும் சாமியும் தீட்டுப் பட்டுவிடுகின்றதோ அப்படித்தான் நாங்களும் ஒரு இடத்திற்குப் போனால் சாமியும் கோயிலும் தீட்டுப் பட்டுவிடுகின்றன. உங்ககை எதிரில் சாப்பிட்டால் உங்களுடன் சாப்பிட்டால் உங்கள் வீட்டில் சாப்பிட்டால் எப்படி தோஷமும் பாவமுமான காரியமாகிவிடுகின்றதோ அப்படியே எங்கள்வீட்டிலே எங்கள் முன்னாலே எங்கள் பக்கத்திலே சாப்பிட்டாலும் தோஷம் மோசம் பாவமென்று தான் சொல்லப்படுகின்றது.

நமதுசமூகத்திற்கு பெயர்சொல்லி அழைப்பதிலும் உங்களைவிட மிக இழிவாகவேதான் அழைக்கப்படுகின்றோம். உங்களைப் பறையர் என்றும், பள்ளர் என்றும் சொல்லுகிறார்கள். ஆனாலும் பறையர், பள்ளர் என்கின்ற வார்த்தை தொழிலையும், வசிப்பு இடத்தையும் பொறுத்து ஏற்படுத் தப்பட்டது. பறையனும் பள்ளனும் அந்தப் பெயரால் சுதந்தரமானவராகவும், இழிவுபடுத்ததகாதவராகவும் இருக்கிறார்கள் ஆனால்எங்களை அழைக்கும் பெயராகிய சூத்திரன் என்று சொல்லப்படும் பேரானது பிறவியிலேயே இழிவை உண்டாக்கத்தக்கதும் ஒருவனுக்குப் பிறவி அடிமையாகவும், பிறவி தாசி மகனாகவும், மற்றும் மிக்க இழிவான கருத்துக் கொண்டதாகவுமே இருக்கின்றது. எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் நிர்ப்பந்தங்களும் சகிக்கமுடியாத இழிவைக்கொடுக்கக்கூடியதாகவே இருக்கின்றது. பறையன் என்றால் சொந்தத்தாய் தந்தைக்கே பிறந்தவன் என்கின்ற கருத்து உண்டு. ஆனால் சூத்திரன் என்றால் தாசி மகன், வேசி மகன், வைப்பாட்டி மகன், பிறவி அடிமை, விலைக்கு வாங்கப்பட்ட அடிமை என்பது போன்ற பல இழிவுப் பொருள்கள் நிறைந்திருக்கின்றது.

தவிர, உங்களைப் போன்ற ஒரு வகுப்பு, அதாவது பஞ்சமர்கள்என்று சொல்லப்படுவதற்கும், அப்படி ஒன்று இருப்பதற்கும் பார்ப்பன மதத்தில் அதாவது இந்து மதத்தில் இடமே இல்லை, இந்துமதத்தில் சூத்திரன் என்பதற்கும் கீழாக ஒரு ஜாதியே பிறவியில் கிடையாது. ஆனால் வாழ்க்கையில் நான்கு வருணக்காரர்களும் நடந்துகொள்ளுகின்ற முறையில் சண்டாளர்கள் என்று ஒருவகுப்பு உண்டாகின்றது அதாவது, பார்ப்பன ஆணுக்கும் பார்ப்பனரல்லாத பெண்களுக்கும் பிறக்கும் பிள்ளைகள், பார்ப்பனிக்கும் பார்ப்பனரல்லாதவனுக்கும் பிறக்கும் பிள்ளைகள் பார்ப்பனர்களில் வேதம் படிக்காதவன், நெருப்பு வளர்க்காதவன், சந்தியாவந்தனம் செய்யாதவன் மற்றும் இதுபோல் பார்ப்பனீய கருமங்கள் என்பதுகளைச் செய்யாதவன் முதலானவர்கள்சண்டாளர்களாகின்றார்கள்.

இது தர்க்க பார்ப்பனப் பண்டிதர்களும், வேதசாத்திர நிபுணர்கள்என்பவர்களுமே சொல்லி உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். ஆதலகல் உங்களை யாராவது சண்டாளர்கள் என்று சொல்வார்களானால் அவர்கள்உங்களைப் பார்ப்பனிக்கும் பார்ப்பனரல்லாதவருக்கும் அல்லது பார்ப்பனருக்கு அல்லாதபெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியில்லையானால் ஒழுக்கந் தவறியபார்ப்பனர்கள்தான் நீங்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படியானால் இன்றையதினம் பார்ப்பனச் சமூகத்தில் உள்ள 100க்கு 99¾ பெயர் வழிகள் சண்டாளர்களாகத் தான் இருக்க வேண்டும். எனவே, இந்த முறையில் உங்களுக்காவது தர்க்க ரீதியில், ஒரு வழியில் குற்றம் சொல்லாமலிருக்க ஆதாரங்களும் இடமுமிருக்கின்றன. ஆனால் எங்கள் நிலை நினைக்கவே முடியாதபடி பெரிய இழிவா யிருக்கின்றது. ஆதலால் தான் சமூக வாழ்வில் உங்களைவிட நாங்கள் தாழ்ந்த - இழிவான தன்மையில் இருக்கின்றவர்கள் என்று சொல்லுகின்றதுடன் இவ்விழிவு நீங்க முயற்சிக்கும் வேலை முக்கியமாக எங்கள் வகுப்புக்காகச் செய்யப்படும் வேலையென்றும் சொல்லுகின்றேன். தவிர உங்களுக்கோ எங்களுக்கோ இப்போதிருக்கும் இழிவுகள் ஒழியவேண்டும் என்கின்ற கவலை சிறிதளவாவது யாருக்காவது இருக்குமானால், அவர்கள் இவ்விழிவு நிலைக்கு ஆதாரமாயுள்ளதை அழிக்கத் தைரியங் கொண்டு தயாராயிருந்தாலொழிய கண்டிப்பாய் முடியவே முடியாது. ஏனெனில், இவ்விழிவுகளை ஏற்படுத்தியது மனிதனுடைய அயோக்கியத்தனமாய் இருந்தாலும், அதை நிலைநிறுத்தக் கருதி அதையே ஒரு மதத் தத்துவமாகவும், அத்தத்துவம் எல்லாம் வல்ல கடவுள் என்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்றும் கற்பிக்கப்பட்டு நிலைநிறுத்தி அமுலில் நடத்திவரப்படுகின்றது.

இந்நிலை சிறிது மாற்றப்படவேண்டுமென்றாலும், மேற்கண்ட மதமும் கடவுளும் வந்து குறுக்கிடுகின்றது ஆதலால்இந்நிலைக்கு ஆதாரமானதென்று சொல்லப்படும் மதத்தையும், அம்மதத்தை உண்டாக்கினதாகச் சொல்லப்படும் கடவுளையும் எதிர்த்து நின்று அவற்றை அழித்தாலொழிய வேறு மார்க்கமில்லை என்று பதில் அளிக்கவும் ஒழிக்கவும் தைரியமாகவும் தயாராகவுமிருந்தாலொழிய,வேறு மார்க்கத்தில் முடியவேமுடியாது. அன்றியும் உங்களுக்குச்சுயமரியாதைஉணர்ச்சிவேண்டும். நாம் ஏன் தாழ்ந்தவர்கள்? நாம் ஏன் ஒருவரைச்சாமிஎன்றுகூப்பிடவேண்டும்? நாம் ஏன் ஒருவனுக்குப் பாடுபடவேண்டும்? என்கின்ற உணர்ச்சி வரவேண்டும். நீங்களும் மற்றவர்களைப்போல் மனிதர்கள்தான்என்று கருதவேண்டும்.

உங்களை யாராவது கிராம வாசிகள் துன்புறுத்தினால், இழிவாய் நடத்தினால் எதிர்த்து நிற்க வேண்டும். முடியாவிட்டால் வேறு பட்டணங்களுக்கு குடியேறிவிட வேண்டும். அங்கும் ஜீவனத்திற்கு மார்க்கமில்லாவிட்டால் இம்' இழிவான, கொடுமையான மதத்தை உதறித்தள்ளிவிட்டு சமத்துவமுள்ள மதத்திற்குப் போய்விடவேண்டும். அதுவும் முடியாவிட்டால் வெளி நாடுகளுக்காவது கூலிகளாய்ப்போய்

உயிரையாவது விடவேண்டும். இம்மாதிரியான உறுதியான முறைகளைக் கையாளத் துணியவில்லையானால், உங்கள்மீது சுமத்தப்பட்ட இழிவு சுலபத்தில் ஒழியாது என்றே சொல்லுவேன். கஷ்டப்படவும் கட்டுப்பாட்டை உடைத்தெறியவும் உயிரைவிடவும் தயாராயில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதிக்கமுடியாது. அன்றியும், வேறு ஒருவன் வந்து உங்களுக்கு உதவி செய்வானென்று எதிர்பார்ப்பதும் பெரிய முட்டாள் தனமாகும். உங்களையே நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ள துணிவு கொள்ளவேண்டும். படிப்பினாலும், பணஞ் சம்பாதிப்பதாலும் குளிப்பதனாலும், குடிக்காமலிருப்பதாலும், மாமிசம் சாப்பிடாதிருப்பதனாலும் இவ்விழிவு போய்விடுமென்று சிலர் உங்களுக்கு உபதேசம் சொல்லுகின்றார்கள். நான் அவைகளை ஒப்புக் கொள்ள மாட்டேன். உங்களுடைய இழிவுக்கு இவைகள் தான் காரணம் என்றால் இந்தத் தன்மைகள் உள்ள மற்றவர்கள் இவ்விழிவை அடையாமல் "பிராமணர்"களாகவே இருக்கின்றார்கள். உங்களுடைய இழிவுக்குக் காரணம் உங்களுக்கு மானம், சுயமரியாதை உணர்ச்சி ஏற்படாததுதானே யொழிய வேறில்லை. ஆகையால் நீங்கள் உங்களைத் தாழ்ந்தவர்கள் என்று நினைத்துக்கொள்ளாமல் நீங்களும் மற்றவர்களைப்போல் மனிதர்கள்தான் என்று எண்ணிக்கொண்டு அதற்கு ஏற்றவிதமாக நடந்துகொள்ளத் துணிவு கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகிக்கத்தைரியங் கொள்ளுங்கள். சீக்கிரத்தில்விடுபடுவீர்கள் என்று சொல்லி மகாநாட்டைத் திறந்துவைத்தார். பிறகு திரு. எல். சி. குருசாமி அவர்கள் தலைமை வகித்து ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதன் சுருக்கம் பின்னால்வரும்

பிறகுபலதீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன. பிறகு திரு. வரதராஜா பேசியபின் கூட்டம் இரவு 8 மணிக்கு முடிவுபெற்றதும் எல்லோரும் உடனே புறப்பட்டு விட்டார்கள்; கூட்டத்திற்கு ஏராளமான பெண்களும் ஆண்களும் மற்ற குடிஜனங்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

(ஒரு நிருபர்.)

பீமநகர் (திருச்சி) பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்

9-6-29உயில் மேற்படிச் சங்கத்தின் ஆதரவில் திரு. ஜி. ராமசாமியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. திருவாளர்கள் கே. என். பாலசுப்ரமணியம் பி. ஏ. ராவணதாஸ் ஆகிய இருவரும் "நமது முன்னேற்றம்" "வாலிபர் கடமை" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று மேற்படி சங்க அமைச்சர் தெரிவிக்கிறார்.

திரு. வி. கலியாண சுந்தரமுதலியார்

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் சென்றவாரம் அறந்தாங்கியில் நடந்த அறந்தாங்கி தாலூக்கா அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்து தமது முடிவுரை பிரசங்க ஆரம்பத்தில் மகாநாடு சீரும் சிறப்புடனும் நடந்ததற்கு காரணம் அறந்தாங்கி வாசிகளின் ஊக்கமும், பக்தியும் தான் என்றும், அதற்குக் காரணம் அறந்தாங்கி வாசிகள் இடத்தில் ஆங்கிலக்கல்வியும் மேனாட்டு நாகரிகமும் பரவாததுதான் என்றும் பேசியிருக்கிறார். இது எவ்வளவு தூரம் பாமர மக்களை ஏமாற்றுவதாய் இருக்கின்றது. உதாரணமாக முதலில் காங்கிரஸ் என்கின்ற ஸ்தாபனமே வெள்ளைக்காரரிடத்தில் இருந்து காப்பி அடித்து நடத்திக் கொண்டு வருவதுதான் என்றும் அதுவும் மேல்நாட்டாரின் பாஷையாகிய ஆங்கிலம் கற்றதனால்தான் என்றும் திரு. முதலியாருக்கு ஞாபகம் மூட்டுகிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

நிமிஷக்கணக்கில் குணமடை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி !!

சுவாச காச ரோக நிவாரணி.

Instant Relief For Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காகாப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடியடப்பி 1க்கு ரூ. 1—4.

தபாற்கூலி பிரத்தியேகம். பினங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8. அனுப்பவேண்டும்.

புரொப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(18) ஆங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

சுயமரியாதை

மாகாணச் சங்கம்

காரியதரிசி,

சுயமரியாதை மாகாணச் சங்கம்,

"திராவிடன்" பதிப்பகம்,

14, மவுண்ட் ரோடு, சென்னை.

ஐயா,

என்னைத் தங்கள் சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இத்துடன் ஓர் ஆண்டு கட்டணம் 0-2-0 அனுப்பியிருக்கின்றேன்

பெயர்..

விலாசம்..

....

(இதில் கையொப்பமிட்டு வெட்டி அனுப்பவும்)

உருவ வழிபாட்டை ஒழிக்க வேண்டிய தேன்?

(தி. வாசுதேவன் எழுதியது)

நெடுங்காலமாக, மனித சமூகத்தில் இவ்வுலகத்தையும் ஆகாயத்தில் தோன்றும் பல நட்சத்திர மண்டலங்களையும் இயக்குகின்ற ஒரு பெருஞ் சக்தி அறிவுடைய சக்தி கடவுள் இருக்கின்றார் என்ற கொள்கை நிலவிவருகிறது. ஒரு சிலர் அத்தகைய கடவுள் ஒன்று இல்லை என்று கூறி வருகின்றனர். மற்றுஞ் சிலர் "அப்பொருள் இருக்கிறதோ இல்லையோ தெரியாது" என்று கூறுகின்றனர். இவ்விவாதத்தில் நுழைந்து நம் நாடு தன் அரிய காலத்தையும், சக்தியையும் வீணே செலவழித்து யாதொரு முடிவுக்கும் வரவில்லை. ஆனால் ஒரு சிலர் தாம் உண்மையாகவே கடவுளைக் கண்டுவிட்டதாகவும், அவருக்கு, மனிதனுக்கு இருப்பதுபோல கால்கை முதலிய அவயவங்கள் இருக்கின்றனவென்றும் பாடி வைத்து விட்டனர். இவ்வாறு கூறியவர்கள் எல்லோரும் அக்கடவுளுக்கு உருவம் கற்பிப்பதில் ஒன்றுபட்டிருந்தாரோ எனின் அதுவும் இல்லை. ஒரு சிலர், கடவுள் சுடுகாட்டில் நடனம் செய்யும் சாமியார் கோலங்கொண்டவர் என்றனர்; சிலர் இரண்டு மனைவியரோடு கூடிய இளைய அழகன் என்றனர்; சிலர் பாற்கடலில் தூங்கிய கரிய நிறம் வாய்ந்தவர் என்றனர்; சிலர் யானைத்தலையுடையவர் என்றனர்; சிலர் மீன், பன்றி, ஆமை முதலியவடிவங்களைஎடுத்தவர் என்றனர்; மற்றும்சிலர்அவர் வைகுந்தத்தில் இருக்கிறார் என்றும், சிலர் கைலாயத்திலிருக்கின்றார் என்றும், சிலர் பரலோகத்திலிருக்கின்றார் என்றும் கூறியுள்ளனர். இக்கதைகளையெல்லாம் உண்மைப் பகுத்தறிவால் ஆராய்ந்த அறிஞர் இக்கதைகளின் பொய்ம்மையை எடுத்து விளக்கியபோது தந்திரத்தில் வல்ல ஒரு சிலர் "பக்தர்கள் கடவுளுக்கு எந்த உருவத்தைக் கற்பித்து வணங்குகின்றார்களோ, அந்த உருவத்தோடு கடவுள் தரிசனங்கொடுத்து அப்பக்தர்களுக்கு அருள் செய்கின்றார்" என்று எழுதிவைத்தனர். எனவே முடிவாகக் கூறுமிடத்து, புராணங்களிலும், மற்ற நூல்களிலும் கடவுளுக்குக் கூறப்பட்ட உருவங்களெல் வெறுங் கற்பனைகளே என்று அறிகின்றோம். இக்கற்பனை உருவங்களுக்கு எத்துணைக்கோயில்கள்? லட்சக்கணக்கான பணவிரயம்செய்து உற்சவம் செய்வது ஏன்? யார் உற்சவம் செய்யச் சொன்னது? கடவுளா? மனிதனா?

எக்காலத்திலோ கோயில் கட்டி வைத்து விட்டார்கள். உலகம் முழுவதும் கைதொழில், வாணிபம், விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய பல துறைகளில் இறங்கி உழைத்து உண்ண உணவும், உடுக்க உடையும் போதிய அளவு பெற்று இன்பம் அடைகின்ற இக்காலத்திலாவது நம் இந்தியமக்கள் தம் குற்றத்தை உணர்கின்றார்களா? வருஷா வருஷம் கோடிக் கணக்கான பணத்தை உணவும் உடையும் இல்லாது வருந்தும் ஏழைகள் முகத்தைப் பாராது, கல்லாலும் செம்பாலும் செய்யப்பட்ட உருவங்களை அலங்கரிப்பதிலும், பாணவேடிக்கையிலும் வீணே செலவழிப்பதன் அறியாமையை என்னென்று கூறுவது. அசையாது கிடக்கும் சடப்பொருள்களில் இருக்கும் கடவுள் அறிவோடு நடமாடும் மனிதர்களிடத்தும் இல்லையா? எத்தனை குடம் பால், தேன், தயிர் ஊற்றினாலும் ஏன் என்று கேட்காத கல்லைவிட இவற்றையெல்லாம் உண்டு இன்புறுகிற மனிதனிடத்தில் கடவுள் இல்லையா? தூயநெறிகளைக் கடைபிடித்து மக்களுக்குத் தொண்டு செய்தல் மூலமாக ஒருவன் அன்பு வடிவினனாக உண்மையாளனாக பிரகாசிப்பதன்றோ இன்பநிலை நம்மிந்திய நாடு தத்துவ. ஆராய்ச்சியிலும் தூயஅன்பு வாழ்விலும் பேர்போனது என்றுநாம் பறையடிக்கிறோம். சில மேனாட்டுப் புலவர்களும், நம்மோடு கூடித் தாளம் போடுகிறார்கள். இப்போதைய உண்மை இந்தியாவை யாராவது கண் திறந்து பார்க்கிறார்களா? ஆறுகோடி மக்களைத் தீண்டாதார் என்று ஒதுக்கித் துன்புறுத்தும் நாடா அன்புள்ள நாடு? ஆண்மகன் ஆறு கலியாணம் பண்ணிக் கொள்ளலாம் ஆனால் பெண்ணோ ஒருமுறை கணவனிழந்தால் உடைக்கும், உணவுக்கும் அல்லலுற்று நாய், பூனை, மாடு, குதிரை முதலியவற்றிற்குள்ள சுதந்திரமும் பெறாமல் அழியும்படி விதிவகுத்த நாடா அன்புள்ள நாடு? உலகத்தின் பல பாகங்களிலுள்ள மக்கள் கல்வியிலும், செல்வத்திலும் தம்மினும் குறைந்த ஜனங்களின் நன்மைக்காக கல்விக்கும் கைத் தொழில்களுக்கும் சுகாதாரத்திற்கும் கோடிக் கணக்கான பணத்தை செலவழித்து இன்புறும் போது பல பயனற்ற கோயில்களைக்கட்டுவதிலும்பெருந் தேர்களும் வெள்ளிவாகனங்களும், தங்கவாகனங்களும் செய்வதிலும் சோம்பேறி சாமியார்களைக் கொழுக்க வைப்பதிலும் அளவற்ற பணத்தைச் செலவழிக்கும் நாடு அறிவுடைய நாடா? இந்திய வாலிபர்களே இன்னும் எத்தனை நாள் தெருவில் பஜனை செய்து கொண்டிருக்கப் போகிறீர்கள். காலக்ஷேபம் கேட்டுக்கொண்டு எத்தனை காலம் தூங்கப்போகிறீர்கள். சில அற்ப மனிதரைப்போல கடவுள் முகஸ்துதிக்கும், சடங்குகளுக்கும், ஆசைகொண்டவர் என்று நினைக்கின்றீர்களா? நம்நாடு இந்த "பக்தியிலும்" "தொண்டிலும்" ஈடுபட்டு ஆழ்ந்து இருந்தபோதிலும் உங்கள் மார்பின்மீது கையை வைத்து உன்னுள் இருக்கும் அன்புக் கடவுள் என்ன சொல்லுகின்றது என்று கேளுங்கள். காலையிலெழுந்து தண்ணீரில் குளித்த உடம்பில் சாம்பலையாவது மண்ணையாவது இட்டுக் கொண்டு கோயிலுக்குப் போகச் சொல்லுகிறதா? கல்வி யறிவில்லாது அறியாமையால் மயங்கி அலையும் மக்களுக்கு கல்வியைப் போதிக்கச் சொல்லுகிறதா? திருப்பதிப் பெருமாளுக்கு உண்டியில் பணத்தைக் கொட்டச் சொல்லுகிறதா? உடுக்க உடையும், உண்ண உணவும் இருக்க இடமும் இல்லாது தவிக்கும் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு உதவச் சொல்லுகிறதா? சீதா கலியாணத்திற்கும், வள்ளித் திருமணத்திற்கும் "ஆசீர்வாதம்" செய்யச் சொல்லுகிறதா? அநியாயமாக அழுத்தப்படும் விதவைகளின் பரிதாப நிலைக்கு இரங்கி அவர்களுடைய விடுதலைக்கும் மறுமணத்திற்கும் உழைக்கச் சொல்லுகிறதா? பகுத்தறிவின் துணைகொண்டு இவைகளுல் எதைச் செய்வது எதைத் தவிர்ப்பது என்ற திடத்துடன் முன் வாருங்கள்.

தமிழ்நாட்டு வீரஞ்செறிந்த வாலிபச் சிங்கங்களே! "அந்தமகான் சொன்னது பொய்யாகுமா, இந்த பக்தர் சொன்னது பொய்யாகுமா, அந்த ஞானி சொன்னது தப்பா" என்று புலம்புவதைவிடுத்துஉங்கள்பகுத்தறிவிற்குபொருத்தமானவைகளையே நம்புங்கள். மனிதருக்குள்ளே பலபிரிவுகளையும் சண்டைகளையும், கொலைகளையும், வழக்குகளையும், உண்டாக்கும் மதங்கள் ஒழியவேண்டும். அன்புப் பணியைத் தூண்டும் மதமே ஓங்க வேண்டும். இரவில் இரண்டு மனைவிமாரோடு தூங்கும் கடவுளும், சூரபத்மன் இரண்யன் முதலிய பகைவர்களோடு சண்டைசெய்யும் கடவுளும், வைகுந்தத்திலிருந்தும், கைலாசத்திலிருந்தும் பூமிக்குவந்து பெண்களை கலியாணம் செய்து கொள்ளும் கடவுளும், இச்சகத்தை விரும்பும் கடவுளும், பொன் வெள்ளி ஆகிய ஆபரணங்களும்கெம்புவைரங்கள்முதலிய நவரத்னக் கற்களை விரும்பி அணிந்து கொள்ளும்கடவுளும், பாணவேடிக்கையையும் தாசிகளையும் விரும்பும் கடவுளும்இவ்வறியாமைக்குளெல்லாம் துணையாக நிற்கும் கோயில்களும் வேண்டாம். தாழ்த்தப்பட்டிருக்கும்நாம் இதுகாறும் செய்துவந்த அநியாயத்தை நினைந்து நினைந்து வருந்தி அவர்களுக்குக் கல்வியும், சுகாதாரமும், மதுவிலக்கும் போதித்து அவர்களுக்கு வேண்டும் உதவியைச் செய்யத் தூண்டும் அன்புக் "கடவுள்" தான் வேண்டும். பெண்மக்களுக்குக் கல்வியும், சுதந்தரமும், சமத்துவமும் அளிக்கக்கூடிய அறிவுக் "கடவுள்" தான்வேண்டும். இன்று வரையில் யானைவாகனத்திற்கும், குதிரைவாகனத்திற்கும், எலிவாகனத்திற்கும், பாம்பு வாகனத்திற்கும், பல்லக்கிற்கும், தேருக்கும், பாலாபிஷேகத்திற்கும், தயிர் அபிஷேகத்திற்கும், தேனபிஷேகத்திற்கும், பன்னீரபிஷேகத்திற்கும், பாணவேடிக்கைக்கும் கற்பூரத்திற்கும் பணத்தையழித்தது போதும். இவைகளுக்கெல்லாம் "அன்புக்கடவுள்" மகிழ்ந்துவிடும் என்று நினைப்பது அறிவீனம். இப்பணத்தைக் கொண்டுநம் நாட்டு விவசாய முறையைச் சீர்படுத்துவதிலும், கைத்தொழில்களைத் தொடங்குவதிலும், கல்வி நிலையை உயர்த்துவதிலும், சுகாதார நிலையைச் செம்மைப்படுத்துவதிலும் செலவழிப்பீராக. நம் அருமைத்தாய் நாட்டை கல்வி, செல்வம், கைத்தொழில், வாணிபம் அறிவியலாராய்ச்சி முதலிய மலர்களால் அலங்கரித்து மற்ற நாடுகளோடு சமத்துவமாகத் தலை நிமிர்ந்து நிற்கும்படிச்செய்ய இன்றே தொடங்குங்கள்.

அகமுடையார் இரண்டாவது மாகாண மகாநாடு.

நாளது 1929-ம் வருஷம், ஜூன் மாதம், 29, 30ௗ தேதி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பட்டுக்கோட்டையில் நடைபெறும் மகாநாட்டிற்கு தொண்டர்பணியாற்ற விருப்பமுடைய அகமுடைய குல இளைஞர்கள் அவரவர்களுடைய விலாசத்தை நாளது ஜூன் மாதம் 20 தேதிக்குள் தொண்டர்படைத் தலைவர், அகமுடையார் மகாநாடு, பட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு தெரிவித்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றது என்று விளம்பர அதிகாரி அறிவிக்கின்றார்.

பினாங்கு மருத்துவகுல சங்கம்.

23-5-29ௗ தேதியில் மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று திரு. சொ. ஏகாம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது சுவாமி அற்புதானந்தர் அவர்கள் சமூக ஒற்றுமை, முன்னேற்றம் என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்னர் கூட்டம் முடிவுற்றது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

செய்திகள்

பார்ப்பன ஆதிதிராவிட மணம்

ஆரிய சமாஜக் கோள்கைப்படி நடைபெற்றது

10-6-29உ காலை சென்னை கோவிந்தப்ப நாயக்கன் வீதியிலுள்ள சௌந்தரிய மஹாலில் திரு. வரதராஜுலு தலைமையின்கீழ் ஸ்ரீமதி சீதாதேவி அம்மாள் என்ற ஆதிதிராவிடப் பெண்ணுக்கும், கோயமுத்தூர் ஹைகோர்ட்டு வக்கீலாயிருந்த ஸ்ரீகண்டசாஸ்திரியின் மகன் திரு. நடேசஐயருக்கும் ஆரிய சமாஜக்கொள்கைப்படி திருமணம் நடைபெற்றது. மணப்பெண், மவுண்ட்ரோட் கவர்ன்மெண்டு பிரஸில் வேலையார்க்கும் திரு. ஆர். பொன்னம்பலம் பிள்ளை என்பவரின் சகோதரி. ஏழாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தனள். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பெற்றோர் இல்லை இச்சக் கலியாணத்துக்கு ராவ்பகதூர் டாக்டர் சி. நடேசமுதலியார், திருவாளர்கள் ஜி. ரங்கைய நாயுடு, வி. சுஜேர்திரமுதலியார், சி. பி. கன்னிங்காம், திவான்பகதூர். ராமச்சந்திர ராவ் முதலியோர் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

ருஷியாவிலும் "கடவுளுக்கு ஆபத்து"

மாஸ்கோவில் கடவுள் மறுப்பு மகாநாடு

10-6-29உயில் மாஸ்கோ நகரத்தில் கடவுள் மறுப்பு மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்கு சோவியத் ராஜ்யம் முழுவதிலுமிருந்து 700 பிரதிநிதிகளும், ஜர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்வீடன் முதலிய ஐரோப்பிய நாடு முழுவதிலுமிருந்து பல பிரதிநிதிகளும் அப்பர்க ஏம்விஜயம் செய்திருந்தார்கள். இம்மகாநாட்டின்சார்பாக கடவுள் மறுப்புக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடவுள் மறுப்புக் கொண்டாட்டங்களும் நடைபெற்றன.

ராமநாதபுரம் பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கம்

31-5-29-ந்தேதியில் மேற்படி சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் திரு. எம். மைக்கேல் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அப்போது பட்டுக்கோட்டை திரு. அழகர்சாமி அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவங்களைப்பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் ஒருநீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர். திருவாளர்கள் சிவகங்கை எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்களும் மதுரை அருணாசலம் அவர்களும், அதையொட்டிப் பேசினார்கள் என்று மேற்படி சங்கக்காரியதரிசி திரு. தாஸ் அறிவிக்கிறார்.

சுயமரியாதைத் திருமணம்

திரு. எம். சரவணன் அவர்கள மூத்த மகன் திரு. செகநாதனுக்கும், கும்பகோணம் மருத்துவசிரோமணி, பண்டிட் சே. எஸ். பொன்னம்பலம் அவர்களின் மூத்தமகள் திருவளர் செல்வி காந்திமதிக்கும், சுக்கில ஆண்டு ஆனிமாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை (20-6-1929) விடியற்காலம் 5-30மணிக்குமேல்6-மணிக்குள் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலை 39-ம் எண்ணுள்ள வீட்டில் வைக்கம் வீரரும், 'குடிஅரசு" "ரிவோல்ட்" பத்திராதிபரும் சுயமரியாதை இயக்கத் தலைவருமாகிய ஈ. வெ. இராமசாமிப் பெரியாரால் மணவினை நடைபெறும்.

செய்யூர் ஆதிதிராவிடர் கூட்டம்.

2—6—29 தேதி செய்யூரில் திருவாளர் ஆர். ராஜகோபால் அவர்கள் தலைமையின் கீழ் ஆதிதிராவிடர்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. திருவாளர்கள் டி. திருவேங்கடம், ஏ. முனுசாமி, எஸ். பழனிசாமி, கே. முருகேசன், எஸ். ரத்தினவேலு, ஏக. சிவ. மாணிக்கம் முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். உயர்தர இலவசபாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒரு இரவு பாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒரு ஐக்கியநாணய சங்கம் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என்றும் சி. டி. ஆக்ட்படி குற்றக்கூட்டத்தார்கள் என்று யோக்கியர்களையும் இரவில் எழுப்பி துன்பங்கொடுக்கும் இழிவான வழக்கத்தை நீக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் கூட்டம் இனிது முடிவுற்றது என்று காரியதரிசி திரு. இ. எம். சாமி எழுதுகிறார்.

ஒரு வேண்டுகோள்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்த இனாம் கரிசல் குளத்தில் நூற்றைம்பது நாடார் வீடுகள் இருக்கின்றன. இவ்வூரில் திரவிய சகாய ஆண்பாடசாலை ஒன்றும், தலூகா போர்டு பெண்பாடசாலைஒன்றுமாக இரண்டு பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. இந்த இரு பள்ளிக்கூடங்கட்கும் தனித்தனியாக ஊர்ப்பண்டிலிருந்து மூவாயிரம் ரூபா செலவு செய்து கட்டிடமுங் கட்டப்பட்டிருக்கிறது. திறப்புவிழா நிகழ்த்த திரு. டபிளியூ. பி. ஏ. சௌந்தர பாண்டிய நாடார் எம். எல். சி. அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரு நிருபர்.

கூளிம் இந்திய அசோசியேஷன்.

25-5-29ந்தேதி மாலை 6 மணிக்கு கூளிம் இந்திய அசோசியேஷன் ஆதரவில் திரு. சோமசுந்தரம்செட்டியார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்போது திரு. என். ஜி. பி. டி. மாணிக்கம் அவர்களால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது என்று கூளிம் திரு. மு. ச. கபாலி தெரிவிக்கிறார்.

மணப்பாறையில் சுயமரியாதைக் கூட்டம்.

31-5-29ந்தேதி மணப்பாறை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தின் சார்பாக போடிநாயக்கனூர் முனிசிபல் கவுன்சிலர் ஜனாப் எஸ். பி. மீரா அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. அப்போது ஜனாப் பி. கே. முகம்மதலி அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கண்ணலம்பட்டி பலிஜ மகாநாடு.

தீர்மானங்கள்

30-5-29-ல் கண்ணலப்பட்டியில் கூடிய சுகமஞ்சி பலிஜ நாயுடு மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருமாறு:—

1. புருஷனையிழந்த யாதொரு விதவையும் விவாகமில்லாத அல்லது தாரமிழந்த யாதொரு புருஷனும் விதவா விவாகம் செய்துகொள்ள சம்மதித்தால் புனர் விவாகம் செய்து வைக்க வேண்டியது அவசியமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

2. மனைவியுடன் வாழ்க்கை நடத்தும் யாதொரு புருஷனும் பிள்ளையில்லை என்கிற காரணத்தால் முதல் தாரத்தின் அனுமதியின் மேல் விதவா விவாகம் செய்து கொள்ளலாமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. புருஷனுடன் வாழ்க்கை நடத்தும் எந்தப் பெண்ணையும் எவ்வித முகாந்தரத்தைக் கொண்டும் இன்னொரு புருஷனுக்கு விவாகம் செய்விக்கவோ செய்து கொள்ளவோ அனுமதிக்கக் கூடாதென்றும், பிரஸ்தாப பெண்ணோ அல்லது புருஷனோ இச்சிபத்தனையை மீறி நடத்தல் கூடாது என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. புனர் விவாகம் செய்து கொண்டபின் அவர்களுக்குப் பிறந்த சந்ததிகளுக்கு சொத்துரிமையுண்டு.

5. விதவாவிவாக மூலமாய் வாழ்க்கைப்பட்ட புருஷனுக்கு விரோதமாய் விவாக ரத்து செய்துகொண்டு மறுபடியும் அப்பெண் விவாகம் செய்து கொள்ளவிரும்பினால் அது அங்கீகரிக்கப்படமாட்டாது.

6. அமுலுக்கு வர வேண்டிய விதவா விவாகங்களை பெரியோர்களின் முன்னிலையில் மாங்கல்யதாரணம் செய்து கொள்ள வேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

மேல்கண்ட தீர்மானங்கள் ஷை சமூகத்தலைவர்களில் 100க்கு 97 பேரால் ஏகமனதாய் ஆதரிக்கப்பட்டு இனிது நிறைவேறியது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

செங்கற்பட்டு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

செங்கற்பட்டு ஜில்லா தென் இந்திய நல உரிமைச் (ஜஸ்டிஸ் கட்சி) சங்கத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிகுந்த மெம்பர்கள் பலர் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் எம். கே. செட்டியவர்களின் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள பங்களாவில் கூடி யாலோசித்ததன் பயனாக, தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் ஆதரவில் ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டுவதற்குத் தீர்மானித்தனர். அன்றியும் அவர்கள் சைதாப்பேட்டையில் இலவச கட்டாய ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்து வரும் தாலூகா போர்டு தலைவர் திரு. டி. ஷண்முகம்பிள்ளை அவர்களை வரவேற்புக்கழகத் தலைவராயிருக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இம்மகாநாட்டைத் திருவள்ளூரில் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அம்மகாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்கால வேலைகள்சம்பந்தமாக மிக முக்கியமான பல தீர்மானங்களும், அக்கட்சியின் தலைவர் தேர்தலைக் குறித்தும்விவாதித்து முடிவு செய்யப்படக் கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பெண்ணுக்கு உருவெளித் தோற்றமேது? இது வியப்பே! மேலும் ஒருவன் ஒரு பெண்ணை விரும்புவானேல் உடனே அவன் அவளை அடைய முயல்வானே ஒழியக் காமுற்று வருந்தியிரான். எல்லாம் வல்லவனாகிய இராவணன் சீதையை அடைய முயலாமல் இவ்வாறு வருந்தி யிருந்தனன், என்பது உலக இயற்கைக்கு மாறாக உள்ளது; அத்துடன் அறிஞர் ஒப்புமாறும் இல்லை. பின்னர் கம்பர் கூறுவது அறிஞர் வெறுக்கத்தகுந்தவாறுள்ளது.

இராவணன் தான் காணும் உருவெளித் தோற்றத்தை உண்மையென நம்பி தனது தங்கையை அழைத்து அவள் சீதையை நேரிற் கண்டவளாதலால் அவளிடம் அதுதானா சீதை என்று வினவுகிறானெனவும், சூர்ப்பனகை அது இராமனென்று தன் மன நிலைப்படி கூறினளெனவும், இராவணன் நான் காணும் பெண்ணுருவை நீ ஆணுருவென்றதென்னையென அவள் நீ காண்பது உருவெளித் தோற்றமென்று புகன்றனளெனவும், பின் இராவணன் நீ இராமனைக் கண்டதென்னையென அவள் தன் காமம் மறைத்து என்று இராமன் எனக்குத் தீர்வரும் இன்னல் செய்தான் அந்நாள் முதல் நான் அவனை அச்சத்தால் காண்கிறேன் என்று சொல்லினளெனவும் கம்பர் கூறுகிறார். இக்கதையை ஆராயின் இவர் இராவணனையும் சூர்ப்பனகையையும் இழிவு படுத்தவே இவ்வாறு கதை கட்டியவராவர். எவனாவது தனது தங்கையை யழைத்து இவ்வாறு வினவுவானா? அவள் இவ்வாறு மறுமொழி கூறுவாளா? கம்பர் இவ்வாறு பழகிய கயவர்போலும்! அன்றேல் ஓர் பெண்ணாகிய சூர்ப்பனகையை இழிவு படுத்த இவ்வாறு எழுதுவாரா! இக்கதை உண்மையில் வால்மீகியால் கூறப்பட்டதேல் ஆரியராகிய அவர் வேண்டுமென்று இழிவு படுத்திக் கூறினரென்பது ஆகும். தமிழ் மகனாகிய கம்பர் இவ்வாறு கூறியது அவருடைய சிறுமைக்குடிப் பழக்கத்தையே புலப்படுத்துவதாகும். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது; பன்றி பசித்தால் மலமே உண்ணும். ஆரிய மக்களாகிய பார்ப்பனரை மகிழ்வித்துப் பணம் பெற்று வாழும் அற்ப வாழ்வுக்காகவா கம்பர் இது செய்தல் வேண்டும்?

பின்னர் சூர்ப்பனகை இராவணனைச் சீதைபாற் சென்று தாக்கி வர ஏவினராக அவன் ஓர் சந்திரகாந்த மண்டபத்தை தெய்வத் தச்சனால் இயற்றுவித்து அதிற் போயிருந்து தென்றலால் வாடிக் காற்றைப் பிணித்து அமைச்சரை யழைத்து ஆராய்ந்து சீதையைக் கவர மாரீசனிடம் சென்றனனெனப் பாடுகிறார் கம்பர். இவையனைத்தும் இவருடைய கட்டுக் கதையே என்பதை அறிஞர் உணராதிரார். இனி மேற்செல்லுதும்.

ஐயவினாக்களுக்கு விடை

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

வடார்க்காடு ஜில்லா வெங்களத்தூர் நண்பர் நாராயண ஐயர், "கைகேசிக்குப் பிறக்கும் பிள்ளைக்கே பட்டம் கட்டுவதாக மன்னன் வாக்குறுதியைப் பெற்ற கேகயன் இராமன் காடு சென்றவுடன் அயோத்திக்கு வந்து இன்னது செய்தானென்பது தெரியவில்லை. அல்லது இவனும் வாக்குறுதியை மறந்தானா? அல்லது பார்ப்பனருக்குப் பயந்தவனா? இராமனால் மன்னன் வாக்குறுதியை அறிந்த குடிகளாவது கைகேசியாவது தெரிவித்திருக்கலாமே. கேகயன் வந்து பரதனுக்குப் பட்டம் ஏன் கட்டவில்லை யென்று வசிட்டனைக் கேட்டு வசிட்டன் நான் எவ்வளவு சொல்லியும் குடிகளைக் கொண்டு சொல்லியும் பரதன் அரசை விரும்பவில்லை யென்று பரதன்மேல் பழி சுமத்தி தான் தப்பியிருந்தாலன்றோ அவன் செயல் வஞ்சகம் என்பது நிலைநிற்கும்?" என்கிறார்.

பரதன் கேகய நாட்டிலிருக்கும் போது தந்திரமாக இராமனுக்கு முடி சூட்ட தசரதன், வசிட்டன், சுமந்திரன் இவர்கள் முயன்றனர். தசரதன் இராமனிடம் பரதன் நாட்டிலில்லாத வரையே முடிசூட்டுக்கு ஏற்ற காலம் என்கிறான். இம்முடி சூட்டு தற்செயலாக கைகேசியால்தடையுறுகிறது. அதனால் இராமன் காடேக தசரதன் மடிகிறான். வசிட்டன் பரதனை அழைத்துவர ஏவுகிறான். பரதனை அழைக்கச் சென்ற ஏவலரிடம் இராமன் காடேகியதையாவது தசரதன் இறந்ததையாவது தெரிவித்தல் கூடாதெனக் கண்டிப்பாக ஆணையிட்டு ஏதோ அவசரமாக அழைத்து வர ஏவியதாகக் கூறி அழைத்து வரச் செய்கிறான் வசிட்டன். ஏனெனில், இவர்கள் இராமனுக்கு முடி சூட்டச் சூழ்ந்ததையும் அதன் மேல் நிகழ்ச்சிகளையும் அறிந்தால் கேகயனும் பரதனுடன் வந்து வசிட்டனை தசரதனுடன் சூழ்ந்ததற்காகக் கண்டித்துப் பரதனுக்கு முடிசூட்டுவான். வசிட்டன் எண்ணப்படியே பரதன் மட்டும் வருகிறான். கேகயன் வரவில்லை. உண்மையறியாத பரதன் இராமனுக்கே முடி சூட்ட நினைக்கிறான். இதன் மத்தியில் கேகயன் செய்தியறிந்து வந்தால் என் செய்வது என்பதற்காகவே வசிட்டன் பரதனை அரசேற்க தான் வேண்டிக் கொண்டதோடு நில்லாமல் குடிகளையும் ஏவி வேண்டச் சொல்லுகிறான். பரதன் காடேகி இராமனால் வஞ்சிக்கப் பெற்ற தனக்குரிய நாட்டை இராமனுக்குக் கொடுத்து விடுகிறான். பின் அவன் பாதுகை பெற்று அயோத்திக்கு வருகிறான். ஆதலின் அதுவரை செய்தி யறியாமையால் கேகயன் அயோத்திக்கு வரவில்லை. பின் வந்திருக்கலாம். அவன் வந்த செய்தி இராமாயணத்தில் காணப்பெறவில்லை. பின் வந்து முயன்றாலும் பரதன் தனக்குரிய உரிமையை இராமனுக்குக் கொடுத்துவிட்டபடியால் பரதன் அரசேற்க இசையவே இசையான். இஃதிவ்வாறாக நமது நண்பர் நாராயண ஐயர் வசிட்டன் மேலுள்ள பற்றால் கேகயன் வந்து வசிட்டனை வினவி அவன்மறுமொழி கூறியிருந்தாலல்லவோ வஞ்சகனாவான் என்கின்றார். திருடனொருவன் திருட்டுக் கொடுப்பவன் காணாமல் பொருளைத் திருடுகிறான். திருட்டுக் கொடுத்தவன் திருடனிடம் ஏன் என் பொருளைத் திருடினாய்? என்று வினவாதவரை திருடன்செய்தது திருட்டன்றோ? தென்னை மரத்தில் தேங்காய் திருட ஏறிய திருடனைச் சொந்தக்காரன் காணாதவரை அவன் செயல் திருட்டாகாதோ? சொந்தக்காரன் கண்டு வினவ திருடன் நான் புல் பறிக்க ஏறுகிறேன் என்று வேறு பொருந்தாப் புகல் காட்டினாலும் சொந்தக்காரன் உண்மையறியாதிருப்பானோ? அதுபோலவே பின்னர் கேகயன் வந்திருந்தாலும் வசிட்டனை அவனது படிற்றுரைகளால் நம்பாது வஞ்சகனெனவே உணர்வான். இதனை நண்பர் சிந்திப்பாராக.

"கைகேசி சம்பரப் போரில் வாங்கிய இரண்டு வரங்கள் தனக்குப்பிறக்கும் பிள்ளைக்கே நாடு பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே கேட்டாள் என்கிறீர்கள்" என இவர் எழுதுகிறார்.

இதனை இவர்யாண்டுக் கண்டனரோ? முன் கேகயனைப் பற்றி வால்மீகி எழுதாததை எடுத்துக் கொண்டு சிலவினாவினார். இப்போது நாம் யாண்டும் எழுதாத குறிப்பை எடுத்துக் கொண்டு சில வினாவுகிறார். கைகேசி உண்மை யறியாது இராமனுக்கே முடிசூட்டு உரிய தென்றெண்ணியிருந்தவள் இராமனிடம்அன்புடையவள் அவ்விழாவை அறிந்து மகிழ்கிறாள். கூனியால் கலைக்கப்பட்டபோது தன்னல உணர்ச்சி மிக தன் மகனாகிய பரதனுக்கு நாடு பெற வேண்டும், அது நிலைக்க இராமனைக் காடனுப்பவேண்டு மென்ற எண்ணம் உண்டாகி தான் முன் பெற்றுவைத்த வரங்களை இதற்குப் பயன் படுத்துகிறாள். இது இயல்பே. இதில் ஐயம் விளைய ஏது என்னையோ?

"ஒரு சமயம் பரதன் வந்தவுடன் குடிகள் பரதனை இகழ்ந்திருக்கக் கூடும். பரதன் உண்மையைச்சொல்லி அவர்களும் பின்வர இவ்விடம் வந்திருக்கக்கூடுமென்றெண்ணி உன்னைக் குடிகள் துரத்திவிட்டார்களா என்று இராமன் கேட்டானே தவிர வேறன்று என்பதுதான் எமது உறுதி" என்கிறார் நண்பர்.

காமாலைக் கண்ணருக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்தான். இவர்களுக்கு கருப்பு சிவப்பு, வெண்மை முதலியநிறங்களேது? குடிகளும் பரதனும் உண்மைதெரிந்த உடன் வருவதற்கும் துரத்துவதற்கும் வேறுபாடு நண்பர் உணர்வாராக. நண்பர் கூறுவது உடன்வருகை. உடன்வருகை சமாதானத்தால் விளைவது. துரத்துதல் பகைமையால் விளைவது. இதனால் நண்பர் உறுதி உறுதியற்றுப்போகின்றது.

"புரோகிதர் வசமாக்குவதற்காக ஜாபாலி இராமனை மன்னிப்புக்கேட்டதாகக்கூறுவானாகில் பரதனைப்பட்டம் கட்டிக்கொள்ள வசிட்டன் வேண்டுகையில் வசிட்டனை பரதன் நிந்தித்ததாகக் கூறமாட்டான். இது போன்றவைகளை எழுதுவதென்றால் நாமும் ஒரு கட்டுரைதான் எழுதவேண்டும்" என்று எழுதுகிறார் நண்பர் நாராயண ஐயர்.

இக்குறிப்பு விளங்குமாறில்லை இதனைநண்பர் எது கருதி எழுதினாரோ? புரோகிதப்பற்றுக்கொண்டோ? இராமனிடம் ஜாபாலி முனிவன் பிதரர்களுக்கு சிரார்த்தம் கொடுப்பதை இகழ்ந்துரைக்க இராமன் யாதொரு காரணமும் கூறாமல் அவனைக் கண்டிக்கிறான். அதனால் ஜாபாலி முனிவன் தான் சிரார்த்தத்தை இகழ்ந்தது தவறென மன்னிப்புக் கேட்கிறான். இதற்கும் பரதன் வசிட்டனைக் கண்டித்ததற்கும் யாது சம்பந்தம்? இது நண்பர் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முயல்வதையே ஒக்கும்.

இனி சாதி பேதத்தைப்பற்றி அவர் குறிப்பது வியப்பாகவே உள்ளது. எருமை, பசு ஆகியவைகள் மாடென்ற பொதுப் பெயரால் அழைக்கப் பெற்றாலும் வேறு வேறு சாதியே. ஏனெனில் எருமை பசுவைப் பெறுவதில்லை. பசு எருமையைப் பெறுவதில்லை. அதைப் போல மனிதர்களுக்குள் வேறுபாடு காணாமையால் மனிதர்கள் அனைவரும் ஒரு சாதியே என்றோம். இதனையே கபிவர் கூறுகின்றனர்.

நண்பர் மனிதரில் மகன் தாயைக் கூடினால் மனிதனையே பெறுகிறான். ஆதலின் மகனென்றும் தாயென்றும் வேறுபாடுஏன்? என்று வினவுகிறார்.

இச்செயல் மிருகங்களிடம் பெரிதும் நிகழ்வதையும் மக்களிடையும் சிறுபான்மை நிகழ்வதையும் காண்கின்றோம். தாயென்றும் மகனென்றும் பகுத்தறிவின்றிச் சேர்வார்க்கு அவ்வேறுபாடு இல்லைதான். அவர்கள் மக்களல்லர்; மாக்களே. பகுத்தறிவுடைய மக்களுக்கு ஒழுக்கமுறைபற்றி தாயென்றும் பிள்ளையென்றும் பகுத்தறியும் அறிவுவிளக்கும். இதனால் மக்களனைவரும் ஒரே சாதியினர் என்பதற்குத் தடையென்ன உள்ளது?

கபிலர் சொன்னது நியாயமாகு மேல் உலகத்தார் ஏன் கொள்ள வில்லை என்றும் கபிலர் வள்ளுவரு டன் பிறந்தவரா என்றும் நண்பர் வினவினர்.

ஆரியருடையசூழ்ச்சியின் வன்மை யால்ஆரியர் செய்துவருகிற சுயநலப் பிரசாரத்தால் பொதுவாகக் கற்றறி வில்லா மக்களனைவரும் அதனைஎலா ராயினர். இப்போது மக்கள் கல் வியறிவு பெறப்பெற உண்மை யுணர்ந்து சாதி வேறுபாட் டை ஒழிக்கவும், ஒரு குலத்துக் கொரு நீதி நூலை எரிக்கவும், அனை வரும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனப் பறைசாற்றி ஒற்றுமைபட அனைவரையும் அழைக்கவும், பலரும் முன்னேறவேண்டும் முயற்சிகள் செய்யவும் முன் வந்து முயல்வாரா யினர். தாயென்றும்பிள்ளையென்றும் பகுத்தறியும் அறிவே நாகரிகமாம். நாகரிகம் பெறாத சில நாட்டினர் இன்னும் தகப்பனுடன் பிறந்தான் மகளாகிய தங்கையை மணப்பதைக் காண்கின்றோம். இதனை நண்பர் ஆராய்ந்து தெளிவாராக. கபிலர் திரு வள்ளுவருடன் பிறந்தவரா யிருந்தா லென்ன? வேறு கபிலரா யிருந்தா லென்ன? அவர் கூறுவது எக்காலத் திலும் உண்மையாகவே விளங்குகின் றது.

"தாங்கள் புகழும் நாயனார் குற ளுக்கு திருவள்ளுவ மாலையில் இரா மாயண பாரதங்களை உவமை கூறப் பட்டுள்ளதே. ஆகையால் குறளும் ஆபாசம் நிறைந்த நூலா? என்று வினவுகிறார் நண்பர்.

திருவள்ளுவமாலையில்இராமாயண பாரதங்களை திருக்குறளுக்கு உவமை கூறியிருப்பது உண்மையே. அப்பா டலைப் பாடியவர் திருவள்ளுவரன்று திருவள்ளுவர் தமது நூலுக்கு இணையாக இவைகளைக் கூறியிருந்தா லன்றோ நாம் அப்பாடலைப்பற்றிச்சிந் திக்கவேண்டும்? அப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற பெய ரால் யாரோ ஒருவரால் பாடப்பெற் றது. அதனால் திருக்குறளும் ஆபா சம் நிறைந்த நூலா என்பது அறிஞர் வினவாகாது. நண்பர் இதனை வின வியது பிறர் கூற்றுகப்போலும்! அப்பாடலே பின் வருவது

"எப்பொருளும் யாரும் இயல்பின்
அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்
முப்பாற்குப் பாரதம் சீராம
கதை மனுப் பண்டைமறை
நேர்வனமற்றில்லை நிகர்"

திருவள்ளுவமாலை என்பது வள்ளு வர் காலத்தே தோன்றாது அவ்வக் காலத்தில் பலரால் பாடப் பெற் றதோ அன்றி பிற்காலத்தில் யாரோ ஒருவராலேயே பாடப்பெற்றதோ தெரியவில்லை. பிற்காலத்தில் யாரோ ஒருவராலேயே ஐம்பத்து மூன்று பாடல்களும் பாடப்பெற்றன என்ப தே பேரறிஞராகிய ஆராய்ச்சியாளர் முடிவு. நிற்க, இப்பாடலில் முப்பா லெனப் பெறும் திருக்குறளுக்கு நிக ராக பாரதம், சீராம கதை, மனு, வேதம் இவை கூறப்படுகின்றன. பௌண்டரீக யாகம், அசுவமேத யாகம் கூறும் ஆபாசநூலாகிய வேதத்தை ஒப்புயர்வற்ற நீதி நூலாகிய திருக்குறளுடன் உவமை கூறவேண்டியதுபொருத்தமே! உலக த்துக்கெல்லாம் பொது நீதி கூறும் திருக்குறளுக்கு உவமையாக ஒரு குலத்துக்கொரு நீதி கூறும் மனு நூலைக் கூறுவதும் அதிலும் அதிகப் பொருத்தமே! சீராம கதை என்ன அழகிலிருக்கிற தென்பதை நாம் இப்போது ஆராய்ந்து மறைந்து கிட ந்த உண்மைகளை வெளிப்படுத்துவ தால் தெளிவாகிறது. பாரத ஆராய் ச்சியும் விரைவில் வெளிவரும். ஆக லின் இந்நான்கு நூல்களும் திருக் குறளுக்கு ஏற்ற உவமைகளா என் பதை நண்பர் சிந்தித்து வெறிய னொருவன் 'நானே அரசன்' என் பது போலும் இச்செய்யுளின் பொருள் என்பதைத் தெரிந்துக் கொள்ளும்படி வேண்டுகிறோம். நண் பரை நாம் எழுதும் கட்டுரைகளைக் கவனித்துப் படித்து ஆராய்ந்து பின் ஐயம் நிகழ்ந்தால் வினவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

எந்த ஆதாரத்தைக் கொண்டு? சர். ராஜா அண்ணாமலை செட்டியாரால் கட்டப்பட்ட சிதம்பரம் கலாசாலை யில் சாஸ்திர வகுப்பில்சைவப்பெரி யார் பிள்ளைகளையும் சேர்த்துக் கொ ள்ளுவதில்லையே அதற்கு எந்த ஆதா ரம்? திருப்பதிக் கடவுள் பார்ப்பானு க்கு மட்டுமாபங்காளி? அவர் பணம் எல்லாருக்கும் சொந்த மில்லையா? அந்தப் பள்ளியிலும் மற்றவருணத் தாருக்கு இலக்கணமும் சொல்லித் தரமாட்டேன் என்கிறார்களே. இது எந்த ஆதாரத்தைக் கொண்டு? எல் லாரிடமும் பணம் வாங்கி குருகுல வித்தியாசாலை ஏற்படுத்தினார்களே அதில் எங்கள் பிள்ளைகள் சூத்திரப் பிள்ளைகளுடனிருந்து ஒருவேளை ஆகாரமுண்டால் நான் ஒருவாரம்பட் டினிக்கிடப்பேன் என்று ஆச்சாரி என்னும் பார்ப்பான் சொன்னாரே அது எந்த ஆதாரத்தைக் கொண்டு? இப்பொழுது வழக்கத்திலுள்ள சரி யைகிரியாவிதிகளும் அவற்றிற்கிணங் கச் செய்யப்படும் முறைகளும் அம் முறைபற்றிச் செய்யுங்கால் சொல் லும் மந்திரங்களும் தமிழிலேயே அமைந்துக் கொள்ளவேண்டு மென்று சைவப் பெரியார் சபையில் சபைத் தலைவர் சுவாமி வேதாசலம் கொண்டுவந்த தீர்மானத்தை அங் கொரு பார்ப்பான் தமிழில் மொழி பெயர்க்க முடியாதென்றும் கூடா தென்றும் மறுப்பதற்கு ஆதார மான காரணமென்ன? இத்தனை காரணங்களோடு இன்னும் லௌகிக வைதிகங்களில் நடக்கும் உலகவாழ்க் கையின் ஒவ்வொரு அம்சத்திலும் குரூரமான கொடுங்கோன்மை நடப் பதினால் அந்த உலகத்தாருக்கு எடு த்துச்சொல்லி எல்லாரும் சேர்ந்து அதற்கொரு பரிகாரம் தேடவேண்டு மென்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுடன் நீங்களும் சேர்ந்து அதற்கொரு வழி கண்டு பிடிக்காமல் பார்ப்பனர்களைக் குற்றம் சொல்லுவது சகிக்க முடிய வில்லை. ஆனதால் அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளை ஆத ரிக்காதீர்களென்று பார்ப்பானின் தலைவியான திரு. கலியாண சுந்தர முதலியாரின் தூண்டுதலால் கொ ண்டுவரப்பட்ட தீர்மானத்தை பண் டிதர்கள் கூட ஆமோதிக்கலாமா? அது நன்றியுடைய குணத்திற்கு நியாயமல்லவே எப்படியெனில் தமிழ்ப் பண்டிதர்களுக்கு 100க்கு மேல் சம்பளம் கொடுக்கப் படாதென்று சர்வகலாசாலை கமிஷ னின் அறிக்கையைத் "திராவிடன்" பத்திரிகைதானே இரண்டு மூன்று வியாசத்தால் கண்டித்தது. இதைப் பற்றி எந்தப் பார்ப்பனர் பத்திரிகை யாவது ஏதாவது சொல்லிற்று? திரா விடனை விட்டால் உங்களுக்காகப் பரிந்து பேசும் பத்திரிகைகள் தான் எவை? திருக்கோயில்களிலும் தேர் களிலும் இப்பொழுது உள்ள இழி வான சிற்பங்களை ஒழித்தல் என் னும் தீர்மானம் சைவப் பெரியார்கள் சபையில் தீர்மானம் பண்ணப் புகப் பட்ட அறிவின் வாயிற்படியைத் திறந்த பத்திரிகை தான் எது? புராணங்களிலும் திருநாள்களிலு முள்ள ஆபாசங்களையும் எடுத்து விடும் புத்தியும் ஆலோசனையும் சைவப் பெரியார் மகாநாட்டிற்கு வருவதற்குள் சுயமரியாதைக்காரர் கள் பத்திரிகைகளைத் தள்ளி விடாதீர்கள். அந்தப் பத்திரி கைகளின் உலகப் போக்கும் அவற் றின் உண்மை தத்துவமும் உங்கள் புத்தியை விசாலப்படுத்தி அறிவைத் தெளிவடையச் செய்யும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அவை நீங்கள் அறியாமலே உங்கள் உள்சித்தத்தில்சேர்ந்துஉங்கள்விவேக த்தை விசாலப்படுத்திக் கொண்டி ருக்கின்றன. சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவது தொல்காப்பியத்தி லிருந்தாலும் தூக்கத்திலிருக்கும் சைவப் பெரியார்களை யெல்லாம் அவர்கள் ஆண்டவன் தூக்கத்திலி ருந்து சுயமரியாதைக்காரர்கள் மூல மாய் எழுப்பிவிடுகிறார் என்பதை சைவக் கூட்டத்துத் தலைவரே சொல் லுகிறார் ஆனதால் தூக்கத்திலிருக் கும் தங்களை எழுப்ப அந்த பத்தி ரிகைகள் வேண்டும். அவற்றைப் படித்தால் தான் தூக்கத்திலிருக்கும் நீங்கள் விழித்துக் கொள்ளுவீர்கள்.

எப்படி விழித்தாலும் திரு. கலி யாணசுந்தர முதலியாரைப்போல் விழித்துக்கொள்ளாதீர்கள். அது பாவமும் கொடுமையுமாகும். வேத சுருதிகளில் மதத்தின் தத்துவங்க ளிருக்கின்றன வென்பது பண்டி தர்களுக்குத்தெரியும். அதையோ பார்ப்பனன் எந்தகலாசாலையிலும் மற் றவருணத்தவர்கள் படிப்பதற்கு ஒத் துக்கொள்ள மாட்டேன் என்கிறான். அதுவே வழக்கமாகவே நடந்துவரு கிறது. புராணக் கதைகளையே படி த்து எங்களுக்கு அடிமையாய் எல் லா தானதருமங்களும் எங்களுக்கே கொடுத்துவிடுங்கள் என்கிற பழைய பல்லவியேபாடுகிறார்கள். அதைநமது பண்டிதர்களே நமக்கெடுத்துச் சொன் னால் நமக்கு நம்பிக்கை வருமென்று திரு.கலியாணசுந்தரமுதலியார் மூல மாக பார்ப்பனர்கள் நமக்குள்ளேபிர சாரம் செய்கிறார்கள். அந்த ஒப்பந்த ப்படிதான் திரு. கலியாணசுந்தர முதலியார் காவியம்படியுங்கள், ராமா யணத்தை மறக்காதீர்கள், புராணத் தில் தான் இயற்கை யழகு பொலி ந்து கிடக்கிறது, ஓவியத்தை உற்றுப் பாருங்கள், இயற்கை அழகைக்கண்டு ஆனந்தப்படுங்கள் என்கிறார். திரு. கலியாணசுந்தர முதலியாரின் இய ற்கையழகை அடுத்தடுத்து அம்பட் டன் கத்தி அழித்துவிடுகிறதே. இவ ருடைய அச்சாபீஸ் இயற்கையா? அடி வடிக்கும் புத்தகமியற்கையா? இவர் இயற்கையழகைப் பார்க்க வேண்டு மானால் பிரசங்க மேடைக்கு நிர் வாணமாக வல்லவோ போக வேண்டும்? சுயமரியாதைத் தலை வர்கள் பேரிலுள்ள பொறாமையும் பார்ப்பனனின் பழைய சிநேகமும் அதன் லாப ஆசையும் கொண்டு நடக்கும் திரு. கலியாண சுந்தர முத லியாரின் ஆலோசனையும் அவர் பிர சங்கமும் சைவத்திற்கு யாதொரு நன்மையும் செய்யாது. சைவத்தைச் சீர்திருத்த வந்த சைவப் பெரியாரின் கூட்டத்தில் பார்ப்பானைக் குற்றம் சொல்லுகிறவர்களைத் தள்ளிவிடுங் கள் என்று தீர்மானம் செய்வ தற்கு திரு. கலியாணசுந்தர முதலி யார் ஏற்பாடல்லவா காரணம்? பள்ளிகட்ட இருபது லட்சம் வேண் டுமென்ற வருணாசிரமதர்ம மகாநாட் டுத் தீர்மானப்படி ஒரு லட்சமும் 50 ஏக்கர் நிலமும் வந்துவிட்டதென்றும் கேள்விப்படுகிறோம். சைவ மகா நாட்டில்சுயமரியாதைக்காரர்களுடை பத்திரிகைகளுக்கு உதவி செய்யாதீர் கள் என்று தீர்மானம்செய்திருக்கிறார் கள். இதனால் சைவத்தைச் சீர்திருத் தும் சைவப் பண்டிதர்களின் திற மையும் புத்தி விசாலத்தையும் இன் னொரு தரம் அவர்களே கவனித்துப் பார்க்கட்டும்.

பொள்ளாச்சியில் சுயமரியாதைச் சங்கம்.

பொள்ளாச்சியில் 24-5-29ந்தேதி திரு. கே. குப்புசாமி அவர்கள் தலை மையில் ஒரு கூட்டங்கூடி சுயமரியா தைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு தலைவர், காரியதரிசி, நிர்வாக உறுப் பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று திரு. ராஜகோபாலன் அறி விக்கிறார்.

புத்தகம் 1-க்கு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

Mysteries of Wedded Life.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி. சென்னை.

விலை ரூ: 2—0—0

ஏரல் விஸ்வ குல பரிபாலன சங்கம்

திருநெல்வேலி ஜில்லா ஏரல் விஸ்வகுல பரிபாலன சங்க ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போது திருவாளர்கள் ம. நாகலிங்க ஆச்சாரி, சிவன்பெருமாள் ஆச்சாரி, மப. முத்துசாமி ஆச்சாரிமுதலியவர்கள் குலமுன்னேற்ற விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேற்படி சங்க நிர்வாக அங்கத்தினர் தேர்தல் நடைபெற்றவுடன் சபை இனிது முடிந்தது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதைத் திருமணம்

16-6-29 ந்தேதி மாயவரம் தெய்வராயர் குமாரர் திரு. டி, பக்கிரிசாமிக்கும் மாததூர் அய்யாவு அவர்கள் குமாரத்தி திருவாளாசெல்வி குஞ்சம்மாளுக்கும் மாயவரத்தில் திருமணம் நடைபெறும். அன்று மாலையில் சுயமரியாதையின் அவசியம்பற்றி பல பெரியார்கள் உபந்நியசிப்பார்கள்.

முந்துங்கள்.

விலை ரூ. 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்களின் விவரம்

14 காரட் ரோல்ட்கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை ஷரட்டு பொத்தான்கள் செட் 12; ஷை சல்லி வைழத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செணட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 2 12-0.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால்பெட்டி 119, மதராஸ்.

பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளிவரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன்பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 - 12 - 0.

விலாசம்:—
"பகுத்தறிவு" காரியாலயம்,
14, மவுண்ட்ரோட், சென்னை.

பொருள் செய்வகை.

1 உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2 வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3 வியாபாரத்தில் எந்தெந்தக்காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4 வியாபாரத்தில் சித்தி அடையும் விதமென்ன?
6 புக் கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6 துணிந்து செய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் எவை?
7 தினுசுகள் விலை ஏறுவதும், இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8 கடை வைக்குமிடம் எது?
9 முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10 நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவை என்றும் உங்களுக்குத் தெரியுமா?

இந்தமாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன்விலை ரூபாய் ஒன்றுதான்.

விலாசம்:— தேவி ஆஸ்ரமம்,
திரௌபதை அம்மன்கோவில் வீதி, புதுச்சேரி.

வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல

சுயமரியாதைத் தொண்டன்.

(வாரப்பதிப்பு)

வருட சந்தா 3—0—0
வெளிநாட்டுக்கு 4—0—0

இதன் ஆசிரியர்,
எஸ். சாமிநாதன்

விலாசம்:—
மானேஜர்,
சுயமரியாதைத் தொண்டன்.
(எப்) பள்ளிபாளையம், (Via) ஈரோடு.

கால்டஜன், ரூபாய் ஒன்று தான்.

காப்பிக்குப்பதில்

றேப்பிப் பவுடர்

அதே மணம், அதே ருசி; அதே பக்குவம் ஆனால் பித்தம், வெட்டை, நீர்க்கடுப்பு, பலஹீனம் இவைகளை மாற்றும். தாதுபுஷ்டி உண்டாக்கும்

அயல் நாட்டுக்கு முன்பணம்.
வி. பி. சார்ஜ் வேறு.

¼ டஜன் டின் ரூ 1— 0— 0
½ டஜன் டின் ரூ. 1—12 0

எஸ். வி. ராஜப்பா,
றேப்பி பாக்டரி, பழநி.

முன்னேற்றம்

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்:-
வே. சி. நாராயணசாமி,
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விவரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதராஸ்.

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர் ! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர் !! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளம்பருவத்தை

அடையவேண்டுமானல்

சி. எம். சாமி மகா வீரிய

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள். தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள்.

. . தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் தேக பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனுக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணங்களைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

1. தங்கள் மகாவீரிய தங்கபஸ்பத்தைப்பற்றித் தெரிந்தமட்டில் இதற்கு நிகரான மருந்து கிடையாது என்பதை மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறேன். தாங்கள் நீடூழியாய் இருக்க வேண்டியது. பெரும்பான்மையான ஜனங்கள் தங்கள் மருந்திஞல் பிழைத்து ஜீவிப்பார்கள்.

10-1-29. ஸ்ரீமத். துரைப்பாண்டிய வீரணனம்பலம்,
இராமனுதபுரம்.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

. ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைந்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

பினங்க முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்தியாசிரியர்

சி. மலயப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி. எஸ். ஐ. ஆர்.

கவனியுங்கள் ! நல்ல லாபம் ! !

PHOTO HAND CAMERA

ரொப்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.



நண்பர்களே ! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூருகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு 3×2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2-15-0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்.

குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

ஞானசூரியன் 2-ம் பதிப்பு	...	0—8—0
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்		0—4—0
சுயமரியாதைப் பாடல்கள்.	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு	...	0—2—0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
14, மவுண்ரோட், மதராஸ்.

இங்கிலீஷ்

பேசவும் வாசிக்கவும் எழுதவும்

தெரியுமா ?

1000 கணக்கான மாணவர்கள், குமாஸ்தாக்கள், வியாபாரிகள், ஆபீஸ் சிப்பந்திகள் திருப்தியடைந்த உலகப் பிரசித்தி பெற்ற

ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்.

தபால் மூலம் 30 நாளைக் நள் கற்றுக்கொண்டு சர்க்காரால் அங்கிகரிக்கப்பட்ட ஜூனியர், சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது வக்கீல், இஞ்சினீயர், டாக்டர் வேலைகளுக்குப் படிக்கலாம். ரூபாய் 5-க்கு முழு ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸைப் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. சார்ஜ் வேறு. ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள். முந்துங்கள்

டைரக்டர்,

கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்

நாசரேத் (தென் இந்தியா)

மகா மன்மத சிந்தாமணி லேகியம்:

அபாரமான தாது புஷ்டியும், நீடித்த போக சக்தியும், இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும், பரமானந்த சுறுசுறுப்பும், தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை நெ. 2. லேகியம் டின் 1 க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனு பஜார், மதராஸ்.

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.